விலை : 20.00
பக்கங்கள் : முப்பத்து இரண்டு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 13 சனிக்கிழமை (29.10.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 315

# காணாமல்போனோர் விவகாரம்;

# கடற்படையினருக்கு தொடர்பு!

## விசாரணையில் பல அதிர்ச்சித் தகவல்கள்

(கொழும்பு)

கடந்த 2008ஆம் ஆண்டு கொழும்பு கொட்டாஞ்சேனையில் இருந்து வெல்லம்பிட்டி நோக்கி தமது வானில் பயணிக்கும் போது கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட இரு தமிழர்கள் தொடர்பிலான விசாரணையில் கடற்படைத்தரப்பினருக்கு தொடர்பிருப்பதாக அதிர்ச்சித் தகவல்கள் பல வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

இவ்வாறு கடத்தப்பட்டவர்களின் தொலைபேசியை மையப்படுத்தி முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளிலேயே இந்த அதிர்ச்சித் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளுக்கு பொறுப்பான சிறப்பு விசாரணை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் நிஸாந்த சில்வா கொழும்பு மேலதிக நீதிவான் நிஸாந்த பீரிஸுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் நீதிவானுக்கு சிறப்பு விசாரணை அறிக்கை ஒன்றும் சமர்பிக்கப்பட்டுள்ள நிலையில், கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட இரு தமிழர்களில் ஒருவரான கொழும்பு மாநகர சபை ஊழியர் இரத்னசாமி பரமானந்தனின் கையடக்கத் தொலைபேசியில் கடற்படை தளபதி வசந்தவின் பெயரில் பதிவு செய்யப்பட்ட சிம் அட்டை ஒன்றும்

32 ஆம் பக்கம் பார்க்க....

அனைவருக்கும்
இனிய
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்

- வலம்புரிக் குடும்பம்

## ஐரோ.ஒன்றிய குழு இலங்கை வருகை

(கொழும்பு)

இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்குவது தொடர்பில் ஆராயவதற்காக ஐரோப்பிய ஒன்றியத்தின் குழுவொன்று இலங்கை வரவுள்ளது.

இந்த குழு நாளைமறுதினம் 31 ஆம் திகதி இலங்கை வரவுள்ளதுடன், நவம்பர் 3ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருந்து ஜீ.எஸ்.பி. வரிச்சலுகையை வழங்குவது தொடர்பில் ஆராய்ச்சியை மேற்கொள்ளவுள்ளது. இலங்கையின் அரசியல்

32 ஆம் பக்கம் பார்க்க....

## விவசாய நிலங்களை ஒப்படைக்க பணிப்பு

(மன்னார்)

கடற்படையினரால் பயன்படுத்தப்பட்டு வரும் மன்னார் முசலிப் பிரதேச செயலகப் பிரிவின் கீழ் உள்ள விவசாய நிலங்களை மீள ஒப்படைக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி பணிப்புரை விடுத்துள்ளார்.

முசலிப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட பாலைக்குழி மற்றும் மறிச்சுக்கட்டி பிரதேசங்களில், பூர்வீகமாக வாழ்ந்த விவசாயிகள் 1990

31 ஆம் பக்கம் பார்க்க....

# எம் மக்களுக்கான வெளிச்சம் நல்லாட்சியில் தென்படுகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் தீபாவளி வாழ்த்து



31 ஆம் பக்கம் பார்க்க....

## ஜி.கே.வாசன் கடும் கண்டனம்

(சென்னை)

யாழ்ப்பாணத்தில் பல்கலைக் கழக மாணவர்கள் இருவர் உயிரிழக்கக் காரணமாகவிருந்த சம்பவத்திற்கு த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த இரண்டு தமிழ் மாணவர்கள் பொலிஸாரால் கொலை செய்யப்பட்டுள்ளமை மிகவும் கண்டனத்

32 ஆம் பக்கம் பார்க்க....

# மகேந்திரன் வெளிநாடு சென்றாலும் குற்றவாளியாயின் தண்டிக்கப்படுவார்

## அமைச்சர் தயாசிறி ஜயசேகர கருத்து

(கொழும்பு)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தவறு இழைத்திருப்பாராயின் சட்டத்திற்கு முன் நிறுத்தப்பட்டு அவருக்கான தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும் என்ற நிலைப்பாட்டிலேயே அரசாங்கம் இருக்கின்றது என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

திருடர்களைக் காப்பாற்றுவதற்கான அவசியம் நல்லாட்சி அரசாங்கத்திற்கு ஒருபோதும் இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் தயாசிறி ஜயசேகர நேற்று கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு விஜயம் மேற்கொண்டு வழிபாடுகளிலும் ஈடுபட்டார். இந்த விஜயத்தின்போது மல்வத்துப்பீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரை சந்தித்து ஆசிபெற்றுக் கொண்டார்.

நாங்கள் ஒருபோதும் திருடர்களுக்கு ஒத்துழைக்க மாட்டோம். மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர்

31 ஆம் பக்கம் பார்க்க....

# பங்குச்சந்தை மீதான நம்பிக்கையில் வீழ்ச்சி!

## பொருளாதாரத்திற்கு பாரிய சவால் என அமைச்சர் சுசில் தெரிவிப்பு

(கொழும்பு)

திறைசேரி முறிகள் விவகாரத்தால் ஒட்டுமொத்த பங்குச்சந்தை மீதான நம்பிக்கையில் வீழ்ச்சி ஏற்

31 ஆம் பக்கம் பார்க்க....



## பிரதமர் ரணில், அர்ஜுன் குறித்து மக்களே தீர்மானிக்க வேண்டும்

### கொள்ளையர்கள் என பொது எதிரணி சாடல்

(கொழும்பு)

திருடர் பட்டம் சூட்டப்பட்டுள்ள தங்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் இதுவரை நிரூபிக்கப்படாதிருக்கும நிலையில் நல்லாட்சி முத்திரையை பதித்துக்கொண்டு மைத்திரி-ரணில் தலைமையிலான தேசிய அரசாங்கம் பகல் கொள்ளையிட்டு வருவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

கோப் குழுவின் அறிக்கை நாடாளு

31 ஆம் பக்கம் பார்க்க....




சமாதானத்தை வலியுறுத்தி யாத்திரை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள ஜப்பானிய பௌத்த துறவிகளும் இந்தியாவின் காந்தி அமைப்பினரும் (அஹிம்சா) நேற்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு விஜயம் செய்து அண்மையில் பொலிஸாரல் படுகொலை செய்யப்பட்ட இரு மாணவர்களின் ஆத்மா சாந்தி வேண்டி பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.

## இரு சடலங்கள் யாழில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் இடம்பெற்ற இரு வெவ்வேறு சம்பவங்களில் இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

சுன்னாகம் ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான மயில்வாகனம்

31 ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

இலங்கையின் புகழ் பூத்த, முன்னணி ஆங்கில மொழி பயிற்சிக் கல்லூரியில்



புதிய பாடநெறிகள் ஆரம்பமாகின்றன

இந்த வருடம் A/L பரீட்சை எழுதிய மற்றும் 16 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்குமான ஆங்கில டிப்ளோமா பாடநெறி

**12.11.2016 மதியம் 12.30 மணி**

(சனி/ஞாயிறு தினங்களில் மதியம் 12.30 - 3.00 மணி வரை

[ஆங்கில பாடநெறியில் இணையும் மாணவர்களுக்கு 20% கட்டண சலுகை வழங்கப்படும்]

**சிங்கள பாடநெறி, கணனி பாடநெறி**

ஆரம்பம்: 12.11.2016 மதியம் 1.00 மணி

**E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT**

இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளிஅம்மன் கோவில் அருகில் )

**Tel : 0212217106 / 0770610271
0773400418 / 0774924166**

(சி-6294)


## அறிவியலுக்கு இன்று அகவை அறுபது...



### திரு. நடராசா விஜயகுமார் (VK சேர்)

விஞ்ஞானம் போதித்த விற்பன்னன்
என்றென்றும் எங்கள் இதயம் விட்டகலா ஏந்தல்
கடமை, கண்ணியம் கல்வியில்
மேம்பாடு நாம் அடைய வேண்டி என்றும் உழைத்த
எங்கள் ஆசானுக்கு இன்று
அகவை அறுபது...

அவருடைய தலையாய பணிக்கு தலை தாழ்த்தி வணங்கி வாழ்த்திப் பணிகின்றேன்.

Best Wishes

என்றும் உங்கள் மாணவன்...
பரஞ்சோதி பரணீதரன்
(விஞ்ஞான ஆசிரியர்)

(6462)

# மரண அறிவித்தல்



## வீரசிங்கம் கந்தையா

*யாழ்.வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் கந்தையா அவர்கள் நேற்று முன்தினம் (27.10.2016) வியாழக்கிழமை காலமானார்.*

அன்னார் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம்- மீனாட்சி தம்பதிகளின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான நாகநாதி- சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகனும், தெய்வானைப்பிள்ளை அவர்களின் பாசமிகு கணவரும், தர்மலோஜினி (வல்வெட்டி), நாகேந்திரம் (பிரான்ஸ்), நாகேஸ்வரி ( கனடா), ஈஸ்வரன் (பிரான்ஸ்), ரவிந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற செல்வராசா, ராஜமலர், சந்திரலிங்கம், செல்வகுமாரி, ரஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும், காலஞ்சென்ற அன்னம்மா, காலஞ்சென்ற சின்னத்தங்கம், காலஞ்சென்ற கதிரிப்பிள்ளை, நல்லம்மா, காலஞ்சென்ற வைத்திலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், ராசு, ராசாத்தி, ராணி, தங்கா, மணி, இந்திரா, பஞ்சலிங்கம், சோதிலிங்கம், தயாழினி, தியாகுலிங்கம், பாக்கியலிங்கம் ஆகியோரின் அன்பு மாமாவும், செல்வன், ஜீவன் ஆகியோரின் பாசமிகு பெரியதந்தையாரும், பத்மலோஜினி, ஜெயரூபன், பத்மரஞ்சன், நிமலினி, துஷ்யந்தினி, ஹரிகரன், வாசுகி அருண், பிரசாந், கஸ்தூரி, பிரவீன், மனோஜா, அனோஜன், ஆகாஷ், அலெக்ஸ், அனெய்ஸ், அதிரியன், அக்ஷயா ஆகியோரின் அன்புப் பேரனும், விஷ்ணு சோபன், கீர்த்தனா, கெவின், அஜய், அனோஷ், அக்ஷ்சன் ஆகியோரின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நாளை (30.10.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வல்வெட்டித்துறை ஊரணி இந்து மயானத்தில் தகனம் செய்யப் படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**பொங்கர் வளவு
வல்வெட்டி,
வல்வெட்டித்துறை.**

**தகவல்: நாகேந்திரம்: 065 148 6128,
ஈஸ்வரன் : 065 148 1998,
ரவி (London) 0044 208 518 3288,
நாகேஸ்வரி (Canada) 001 514 728 8100,
சோதி (இலங்கை): 021 226 3373**

(சி-620)

# புலனாய்வு செயற்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ வஞ்சகம்

(கொழும்பு)

**வட மாகாணத்தில் புலனாய்வு செயற்பாடுகள் அதிகரிக்கப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

காலியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றை தொடர்ந்து ஊடகவியலாளர்கள் மத்தியில் கருத்து தெரிவிக்கையிலேயே மகிந்த இவ்வாறு தெரிவித்தார்.

'வடக்கில் அண்மையில் இடம்பெற்ற சம்பவமானது நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. நாட்டின் தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக நாம் ஏற்கனவே பலமுறை சுட்டிக்காட்டி உள்ளோம். ஆனால் நமது கருத்துக்களை இந்த நல்லாட்சி அரசாங்கம் பொருட்படுத்தவில்லை.

இந்நிலையில், அண்மையில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டு சம்பவம் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. எனவே தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு வடக்கில் புலனாய்வு செயற்பாடுகளை அதிகரிக்க வேண்டும். அத்துடன் வடக்கில் பொலிஸ் நிலையங்களை அதிகரிப்பதுடன், இராணுவ முகாம்களை தொடர்ந்து பேண வேண்டும்' என்றும் தெரிவித்தார். (இ-7-10)


வாத நோய்களுக்கு சிறப்புச் சிகிச்சை

Special Treatment for Rheumatism

கழுத்துப்பிடிப்பு (Cervical spondylosis), தோள் மூட்டு வாதம் (Frozen shoulder), கீழ்முதுகு வலி (Law back pain), நாரிப்பிடிப்பு (Lumbago), முள்ளெலும்பு இடைத்தட்டு நழுவல் (Nerve root compressed by the Disc Hernia), இடுப்பு, தொடை, பாதம் வரை தாக்கும் தீவிர நரம்பு வலி (Sciatica) மற்றும் மூட்டுகளைப் பாதிக்கும் முடக்கு வாதம் (Rheumatic arthritis), முழந்தாள் மூட்டுத்தேய்மான வாதம் (Destrutcion of knee cartilage; Synovial fluid damage & Ligament loosening), குதிவாதம், நரம்பு, தசை, மூட்டுக்களின் (Neuro-mascular problems), பிரச்சனைகள், பிரசவத்தின் பின்பும், மாதவிலக்கு ஓய்வு காலத்தில் பின்பும் (Post caesarean & menopause) ஏற்படும் தசை - மூட்டு வலிகள் (Mascular & joint pain), சிறுவர் வாதம் (Juvenile arthritis), பாரிசவாதம் (Paralysis), எலும்பு முறிவின்பின் சீரமைப்பு போன்ற நோய்களுக்கு விசேட சித்த- ஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

**சிகிச்சைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதியின் உள்ளே)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# தமிழக படகுகள் எதுவும் ஒப்படைக்கப்படமாட்டாது

## மீன்பிடித்துறை அமைச்சர் இறுக்கம்

இலங்கை- இந்திய மீனவர் பிரச்சினை தொடர்பில் எதிர்வரும் 5ஆம் திகதி பேச்சுவார்த்தை நடத்தவிருப்பதாக கடற்றொழில் மற்றும் நீரியல்வள அபிவிருத்தி அமைச்சர் மகிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார். இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழையும் இந்திய மீனவப் படகுகள் எதுவும் மீள ஒப்படைக்கப்படாது என்றும் அவர் கூறினார். கடற்றொழில், நீரியல்வளங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்கு விதிகளை அங்கீகரிப்பது தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக நுழையும் படகுகளை கைப்பற்றுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு கடுமையான பணிப்புரை வழங்கியிருப்பதாகவும், இதுவரை கைப்பற்றப்பட்ட படகுகள் எதுவும் மீள வழங்கப்படவில்லையென்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கைக்குள் நுழைந்த இந்திய மீனவர்களின் சுமார் 125 படகுகள் மற்றும் மீன்பிடி வலைகள் என்பன தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளன. மீனவர்கள் விடுவிக்கப்பட்டாலும் அவர்களுடைய படகுகளோ உபகரணங்களோ மீள வழங்கப்படாது.

எதிர்வரும் 5ஆம் திகதி இந்தியா செல்லவிருப்பதாகவும், இவ்விஜயத்தின் போது மீனவர் பிரச்சினையை இராஜதந்திர ரீதியில் தீர்க்கமுடியுமா என முயற்சிக்கவிருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7-10)

# சகவாழ்வும் நல்லிணக்கமும் மிளிர வேண்டும் அதுவே பிரார்த்தனையாக அமைய வேண்டும்

## தீபாவளி வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி

அனைவரது மனங்களிலும் சகவாழ்வும் நல்லிணக்கமும் மிளிரவேண்டும் என்பதே இன்றைய தீபாவளி தினத்தின் எமது பிரார்த்தனையாக அமைய வேண்டுமென நான் கருதுகின்றேன் என ஜனாதிபதி மைதிரிபால சிறிசேன விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில்,

இருளால் கொண்டு வரப்படும் தீமைகளாலும் அஞ்ஞானத்தாலும் இழப்புக்களாலும் ஆக்கிரமிக்கப்பட்டு ஒளியைத் தேடிச் சென்ற மனிதன் தீமைகளுக்குப் பதிலாக நன்மையையும் அறியாமைக்கெதிராக அறிவையும் இழப்புகளுக்கு எதிராக நம்பிக்கையையும் வெற்றி கொள்ளும் உலக உண்மையே தீப ஒளியில் பிரகாசிக்கிறது.

பல தசாப்தங்களாக நீடித்த உள்நாட்டு மோதல்களும் அதனால் சமூகத்தின் மீது படர்ந்திருந்த இருளும் நீங்கிய இன்றைய சூழ்நிலையானது எமது சமூகத்தை இருளிலிருந்து ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி இட்டுச்செல்ல கிடைத்த பெறுமதியான வாய்ப்பாகுமெனக் கருதுகிறேன்.

ஒரு நாட்டினதும் சமூகத்தினதும் சுபீட்சமானது அந்த நாட்டில் நிலவுகின்ற சமாதானம் மற்றும் சகவாழ்வினாலேயே உறுதிப்படுத்தப்படுகின்றது. எனவே அனைவரது மனங்களிலும் சகவாழவும் நல்லிணக்கமும் மிளிர வேண்டும் என்பதே இன்றைய தீபாவளி தினத்தின் எமது பிரார்த்தனையாக அமைய வேண்டுமென நான் கருதுகின்றேன்.

ஐக்கியமென்பது இன்றைய உலகின் இருப்புக்குத் தேவையான அடிப்படை நிபந்தனையாகியுள்ள பின்னணியில், நாம் அனைவரும் ஆழமான பிணைப்புடனும் உண்மையான புரிந்துணர்வுடனும் செயற்படுவது அவசியமாகும்.

உலகவாழ் இந்துக்களால வெகு சிறப்பாக கொண்டாடப்படும் இத் தீபத்திருநாள் அனைவருக்கும் மனநிறைவையும் மகிழ்ச்சியையும் ஏற்படுத்தும் ஒரு பண்டிகையாகவும் அவர்களது வாழ்வில் புத்தொளி வீசும் தீபத் திருநாளாகவும் அமைய வாழத்துகின்றேன். (இ-10)

# அதி திறன் கொண்ட நாடுகளில் இலங்கையும் இணைந்தது

இலங்கை விநியோக அமைப்புக்களில் வல்லுநர்களாக திகழ்கின்றது என மென்பொருள் நிறுவனமான ஜாவா வேர்ல்ட் (Java World) நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஒன்லைன் தொழில்நுட்ப இணையத்தளத்தில் இலங்கை திறமையான தொழில் கொண்டுள்ள ஒருநாடு எனவும் ஜாவா வேர்ல்ட் பெயரிட்டுள்ளது.

ஒரு வலையமைப்பிற்குள் இருக்கும் கணனிகளை தொடர்புபடுத்தல் மற்றும் குறித்த கணனிகளின் செயற்பாடுகளை குறுஞ்செய்தி மூலம் ஒருங்கிணைத்தல் போன்ற செயற்பாடுகளை விநியோக அமைப்பு மேற்கொண்டு வருகின்றது.

பொதுவாக சிறந்த நிரலாக்குநர்கள் (Programmers) சீனா மற்றும் ரஷ்யாவில் காணப்படுவதாக JavaWorld குறிப்பிட்டுள்ளது.

மேலும் செயற்கை நுண்ணறிவில் ஜப்பானும் சி (C ) நிரலாக்கும் மொழியில் பிரான்சும் மற்றும் தகவல் தொகுப்பில் சுவிட்சர்லாந்தும் இடம் பிடித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# துன்ப, துயரங்களை அனுபவித்த மக்கள் அவற்றிலிருந்து விடுபட பிரார்த்திப்போம்

## எதிர்க்கட்சி தலைவர் தீபாவளி வாழ்த்து

நீண்ட நெடுங்காலம் துன்ப துயரங்களை அனுபவித்த மக்கள் அவற்றிலிருந்து விடுபட்டு வாழ அனைவரும் இணைந்து இறையருளை வேண்டிப் பிரார்த்தனையில ஈடுபட வேண்டும் என எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் விடுத்துள்ள தீபாவளி வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில், தீபாவளித் திருநாளானது இந்து மதத்தவர்களால் கொண்டாடப்படும் ஒருசமய விழாவாகும். ஐப்பசி மாதத்தில் அமாவாசைக்கு முதல் நாளாகிய சதுர்த்தசி பொருந்திய நாள் தீபாவளிக் காலமாகும். இந்நாளில் வீடுகளிலும் அக்கம் பக்கங்களிலும் தீபங்கள் ஏற்றப்படுவதனால் இந்நாளுக்குத் தீபாவளி என்று பெயர் வந்ததாக சைவப் பெரியார்கள் குறிப்பிடுகின்றனர்.

பலகொடுமைகளையும் பஞ்சமா பாவங்களையும் செய்து வந்த நரகாசுரன் என்ற அசுரனின் துன்புறுத்தல்களிலிருந்து தம்மை விடுவிக்குமாறு இறைவனிடம் தேவர்கள் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, எம்பெருமானால் அவன் சம்ஹாரம் செய்யப்பட்ட போது, தான்செய்த பாவங்களுக்குப் பரிகாரமாக அன்றைய நாளில் யாரெல்லாம் ஆசாரமுள்ளவர்களாய், பஞ் சமா பாவங்களை விடுத்து இறைவனைத் தியானித்துப் பூஜிக்கின்றார்களோ அவர்களுக்கு நரகம் விடுத்துச் சொர்க்கம் அருள வேண்டும் எனக் கேட்டதற்கமைய அவனுக்கு அருள் வழங்கி மோட்சமளித்ததாக எமது சமய நூல்கள் செப்புகின்றன. அத்தகைய சிறப்பு மிகு இன்றைய இத்தீபத் திருநாளில நீண்ட நெடுங்காலம் துன்ப, துயரங்களை அனுபவித்த மக்கள் அவற்றிலிருந்து விடுபட்டு வாழ அனைவரும் இணைந்து இறையருளை வேண்டிப் பிரார்த்தனையிலீடுபட வேண்டுவதுடன், எமது மக்கள் சாந்தி, சமாதானம் பெற்று வாழ எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன. (இ-10)


குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சைகளால் நிரந்தர குணம்பெறலாம்.

**ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும்.**

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251


# இலங்கையர் நாம் அனைவரும் வேறுபாடுகளை களைந்து அமைதியையும் ஒற்றுமையையும் நிலை நிறுத்த வேண்டும்

## வடக்கு ஆளுநர் தீபாவளி வாழ்த்து

இலங்கையர் நாம் அனைவரும் இனபேதம் வேறுபாடுகளை களைந்து அமைதியையும் ஒற்றுமையையும் நிலை நிறுத்த வேண்டும் என வட மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே விடுத்துள்ள தீப ஒளித் திருநாள் வாழ்த்து செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

வடமாகாண ஆளுநர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில, தீபாவளியானது உலகத்திலுள்ள சகல இந்துக்களுக்குமான மிகவும் முக்கியமான சமயப் பண்டிகையாகும். இது இலங்கை உட்பட இந்துக்கள் வாழ்கின்ற பல நாடுகளில் உத்தியோக பூர்வ பொது விடுமுறையாகக் கொண்டாடப்படுகின்றது.

இப்பண்டிகையை "ஒளியின் திருநாள்" எனவும் அழைப்பர். இந்துக்கள் தீபாவளியை தமது வாழ்வில் உள்ள இருள் நீக்கம்பெற்று சுபீட்சத்துடன் ஒளியேற்றும் திருநாளென நம்புகின்றனர். சுபீட்சம் பெறுவதற்காகவும் மற்றும் அறிவின் ஒளிபரவுவதற்காகவும் இந் நாளானது இவ்வுலகிலுள்ள சகல இந்துக்களாலும் மிகுந்த பக்தியுடன் கொண்டாடப்படுகின்றது.

தீபாவளிப்பண்டிகையை நினைவு கூரும் இந்நாளில் இலங்கையர் நாம்அனைவரும் இன பேதம் வேறுபாடுகளைக் களைந்து அமைதியையும் ஒற்றுமையையும் நிலை நிறுத்த வேண்டும். தீபாவளி திருநாளை கொண்டாடும் போது கடைப்பிடிக்கும் பக்தியையும் அமைதியான எண்ணப்பாங்கினையும் தொடர்ந்து கடைப்பிடித்து உன்னதமான ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் அடையும் நோக்கில் நாம் சகலரும் செயற்பட வேண்டும். இதன் மூலம் நாம் அனைவரும் ஒன்றுபட்ட இலங்கையில் கௌரவத்துடனும் சுதந்திரத்துடனும் வாழமுடியும்.

இந் தீபத்திருநாளில் அனைவரும் மகிழ்ச்சியும் செல்வமும் பெற வாழ்த்துகின்றேன். இந்த புனிதப் பண்டிகையினால் எமது சுற்றுப்புறம் அன்பினாலும் மகிழ்ச்சியினாலும் நிரம்பட்டும். (இ-10)

## பல்கலைக்கழக மாணவர்கள் படுகொலைக்கு
# நீதியான விசாரணையை கோருகின்றது அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை

(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச்சூட்டில் படுகொலை செய்யப்பட்டதனை கண்டித்து அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபை தனது கண்டன அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த நடராசா கஜன் மற்றும் சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த விஜயகுமார் சுலக்சன் ஆகியோரின் அகால மரணமானது வட மாகாணத்தில் மாத்திரமில்லாது உலகெங்கும் பரந்து வாழும் அனைத்துத் தமிழ் மக்களின் மனதிலும் ஆழ்ந்த சோகத்தை உருவாக்கியுள்ளது.

மூன்று தசாப்த கொடூர யுத்தத்திலிருந்து மீண்டெழுந்து எமது வாழ்வை மெதுவாகக் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் தருணத்தில் இப்படிப்பட்ட படுகொலைகள் இலங்கைத் தீவில் வாழும் அனைத்துத் தமிழ் மக்களின் வாழ்வியல் தொடர்பான நம்பிக்கையில் பலத்த சந்தேகங்களையும் பயங்களையும் மறுபடியும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே இக் கசப்பான சூழ்நிலையில் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையானது நீதியை நிலைநாட்ட கோரிக்கைகளை முன் வைத்துள்ளது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

# அமெரிக்க பிரதித் தூதுவர் யாழ். ஆயருடன் சந்திப்பு



இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான அமெரிக்காவின் பிரதித் தூதுவர் ரொபேர்ட ஹில்டன் நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு யாழ்.மறைமாவட்ட ஆயர் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரை ஆயர் இல்லத்தில் சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.

இந்தச் சந்திப்பில் மீள் நல்லிணக்கம் மற்றும் மீள்கட்டுமானம் என்பவை தொடரபில் ஆராயப்பட்டுள்ளதாக ரொபேர்ட ஹில்டன் தெரிவித்துள்ளார்.

மேலும் யாழ்ப்பாணம் அத்தியடி வீதியில் அமைந்துள்ள அமெரிக்கன்கோரணரில் நடைபெற்ற நிகழ்வொன்றிலும் அவர் கலந்து கொண்டிருந்தார். (செ-4)


நல்லை மங்கையர்க்கரசியின்

மனம் நெகிழஞ்சலி



திருமதி
இரத்தினம் சரஸ்வதி

எமது வித்தியாலய சிரேஷ்ட ஆசிரியர்
சிவகுரு தேவகுமார் அவர்களின்
அன்பு மாமியார்
திருமதி இரத்தினம் சரஸ்வதி
அவர்களின் பிரிவுத்துயரில் நாமும்
பங்கேற்று அவரின் ஆத்மா சாந்தி
யடைய பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்
2016.10.29


## சுவிசில் துப்பாக்கிச் சூடு தமிழ் இளைஞன் பலி



சுவிட்சர்லாந்தில் தொழிற் போட்டியின் விளைவாக பிறிதொரு நபர் நடத்திய துப்பாக்கி சூட்டில், தமிழ் இளைஞர் ஒருவர் மரணமானார். இந்தச் சம்பவம், கடந்த செவ்வாய்க் கிழமை இரவு சொலத்தூண் மாநிலத்தில் இடம்பெற்றுள்ளது.

இரண்டு வர்த்தக நிலைய உரிமையாளர்களுக்கிடையிலான தொழிற் போட்டியின் விளைவாகவே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

துப்பாக்கி சூட்டுக்கு இலக்கான இளைஞர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டு, சிகிச்சை பலனின்றி மறுநாள் புதன்கிழமை இரவு உயிரிழுந்துள்ளதாக பொலிஸார் கூறியுள்ள னர்.

வவுனியா குருமன்காடு பகுதியை சேர்ந்த 29 வயதான கார்த்திக் பாலேந்திரன் என்பவரே இவ் வாறு உயிரிழுந்தார். (இ-7-10)


45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர் திருமதி
தர்மலிங்கம் சாந்தாதேவி
திரு. பசுபதி கந்தமூர்த்தி
திருமதி கந்தமூர்த்தி சுதாயினி

சென்ற மாதம் இறைபதமடைந்த எமது குடும்பத்தினரின் அந்தியேட்டி கிரியைகள் இன்று (29.10.2016) சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு கிரியைகள் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும். 01.11.2016 செவ்வாய்க்கிழமை வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். நேரில் வந்தும் கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரம் என்பவற்றின் மூலமும் தொலைபேசி வாயிலாகவும் ஆறுதல் அளித்த அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நெற்கொழு கிழக்கு,
கொம்மந்தறை,
வல்வெட்டித்துறை.

இங்ஙனம்
குடும்பத்தினர்
தொ. இல. 021 226 5112

(C-6202)


### விமலின் வீட்டில் உயிரிழந்த இளைஞன்
# இயற்கையான மரணம் அல்ல என சட்டவைத்திய அதிகாரி அறிக்கை

கடந்த சில தினங்களுக்கு முன்னர்பாராளுமன்ற உறுப்பினர் விமல வீரவன்சவின் வீட்டில் 24 வயதான திஸா நயக்க முதியஸ்செலாகே லஹிரு ஜனித் திஸா நாயக்க என்ற இளைஞன் ஒருவர் மர்ம மான முறையில் உயிரிழுந்த நிலையில் மீட்கப்பட்டார். அவரின் பிரேத பரி சோதனை நேற்று முன் தினம் நடைபெற்றது.

அந்த அறிக்கையின் படி இளைஞரின் மரணம் இயற்கையான மரணம் அல்ல எனவும் சந்தேகத்திற்குரிய மரணம் என கொழும்பு சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

அதற்கமைய மேலதிக விசாரணைக்காக சடலத்தின் பாகங்களை அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளரிடம் அனுப்புவதற்கு சட்ட வைத்திய அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

ஸ்ரீ ஜயவர்த்தன வைத்திய சாலையில் வைக்கப்பட்டிருந்த சடலத்தை மரண விசாரணை அதிகாரி பீ.டீ.கலகெதர பரிசோதித்தார்.

இதன்போது சடலத்தின் மூக்கில் இருந்து இரத்தம் வந்துள்ளதாகவும், அதனை யாரோ ஒருவர் துடைத்துள்ளதாகவும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

வாயில் சளியுடனான திரவம் ஒன்று வெளியேறியுள் ளதாகவும், வித்தியாசமான முறையில் உதடு கள் உலர்வடைந்துள்ள தனை கண்காணித்த மரண விசாரணை அதிகாரி, சடலத்தின் கழுத்தின் வலது பக்கத்திலும், வட பகுதியின் பின் பகுதி தோள்பட்டையிலும், வயிற்றின் இரண்டு பகுதிகளிலும் நீல நிறத்திலான தாக்கப்பட்ட தழும்புகளும காணப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்ததனை தொடர்ந்து பீ அறிக்கை ஊடாக கடுவெல நீதவானிடம் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அதன் பின்னர் கடுவெல நீதவான் தம்மிக்க ஹேமபால விமல் வீரவன்ஸவின் வீட்டுக்கு சென்று நீதவான் ஆய்வொன்றை மேற்கொண்டுள்ள நிலையில், பின்னர் ஸ்ரீஜயவர்த்தன வைத்தியசாலைக்கு சென்று இளை ஞரின் சடலத்தை ஆய்வு செய்துள்ளார்.

அதன் பின்னர் பிரேத பரிசோதனைக்காக தென் கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடம் சடலத்தை ஒப்படைத்து அந்த அறிக்கையை தனக்கு வழங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு நீதவான் உத்தர விட்டுள்ளார்.

பின்னர் இடம்பெற்ற பரிசோதனை தொடர்பில் திறந்த தீர்ப்பு வழங்கிய சட்ட வைத்திய அதிகாரி மேலதிக பரிசோதனைக்காக சடலத்தின் பாகங்களை அரசாங்க இரசாய னப் பகுப்பாய் வாளரிடம் அனுப்புவதற்கு உத்தரவிட்டுள்ளார்.

தனது மகன் வீட்டில் இருந்து செல்லும்போது மிகவும் ஆரோக்கியமான உடல் நிலையிலேயே காணப்பட்டார் என உயிரிழந்த லஹிருவின் தாயார் தெரிவித்துள்ளார்.

மர்மமான முறையில் உயிரிழந்த லஹிரு ஜனித் சிறந்த உடல் நிலையில் இருந்தார் எனவும் தனது நண்பர் இவ்வாறு உயிரிழந்தமை அதிக சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளதெனவும், இறுதியாக தொலை பேசி, பேஸ்புக் ஊடாக லஹிருவின் தகவல்களை ஆராய்ந்து பார்க்கு மாறு லஹிருவின் நண்பர்பொலிஸாரிடம்வேண்டுகோள் விடுத்துள்ளார். (செ)

## கிழக்கு முதல்வரின் தீபாவளி வாழ்த்து

இலங்கையில் முஸ்லிம்களுடன் இணைந்து வாழும் சக சிறு பான்மையினத்தவரான இந்து மக்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அகமட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில்,

நன்மையினால் தீமை தோற் கடிக்கப்பட்டதையும் அறியாமையை நீக்கி அறிவுடைமையை ஏற்படுத் தியமையையும் மற்றும் இருள் அகற்றி ஒளி ஏற்றியதையும் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படு வதில் பொதிந்துள்ள அர்த்தங்களாக இந்துக்கள் நம்புகின்றனர்.

முன்னர் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களிடையே இருந்த நல்லுறவும் சகோதரத்துவமும் தற்போது அருகியுள்ளதை காண முடிகின்றது.

எனவே இந்த நாளில் இரு சாரார் மனதிலும் உள்ள கசப்புக் களை அகற்றி சிறுபான்மையினத்த வராய் விட்டுக் கொடுப்புக்களுடன் தமது உரிமைகளுக்காய் கரம் கோர்த்து வீறுநடை போட வேண் டும் என கிழக்கு முதலமைச்சர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (செ-9)


# பாடசாலை மாணவர்கள் 62 பேர் வைத்தியசாலையில் அனுமதி

கேகாலை மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் 62 மாணவர்கள் கேகாலை வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

திடீர் சுவாசநோய் காரணமாகவே இவர்கள் அனைவரும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

குறித்த பாடசாலையில் தரம் 6,7 மற்றும் 8 இல் கல்வி பயிலும் மாணவர்களே இவ்வாறு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், சம்பவம் தொடர்பில் பொலிஸார் மற்றும் இந்தப் பகுதியின் சுகாதார அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)




# மட்டக்குளி துப்பாக்கிச்சூட்டு சம்பவம் மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

மட்டக்குளி துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இரண்டு சந்தேக நபர்களை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.


கைதுசெய்யப்பட்ட இருவரும் 18 வயதான மட்டக்குளிப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என குற்றத்தடுப்பு பிரிவினர் தெரிவித்தனர்.

இதேவேளை சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேக நபரான "குடு ரொஷான்" உட்பட 11 பேரை கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளதுடன், அவர்களை நாளை மறுதினம் 31 ஆம் திகதிவரை தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மட்டக்குளி சமித்புர பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் நால்வர் உயிரிழந்ததுடன், மூவர் காயமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# வடக்கு-கிழக்கில் படையினரின் கெடுபிடிகள் தொடர்கின்றன!

## அமைச்சர் ஹக்கீம் நாடாளுமன்றில் விசனம்



யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையிலும் வடக்கு-கிழக்கு கடற்பகுதிகளில் படையினரின் கெடுபிடிகள் தொடர்ந்த வண்ணமே உள்ளன. பாதுகாப்புத்தரப்பின் இவ்வாறான கெடுபிடிகளை நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கோரியுள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கடற்றொழில் மற்றும் நீர் வளங்கள் ஒழுங்கு விதிகளை அதிகரிப்பது தொடர்பான சட்டமூல விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர், 'யுத்தகால பாதிப்பிலிருந்து மீண்டுவரும் வடக்கு-கிழக்கு மீனவ சமூகத்தினர் மீதான படையினரின் கெடுபிடிகளானது பாரிய அசௌகரியங்களை ஏற்படுத்தி வருகின்றன. அத்துடன், மீன்பிடிக்கும் பகுதிகளில் தற்போது சுற்றுலா விடுதிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இதன் பிரகாரம் மீன்பிடி பகுதிகள் கடற்படை மற்றும் தரைப்படையினரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் காரணமாக மீன்பிடித்துறை பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே மீன்பிடித்துறையில் காணப்படுகின்ற பாதுகாப்புத் தரப்பினரின் கெடுபிடிகளை உடனடியாக நிறுத்த வேண்டும். சுற்றுலா விடுதி மற்றும் பாதுகாப்புத் தரப்பின் கெடுபிடியிலிருந்து மீனவர்கள் விடுவிக்கப்பட வேண்டும்.

அதேவேளை, சில மீன்பிடி உபகரணங்களுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அத்தடையை மீனவ சமூகத்தினரது வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு குறிப்பிட்ட சில காலத்திற்கேனும் தளர்த்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்' என்றும் வலியுறுத்தினார். (இ-7-10)

# மாணவர்கள் படுகொலைக்கு நீதி கோரி கனடாவில் கண்டனப் போராட்டம்




(ரொரண்டோ)

இரு தமிழ் மாணவர்களின் படுகொலை என்பது ஒரு இன அழிப்பின் தொடர்ச்சியாகவே எம்மால் பார்க்க முடிகிறது. இக்கொலைக்கு இலங்கை அரசு ஒரு நீதியான விசாரணையையோ அல்லது அதற்கான பரிகாரத்தையோ வழங்குவார்கள் என நாம் நம்பவில்லை. இப் படுகொலைக்கான விசாரணையில் கனடா, அனைத்துலக சமூகம் மற்றும் ஐக்கிய நாடுகள் சபை தலையிட்டு ஒரு அனைத்துலக விசாரணைக்கான சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என மாணவர்கள் படுகொலையைக் கண்டித்தும் அனைத்துலக விசாரணையை வலியுறுத்தியும் கனேடிய




தமிழர்களாக கண்டனப் பேரணியில் அணிதிரண்டனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணி முதல் 7 மணி வரை டண்டாஸ் சதுக்கத்தில் கண்டனப் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் மாலை 6:30 மணிக்கு நினைவு விளக்கேந்தி படுகொலை செய்யப்பட்ட இரு மாணவர்களையும் நினைவு கூர்ந்தனர். (இ)

# இராசி பலன்

29.10.2016

(ஐப்பசி 13, சனிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.57 மணிக்கு

சதுர்த்தசி முன்னிரவு 9.07 மணிவரை

அத்தம் காலை 7.31 மணிவரை

சுபநேரம் 3.03-4.33 மணிவரை

இராகுகாலம் 9.03-10.33 மணிவரை

தீபாவளிப் பண்டிகை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் உத்திரட்டாதி இரவு 8.45 மணிக்கு துலா-சந் | | |
| செவ் | | | ராகு |
| | சனி சுக் | சூரி புத | குரு சந் |

**மீனம்:** கனவு பலிதமுண்டு, வாழ்க்கைத் துணை வழியே விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது, காரிய அனுகூலமுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**மேடம்:** அன்பு நண்பர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் நாள், காரிய அனுகூலமுண்டு.

**இடபம்:** எதிர்காலம் குறித்து முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், குடும்பத்தினரின் பேரன்பைப் பெறுவீர்கள், சுற்றத்தாரின் வரவால் சுகம் கூடும் நாள்.

**மிதுனம்:** சந்தோசமான அனுபவங்கள் ஏற்படலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், எதிர்பார்த்த தகவல்கள் வந்து சேரலாம்.

**கும்பம்:** வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள், நண்பர்கள் மனம் கோணாது நடந்து கொள்வது நல்லது, உடல் நலனில் கவனம் தேவை.

**கடகம்:** பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மகரம்:** நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல முடிவுக்கு வரலாம், தேகநலனில் தெளிவு பிறக்கும், எதிர்பார்ப்புகள் நிறைவேறி ஏற்றம் பெறுவீர்கள்.

**சிம்மம்:** நல்லவர்களை சந்தித்து நலம் காணும் நாள், தொழில் வளர்ச்சியுண்டு, சிறப்பான நாள், சுப செய்திகள் வந்து சேரும் நாள்.

**தனுசு:** உறவினர்களின் பாராட்டுக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்:** வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், உறவினர்களின் உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, முயற்சிகளில் முன்னேற்றம் பெறுவீர்கள்.

**துலாம்:** சுப விரயங்கள் ஏற்படும் நாள், குடும்ப உறுப்பினர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது, பயணத்தால் பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**கன்னி:** ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் அச்சுறுத்தல் ஏற்பட்டு அகலும், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

# படுகொலை செய்யப்பட்ட பல்கலை. மாணவர்களுக்கு பௌத்த துறவிகள் நேற்று அஞ்சலி செலுத்தினர்






(யாழ்ப்பாணம்)

ஜப்பானிய பௌத்த துறவிகளும் இந்தியாவின் காந்தி அமைப்பினரும் (அஹிம்சா) இணைந்து கடந்த ஒக்டோபர் மாதம் 16 ஆம் திகதி ஆரம்பித்த சமாதான பாத யாத்திரை நேற்றைய தினம் நல்லூரை வந்தடைந்தது.

சிவனொளிபாதமலை, கதிர்காமம் ஸ்ரீதலதா மாளிகை ருவான்வெலிசாய, அநுராதபுரம் கண்ணகி அம்மன் கோவில், வற்றாப்பளை முல்லைத்தீவு. ஊடாக நேற்று முன்தினம் யாழ். செல்வச் சந்நிதியை வந்தடைந்திருந்தது.

இப் பாத யாத்திரை இறுதியாக நேற்றைய தினம்காலை நல்லூரில் இருந்து ஆரம்பித்து யாழ்.பல்கலைக்கழகத்துக்குச் சென்று இங்கு கடந்த 20 ஆம் திகதி பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை மேற்கொண்டதுடன், யாழ். பேருந்து நிலையம் ஊடாகச் சென்று யாழ்.மத்தியூஸ் வீதியில் பிக்கு யொக்கோட்சுகா சுட்டுக் கொலை செய்யப்பட்ட இடத்தில் நினைவு பிரார்த்தனையில் ஈடுபட்டு தமது சமாதான யாத்திரையை நிறைவு செய்தனர்.

1986 ஆம் ஆண்டு சமாதான பாதயாத்திரை வந்த ஜப்பானிய பௌத்த பிக்கு யொக்கோட்சுகா யாழ்ப்பாணத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

அவரின் சமாதான நடவடிக்கையை முன்கொண்டு செல்வதற்காகவும் சகவாழ்வின் தேவையை வடக்கு, தெற்கு மக்களுக்கு உணர்த்துவதற்காகவும் இனிமேல் இப்பிரதேசத்தில் யாரும் இரத்தம் பார்க்கக் கூடாது எனவும் அந்த நிலை வரக்கூடாது எனவும் வேண்டி குறித்த பாதயாத்திரை நடத்தப்பட்டதாக பாதயாத்திரையில் கலந்து கொண்டவர்கள் தெரிவித்தனர்.

கடந்த 16 ஆம் திகதியில் இருந்து 28 ஆம் திகதி வரையான மாவட்டங்கள் முறையே கொழும்பு, கண்டி, ஸ்ரீபாத, கரணகம, அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, சாவகச்சேரி, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களூடாக இப் பாத யாத்திரை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்தப் பாதயாத்திரையில் சர்வமதத் தலைவர்களும் கலந்து கொண்டனர். (இ-9)




# பரீட்சைப் பெறுபேறுகளை பரிசோதிக்க வேண்டும்

## வடக்கு மாகாண சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் வழங்கப்படும் அரச நியமனங்களின் போது, தெரிவு செய்யப்படுபவர்களினால் சமர்ப்பிக்கப்படும் பரீட்சை பெறுபேறுகளை பரீட்சை திணைக்களங்களுக்கு அனுப்பி பரிசோதிக்க வேண்டும் என்ற தீர்மானம் வடக்கு மாகாண சபையினால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 64 ஆவது அமர்வு நேற்று முன்தினம் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது பொது முக்கியத்துவம்வாய்ந்த பிரேரணையாக உறுப்பினர் ப.அரியரத்தினத்தினால் குறித்த பிரேரணை முன்மொழியப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அந்தப் பிரேரணையில், வடமாகாண சபையின் நிர்வாகத்திற்கு உட்பட்ட உள்ளூராட்சி திணைக்களத்தின் பரிபாலனத்தில் உள்ளடங்கும் பிரதேச சபைகள், நகர சபைகள் மற்றும் மாநகர சபைகள் போன்றவற்றிற்கு அட்டவணைப்படுத்தாத பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டு நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட்டு நியமனங்கள் வழங்கப்படும்போது தெரிவுசெய்யப்பட்டவர்களால் சமர்ப்பிக்கப்படும் பரீட்சைப் பெறுபேறுகள் (க.பொ.த. சாதாரணம் மற்றும் உயர் தரம்)பரீட்சைத் திணைக்களங்களுக்கு அனுப்பப்பட்டு பரிசீலிக்கப்படுவதில்லை.

இதனால் சிலர் தவறான முறையில் தமது கல்விச் சான்றிதழ்களை சமர்ப்பித்து நியமனம் பெற்றுக்கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

இதன் காரணமாக எதிர்காலத்தில் இவ்வாறான பதவிகளுக்கு நியமிப்பவர்கள் விடயத்தில் நியமனம் வழங்கப்பட்டு 3 மாத காலப் பகுதிக்குள் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட கல்விச் சான்றிதழ்களின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்த வேண்டும் என அரியரத்தினம் தனது பிரேரணையை முன்மொழிந்தார்.

பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரேரணை எனக் கருதி தவநாதன் வழிமொழிந்தார். தொடர்ந்து குறித்த பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (இ-4)

# சைவசமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் செயல்முறைப்போட்டி

வண்ணை – சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில்சைவசமய அபிவிருத்திக்கழகம் வருடம் தோறும் நடத்தி வரும் செயல்முறைப் போட்டி நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்.

கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயல்முறைப் போட்டிகள் மத்திய பிரிவு, கீழ்ப்பிரிவு எனும் இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன. இப் போட்டிகளுக்கு பல்வேறு பாடசாலைகளைச் சேர்ந்த சுமார் 460 போட்டியாளர்கள் தோற்றவுள்ளனர்.

கோலம் போடுதல் போட்டி காலை 9 மணிக்கும் மாலை கட்டுதல் போட்டி முற்பகல் 10.15 மணிக்கும் தோரணம் பின்னுதல் போட்டி முற்பகல் 11.30 மணிக்கும் நடைபெறும்.

இவர்களுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலமும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் போட்டியாளர்களே போட்டிகளுக்குரிய பொருட்களுடன் குறித்த நேரங்களில் சமுகம் தரவேண்டும் எனவும் சைவசமய அபிவிருத்திக் கழக பரீட்சைச் செயலர் சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (இ)

# சவுதியில் உயிரிழந்தவரின் சடலம் சொந்த ஊருக்கு கொண்டுவரப்பட்டது

(கரணவாய்)

சவுதி அரேபியாவில் மாரடைப்பால் மரணமடைந்த குடும்பஸ்தர் ஒருவரின் சடலம் இரண்டு மாதங்களின் பின்னர் சொந்த இடத்திற்கு எடுத்துவரப்பட்டுள்ளது.

மந்திகை புலோலியைச் சேர்ந்த சொக்கலிங்கம் இரவீந்திரலிங்கம் என்ற குடும்பஸ்தர் இரண்டு மாதங்களுக்கு முன்னர் சவுதி அரேபியாவில் மாரடைப்பால் உயிரிந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் இறந்த அவரது சடலம் நேற்று முன்தினம் 27 ஆம் திகதி புலோலியிலுள்ள அவரது வீட்டிற்கு எடுத்து வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (இ-60)

# கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சத்தியசாயி கல்வி நிறுவனம் நடத்தும் மனித உன்னதத்தை நோக்கிய சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி முறைக் கண்காட்சி நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை வரை காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை யாழ். பெருமாள் கோவில் முன்பாகவுள்ள யாழ். சன்மார்க்க மகா வித்தியாலயத்தில் இடம் பெறும். (இ-3)






மஞ்சள் கோட்டை விட்டு அகன்று வீதி ஒங்கைக் கடைப்பிடிக்காது யாழ். திருநெல்வேலிப் பகுதியில் நேற்றுக் காலை பொலிஸ் ஜீப் ஒன்று தரித்து நின்றவேளை பொதுமகன் ஒருவரால் எடுத்து அனுப்பப்பட்ட படங்கள் இவை.

# அங்குரார்ப்பணம்

யாழ்.மாவட்ட சமாதான நீதவான்கள் சங்க அங்குரார்ப்பணம் அண்மையில் யாழ். சர்வோதய இயக்க மண்டபத்தில் கலாநிதி எஸ். தனேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் தலைவர் கலாநிதி எஸ்.தனேந்திரன், உபதலைவர்கள் ஆர்.மயில்வாகனம் (கோப்பாய்), என்.பிரபாகரன் (யாழ்ப்பாணம்), செயலாளர் கே.நாகேந்திரம் (நல்லூர்), உபசெயலாளர் ஏ.என்.எஸ். திருச்செல்வம் (பருத்தித்துறை), பொருளாளர் எம்.சுஜீவன் (யாழ்ப்பாணம்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (இ-3-19)

## யாரிடம் பேசுவது?

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் எதுவுமே முடியவில்லை ....
என்பன போன்ற எண்ணங்களா?

**எம்முடன் பேசுங்கள்.**

**கை கொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ம் குறுக்குத்தெரு. யாழ்ப்பாணம்
*மதசார்பற்றது *ரகசியமானது * இலவச சேவை
**021 222 8117, 077 900 8776**
*வவுனியா (024) 324 4444*
*(சனி, ஞாயிறு காலை 9.00 - 1.00)*


## நோர்வேயின் பாய்மரக் கப்பல் ஒரு அருங்காட்சியகமாகும்



உலகின் மிகவும் பழைமையான பாய் மரக் கப்பலான நோர்வேயின் எஸ் . எஸ் . சோர்லாண்டர் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. 1927 ஆம் ஆண்டு கட்டப்பட்ட இந்த பாய்மரக்கப்பலின் எடை 905.3 டொன் என கப்பலின் கப்டன் தெரிவித்தார்.

27 பாய்மரங்களைக் கொண்டு அழகுடன் திகழும் எஸ். எஸ். சோர்லாண்டர் உலக கப்பல் வரலாற்றில் ஒரு அருங்காட்சியகம். எனவே தான் மதிப்பற்ற நோர்வேயின் முத்து என அதற்கு பெறுமதியளிக்கப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (இ-7-10)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/இந்து மகளிர்
ஆரம்ப பாடசாலை
மாணவி
**செல்வி**
**செல்வசுந்தரராசா**
**நாதவி**
2016 ஆம் ஆண்டு
5 ஆம் தர
**புலமைப்பரிசில்**
**பரீட்சையில் 166**
புள்ளிகளைப் பெற்று
சித்தியடைந்ததையிட்டு
அவரை மனமாரப்
பாராட்டி
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
சோ.ரவிவர்மன்
குடும்பத்தினர்
போட்டோ ரவி

375/13, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (6459)



சாவகச்சேரி

## திருக்கணித பதிப்பக முகாமையாளர் காசிநாதர் சிவஞானசுந்தரம் அவர்களின்

## மணிவிழாவும் "மாண்புறு மட்டுவில்" நூல் வெளியீட்டு விழாவும்



காலம் : 30.10.2016 ஞாயிற்றுக்கிழமை
பி.ப. 2.30 மணி
இடம் : யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி
அருணாசலம் மண்டபம்
தலைவர்: திரு.ந.சர்வேஸ்வரன் அவர்கள்
(முதல்வர், யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**நிகழ்ச்சி நிரல்**

❖ சங்கத்தானை முருகன் ஆலயத்தில் இருந்து விழா நாயகரை அழைத்து வருதல்.

**மங்கள இசை: "நாதகான இளவல்கள்"**
வி.சித்தார்த்தன், வி.பிரதித்தன் குழுவினர்
மங்கல விளக்கேற்றல்: திரு.செ.சுப்பிரமணியம் அவர்கள் (ஓய்வுநிலை அதிபர்)
இறைவணக்கம்: திருமதி சுந்தரவல்லி ஆனந்தராசா அவர்கள் (சங்கீத ஆசிரியை)
வரவேற்புரை: திரு.க.இரவீந்திரன் அவர்கள் (ஓய்வுநிலை அதிபர்)
ஆசியுரை: பிரம்மஸ்ரீ சி.சண்முகானந்த சர்மா அவர்கள்
(ஓய்வுநிலை ஆசிரியர்)
தலைமையுரை: தலைவர் அவர்கள்

**வாழ்த்துரைகள்**
1.சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் அவர்கள்
(துணைவேந்தர், யாழ். பல்கலைக்கழகம் )
2.பேராசிரியர் க. கந்தசாமி அவர்கள்
( பௌதிகவியல்துறை, யாழ். பல்கலைக்கழகம் )
3.பேராசிரியர் தி . வேல்நம்பி அவர்கள்
(பீடாதிபதி, முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடம்,யாழ். பல்கலைக்கழகம் )
4.திருமதி அ. வேதநாயகம் அவர்கள் ( ஓய்வு நிலை வலயக் கல்விப் பணிப்பாளர்)
5. திரு.அ.கயிலாயபிள்ளை அவர்கள் (ஓய்வுநிலை அதிபர்)
6.திரு.ந.ஜெயகுமாரன் அவர்கள்
(அதிபர், யா/சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி)
கவி வாழ்த்து: திரு.அ.வாசுதேவா அவர்கள் (அமைப்பாளர்,தென்மராட்சி இலக்கிய அணி )

**நூல் வெளியீடு**
நூல் : மாண்புறு மட்டுவில்
வெளியீட்டுரை : செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன் அவர்கள்
(பிரதி முதல்வர், கோப்பாய் ஆசிரிய பயிற்சி கலாசாலை)
வெளியிட்டு வைப்பவர் : திரு. யோ. ஜெயக்குமார் அவர்கள்
(ஓய்வு நிலை உதவிப்பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம் )
முதற் பிரதி பெறுபவர் : திரு.ந. சிவபாலன் அவர்கள்
(தலைவர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)

**பாராட்டுரைகள்**
1. சட்டத்தரணி கௌரவ. கேசவன் சயந்தன் அவர்கள் (வடமாகாணசபை உறுப்பினர்)
2.திரு. க. எழிலழகன் அவர்கள் (அதிபர்,யா/மட்டுவில் வடக்கு சந்திரமௌலீச வித்தியாலயம் )
3. திரு. வ. ஸ்ரீபிரகாஸ் அவர்கள் (உப தலைவர், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்)

**விழா நாயகர் கௌரவிப்பு**
சமூகஜோதி என்னும் கௌரவ பட்டம் வழங்கி கௌரவித்தல்
கௌரவித்து வாழ்த்துபவர் : திரு.க. அருந்தவபாலன் அவர்கள் (ஓய்வு நிலை அதிபர்)

**வாழ்த்துப்பா வழங்குதல்**
பா இசைப்பவர் : திரு.தெ. திருவேரகன் அவர்கள்
வாழ்த்துக்கவி : கவிஞர் த. நாகேஸ்வரன் அவர்கள்

**சபையோர் கௌரவிப்பு**
ஏற்புரை : விழா நாயகர் அவர்கள்
நன்றியுரை : தமிழ்க்கவி திரு.செ. சுதாகரன் அவர்கள்
(பிரதம முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், பச்சிலைப்பள்ளி)
நிகழ்ச்சித் தொகுப்பு : திரு.க.க. ஈஸ்வரன் அவர்கள்
(தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி தென்மராட்சிக் கல்வி வலயம்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**
விழா ஏற்பாட்டுக்குழுவினர். (6237)



# சேவைநலன் பாராட்டு

திரு.நடராஜா
**விஜயகுமார்**



பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் விஞ்ஞான ஆசான்
திரு.நடராஜா விஜயகுமார் 29.10.2016 அன்று பணிநிலை
ஓய்வு பெறுவதையிட்டு மீபுலமையாளராகிய அவரது சேவையினை
நயந்து பாராட்டி மகிழ்கின்றோம்.

*"ஹாட்லியில் வீசிய காற்றுக்களில் நீங்கள் $O_2$"*
*இதுவே மகிமைமிகு மாணவர்களின் கூற்று*
*பாண்டவரில் விற்புகழ் ஏற்றது*
*விஜயன் என்ற இனிய பார்த்தன்-விஞ்ஞானத்தை*
*ஆண்டவரில் நற்புகழை ஏற்றது*
*விஜயன் என்ற புனித தீர்த்தன்*
*எதிரியையும் உதிரியாக்கும் கதிரியக்கம்*
*உங்கள் எழில்மிகு புன்னகை அதிரி*
*மொழிப்புலமையோ தன்னிகரற்ற தகைமை*
*தரணியில் இல்லை தங்க குணத்திற்கு ஒப்புவமை*
*தற்புதுமைக் கற்பித்தலால் மாணவர்க்கு இலகுவானது'*
*விஞ்ஞான வானத்தின் நுழைவு*
*ஒப்பற்ற ஆளுமை ஓய்வெடுத்தால் நிகழலாம்*
*அவர்கள் உலகிலும் பச்சை வீட்டு விளைவு!*
*மணிவிழாக் காணும் மரியானா ஆழியே...!*
*நீண்ட ஆயுளோடு வேண்டிய கனவுகள்*
*வாசல் நிறைக்க நீடூழி வாழியே!*

**ஆசிரிய நண்பர்கள், வடமராட்சி.** (சி-6238)



இவர்களுக்கு **மணமகள் தேவை** | **கல்யாண மாலை** | இவர்களுக்கு **மணமகன் தேவை**

**மணமகள் தேவை**

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: உத்தரம்
கி.பா:38
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:பொறியியலாளர்
பிரான்ஸ்
தொ.இ: B/6177

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 19 சூரிசெவ் 11 இல்
தகைமை/தொழில்:A/L/சொந்த
தொழில்
தொ.இ: B/6179

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: மூலம்
கி.பா: 49 செவ் 12 இல்
உயரம்: 5'6"
தகைமை/
தொழில்:தொழில்நுட்பவியலாளர்
தொ.இ: B/6180

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா: 39சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்:A/L/
அரசதொழில்
தொ.இ: B/6182

**மணமகன் தேவை**

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா:11 1/4 சூரிசெவ் 3 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: G/5844

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 40 செவ் 1 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:HNDA/அரச
தொழில்
தொ.இ: G/5847

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 38 சூரிசெவ் 3 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA/அரச
தொழில்
தொ.இ: G/5850

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: சுவாதி
கி.பா: 26 செவ் 4 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/5856

# கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.









நாடளாவிய ரீதியில் கல்வி முறைமையிலுள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோரின் ஒன்றிணைந்த நிதிப்பங்களிப்புடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆனையிறவு புகையிரத நிலையம் நேற்று மக்கள் பாவனைக்கு கையளிக்கப்பட்ட போது...

(படங்கள்:-பரந்தன் செய்தியாளர்)

## முத்தரிப்புத்துறை கடற்பரப்பில் கைதான 71 மீனவர்களும் பகுதிபகுதியாக விடுவிப்பு

முத்தரிப்புத்துறை கடற்பரப்பில் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 71 மீனவர்களும் நேற்று முன்தினம் இரவு பகுதி பகுதியாக விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

முசலி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முத்தரிப்புத்துறை கடற்பகுதியில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை காலை குறித்த மீனவர்கள் கடற்றொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை காலை 7 மணியளவில் குறித்த மீனவர்களின் படகுகளை கடற்படையினர் கடலில் வைத்து சோதனையிட்டுள்ளனர்.

இதன் போது படகுக்கான காப்புறுதி மற்றும் அடையாள அட்டை ஆகியவற்றை பரிசீலித்த கடற்படையினர் குறித்த ஆவணங்கள் இல்லாத மீனவர்களை கைது செய்துள்ளனர்.

இதில் சிலாவத்துறையைச் சேர்ந்த 7 மீனவர்களும், வங்காலையைச் சேர்ந்த 4 மீனவர்களும், நறுவிலிக்குளத்தைச் சேர்ந்த 60 மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சிலாவத்துறை மீனவர்களின் 3 படகுகளும், வங்காலை மீனவரின் ஒரு படகும்.நறுவிலிக்குளம் மீனவர்களின் 9 படகுகளையும் கடற்படையினர் பறிமுதல் செய்திருந்தனர்.

கடற்படையினர் தன்னிச்சையாக செயற்பட்டு மீனவர்களை கைது செய்கின்றனர் என கடற்றொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகளால் சுட்டிக்காட்டப்பட்டதனை அடுத்து படையினர் நேற்று முன்தினம் இரவு மீனவர்கள் அனைவரையும் படிப்படியாக விடுதலை செய்தனர். (2-9)




## வடக்கில் இளைஞர், யுவதிகள் வேலைவாய்ப்பு பெறுவதில் ஏற்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு





வடக்கு மாகாணத்தில் வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்குவது தொடர்பில் மத்திய அரசாங்கத்தின் ஏற்பாட்டில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று மனிதவலு, தொழிற்றுறை அமைச்சின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணத்தில் இவ் அமைச்சின் கீழ் பணிபுரியும் உத்தியோகத்தர்களுடனான சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில் மனிதவலு, தொழிற்றுறை இராஜாங்க அமைச்சர் ரவீந்திர சமரவீர, அவ் அமைச்சின் செயலாளர் சுனில் அபேய வர்த்தன, தொழிற்றுறை திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஆர். தர்மசேன, வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரேஸ் குமார் மற்றும் இத் திணைக்களத்தின் கீழ் வவுனியா, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

வடக்கில் வேலைவாய்ப்பைத் தேடும் இளைஞர், யுவதிகளின் பதிவுகள் மாவட்ட செயலகத்தினால் கோரப்பட்டிருந்தன. அதற்கேற்ப விண்ணப்பித்தவர்களின் விபரம், அவர்களில் வேலை வாய்ப்பை தற்போது பெற்றுள்ளோர், வேலைவாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளை தனியார் துறைகளில் உள்ளீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், இளைஞர், யுவதிகள் வேலை வாய்ப்பைப் பெறுவதில் உள்ள பிரச்சினைகள், மொழி ரீதியாகவுள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன.

இதன்போது, வடக்கில் ஏனைய மாகாணங்களுடன் ஒப்பிடுகையில் அதிகமானவர்கள் வேலை வாய்ப்பின்றி இருப்பதாகவும், அவர்களுக்கு வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும், மாவட்ட ரீதியாக உள்ள இது தொடர்பான பிரச்சினைகளை ஆராய்ந்து களத்தில் பணிபுரியும் உத்தியோகத்தர்கள் ஊடாக தரவுகளைப் பெற்று தேசிய ரீதியில் கொள்கைத் திட்டங்கள் வகுக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகவும் தொழிற்றுறை திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஆர். தர்மசேன தெரிவித்தார். (2-250)

## கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கலை, கலாசார விழுமியங்களை வெளிப்படுத்தும் கலாசார பெருவிழா

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தினுடைய கலாசார பெருவிழா எதிர்வரும் நவம்பர் மாதம் முதலாம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் பிரதேச செயலாளர் சி.குணபாலன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் பங்கேற்புடன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள், முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர், முல்லை. மாவட்டத்தினுடைய பிரதேச செயலாளர்கள் கலந்துகொண்டு முல்லைத்தீவு மாஞ்சோலை வைத்தியசாலையின் முன்பிருந்து எமது கலாசார பண்பாட்டு இசை வாத்தியங்களான இன்னியம், பறை, தவில், நாதஸ்வரக் கச்சேரிகளுடன் வரலாற்று இலக்கியங்கள், ஏடுகள் சுமந்த வண்ணம் ஐம்பது கலாசார ஊர்தி பவனியுடன் ஆரம்பிக்கப்பட்டு முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி பொது மைதானத்தை வந்தடையும்.

அதன் பின்னர் வன்னி பிரதேசத்தில் அழிவடைந்து சிதைந்து வருகின்ற கலை, கலாசார பண்பாட்டினை மீள உருப்படுத்தும் உறுதி பூணலுடன் வன்னி பிரதேசத்திற்கு உரித்தான தாலாட்டு முதல் ஒப்பாரி வரையான நாட்டார் பாடல்களுடைய இறுவெட்டு வெளியீடும் இடம்பெறும்.

அதன்பின் வன்னி வரலாறுகளை மீள புதுப்பித்து ஆவணப்படுத்துகின்ற சிலம்போசை எனும் நூல்வெளியீடும் தொடர்ந்து வன்னிக்கே உரித்தான கலை நிகழ்வுகள் நாடகம், கூத்து, பட்டிமன்றம் ஆகிய கலை நிகழ்வுகளும் இடம்பெற இருக்கின்றன.

இந் நிகழ்வில் வன்னி பிரதேசத்தில் இருக்கக்கூடிய அனைத்து மக்களையும் தமிழர் தம் கலாசார விழுமியங்களைப் பேணும் உடைகளுடன் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கப்படுகின்றார்கள்.

கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்திற்குட்பட்ட கிராமங்களில் இருக்கக்கூடிய மக்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக செம்மலை, கொக்கிளாய், கொக்குத்தொடுவாய், குமுழமுனை, அம்பலவன் பொக்கணை, முள்ளிவாய்க்கால் ஆகிய பிரதேசங்களுக்கான இலவச பேருந்து சேவைகள் ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளதாக கரைதுறைப்பற்று உதவி பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார். (2)

## மக்களின் பாவனைக்கு நேற்று ஆனையிறவு புகையிரத நிலையம் 'அன்பின் தரிப்பிடம்' எனும் பெயரில்

(பரந்தன்)

நாடளாவிய ரீதியில் கல்வி முறைமையிலுள்ள ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் ஒன்றிணைந்த அர்ப்பணிப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஆனையிறவு புகையிரத நிலையம் நேற்று மக்களின் பாவனைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முற்பகல் 11.58 மணி சுபநேரத்தில் "அன்பின் தரிப்பிடம்" என்ற பெயர் கொண்டஆனையிறவு புகையிரத நிலையம் மக்களுக்கு கையளிக்கப்பட்டது

இலங்கையின் அனைத்து மாகாணங்களிலுமுள்ள பாடசாலை மாணவர்கள் இரு வாரங்களாக தமது அனறாட சொந்த செலவுகளுக்காக தம் பெற்றோர் தரும் பணத்திலிருந்து தலா இரண்டு ரூபாய்கள் வீதம் சேமித்து உவந்தளித்த நிதியிலிருந்தே இப் புகையிரத நிலையம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இதேவேளை நாட்டிலுள்ள எல்லா ஆசிரியர்களும் தமது அன்பளிப்பாக ஒருவருக்கு தலா பத்து ரூபாய் வீதம் இதற்குத் தந்துதவியுள்ளனர். இப்புகையிரத நிலையத்தை நிர்மாணிப்பதற்கு 22 மில்லியன் ரூபாய்களுக்கும் மேலான தொகை தேவைப்பட்டிருக்க சேகரிக்கப்பட்ட தொகையிலும் விட மேலதிக செலவைக் கல்வி அமைச்சு தன் சொந்த நிதியிலிருந்து வழங்கியுள்ளது.

முப்பது ஆண்டு கால யுத்தத்தினால் சிதைவுற்ற புகையிரத நிலையம் மீளவும் கட்டியெழுப்பப்படுவது மாத்திரமல்லாது வடக்கு-தெற்கு சகோதரத்துவத்தினால் இதயங்களை இணைக்கும் நிகழ்வாக இந்த ஆரம்ப வைபவம் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசத்தின் கொள்கைக்கிணங்க பாடசாலை மாணவர்கள் மத்தியில் சமாதானம், ஒன்றிணைவு, சகோதரத்துவம் ஆகியவற்றினை மேம்படுத்தும் முறையில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்ச்சியில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம், போக்குவரத்து மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து பிரதி அமைச்சர் அஷோக் அபேசிங்க உட்பட வடக்கு மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகள் பலரும் சமுகமளித்திருந்தனர். (2-312)

# நல்லாட்சியின் சிறைகளில் எமது பிள்ளைகள் கையெழுத்திடுகிறோம்;கருணை காட்டுங்கள்

## முல்லையில் நேற்று கையெழுத்து போராட்டம்




(பனிக்கன்குளம்)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி முல்லைத்தீவு மாவட்டத்தில் கையெழுத்து திரட்டும் நடவடிக்கைகள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு அருகாமையில் நேற்று இடம் பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட சிவில் சமூக அமைப்புக்கள் சமூக ஆர்வலர்கள ஆகியோர் இணைந்து நல்லாட்சியின் சிறைகளில் நமது பிள்ளைகள் கையெழுத்திடுகிறோம் கருணை காட்டுங்கள் என்ற தொனிப்பொருளில் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையை வலியுறுத்திய கையெழுத்து போராட்டத்தை வடக்கு மாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் கையெழுத்திட்டு ஆரம்பித்து வைத்தார்

இந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக மக்கள் பலரும் கையெழுத்திட்டனர்.

இதனைவிட முல்லைத்தீவு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் நேற்றைய தினம் கையெழுத்து சேகரிக்கும் நடவடிக்கை இடம்பெறுவதாகவும் இதனுடைய பிரதிகள் நல்லாட்சி அரசின் ஜனாதிபதி, பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர், வடக்கு மாகாண முதலமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்ததாக வடக்குமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்தார். (2-281)

# காட்டு யானையொன்றின் அட்டகாசத்தால் வாழைத்தோட்டம் முற்றாக சேதமாகியது

## முள்ளியவளை மேற்கில் சம்பவம்



(முல்லைத்தீவு)

முள்ளியவளை நகரை மிக அண்மித்த பகுதியான முள்ளியவளை மேற்கு கிராம அலுவலர் பிரிவில் காட்டு யானை ஒன்றின் அட்டகாசத்தால் வாழைத்தோட்டமொன்று முற்றாக அழிவடைந்துள்ளது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் நடைபெற்றுள்ளது.இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவரின் வாழைத்தோட்டத்திற்கு உள்நுழைந்த குறித்த யானை தோட்டத்தை முற்றாக சேதப்படுத்தியதுடன் தோட்டத்தினுள் நின்ற ஐந்து தென்னை மரங்களையும் பிடுங்கி எறிந்துள்ளது.

வாழைத் தோட்டத்தைச் சூழ நெருக்கமாக மக்கள் குடிமனை காணப்படுகின்ற போதும் மக்கள் அனைவரும் நித்திரையில் ஆழ்ந்திருந்த காரணத்தால் அவர்களுக்கு எவ்வித ஆபத்தும் ஏற்படாத போதும் குறித்த பகுதிக்கு காட்டு யானைகளின் நடமாட்டம் இது முதல் தடவையென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு தகவல் வழங்கப்பட்டிருப்பதால் அவர்கள் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பார்கள் என தெரிவிக்கப்படுகின்றது. (2-310)




# சட்டவிரோத கடத்தல்,எல்லை தாண்டிய செயற்பாடுகளை கட்டுப்படுத்துவது கடற்படையினரின் பணியாகும்

## மன்னார் நீரியல்வளத் திணைக்களப் பிரதிப்பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார் மாவட்ட நீரியல்வள திணைக்களத்தின் அனுமதியின்றி அத்துமீறும் கடற்படையினர் தன்னிச்சையாக செயற்படுவதாக திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பீ.எஸ். மிராண்டா குற்றம் சாட்டியுள்ளார்.

மீனவர்கள் விடயத்தில் தலையிடவேண்டாம் என கடற்படையினருக்கு அறிவித்துள்ள போதிலும், சட்டத்திற்கு முரணாக அவர்கள் செயற்படுவதாகவும் வலியுறுத்தியுள்ளார்.

மன்னார் - முத்தரிப்புத்துறை கடற்பரப்பில் நேற்று முன்தினம் காலை சிலாவத்துறை கடற்படையினரால் 71 மீனவர்கள் கைது செய்யப்பட்டு எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளதுடன், கடற்படையினரால் அபகரிக்கப்பட்ட மீனவர்களின் 13 படகுகளும் மீளக் கையளிக்கப்பட்டன.

குறித்த மீனவர்கள் காப்புறுதி பற்றுச்சீட்டு மற்றும் அடையாள அட்டை பிரதி என்பவற்றை தங்கள் வசம் வைத்திருக்கவில்லை என்ற குற்றச்சாட்டில் சிலாவத்துறை கடற்படையினர் அவர்களை கைது செய்திருந்தனர்.

71 மீனவர்கள் கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான தகவலை அறிந்த மனனார் நீரியல்வள திணைக்களம், கடற்படை அதிகாரிகளிடம் கலந்துரையாடி மீனவர்களை விடுவித்ததாக, மன்னார் நீரியல்வள திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் பீ.எஸ். மிராண்டா தெரிவித்தார்.

இந்த நிலையில், மீனவர்கள் விடயத்தில் தலையீடு செய்வதற்கு கடற்படையினருக்கு அனுமதி இல்லை எனவும், சட்டவிரோத கடத்தல், எல்லை தாண்டிய செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதே, கடற்படையின் பணி எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடற்படையினரின் அத்துமீறும் செயற்பாடுகளை தடுக்கும் முகமாக நேற்று முன்தினம் பிற்பகல் 4 மணிக்கு சிலாவத்துறை கடற்படை முகாமில் விசேட சந்திப்பு ஒன்று விரைவில் இடம்பெறவுள்ளதாகவும் பீ.எஸ். மிராண்டா கூறினார்.

இந்த கலந்துரையாடலில் இராணுவத்தினர், கடற்படையினர், மன்னார் - நீரியல்வள திணைக்கள அதிகாரிகள் மற்றும் மீனவர் சங்க அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு குறித்த மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டபோது காப்புறுதி பற்றுச்சீட்டு மற்றும் அடையாள அட்டை பிரதி ஆகியவற்றை பரிசீலித்த சிலாவத்துறை கடற்படையினர் குறித்த மீனவர்களை கைது செய்திருந்தனர்.

நறுவிலிக்குளம் பிரதேசத்தைச் சேர்ந்த 60 பேரும், வங்காலை பிரதேசத்தைச் சேர்ந்த 4 பேரும், சிலாவத்துறை பிரதேசத்தைச் சேர்ந்த 7 பேரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)

# இலவச சைவநெறி செயலட்டை வழங்கல்

(வவுனியா)

வவுனியா சேக்கிழார் மன்றத்தினர் அறநெறிப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவர்களின் சைவ அறிவை மேம்படுத்தும் நோக்கில் இலவசமாக சைவநெறிப்பாட செயலட்டை ஒன்றை தரம் 6 வகுப்பிற்கு மேல் கல்வி பயிலும் மாணவர்களுக்கு வழங்க முன் வந்துள்ளது.

எனவே இச் செயலட்டையைப் பெற விரும்பும் அறநெறிப்பாடசாலைகள் 077 069 1582 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெறமுடியும் என சேக்கிழார் மன்ற செயலாளர் க.ஆனந்தகணேஸ் தெரிவித்துள்ளார். (2)

# வவுனியா சேக்கிழார் மன்றம் நடத்தும் சைவ நெறிப் போட்டி பரீட்சை-2016

எதிர்வரும் நவம்பர் மாதம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரின் குருபூசைத்தின நிகழ்வு நடைபெறவுள்ளது.

இக்குருபூசைத் தினத்தை முன்னிட்டு வவுனியா சேக்கிழார் மன்றம் பேச்சு, கட்டுரைகள் மற்றும் சைவநெறி எழுத்துப் போட்டி பரீட்சை போன்றவற்றை எதிர்வரும் 12 ஆம் திகதி வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் காலை 9 மணிக்கு நடத்தவுள்ளது. எனவே இப்போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் அரச பாடசாலைகள் மற்றும் அறநெறிப் பாடசாலைகள் 077 069 1582 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களைப்பெற்றுக் கொள்ள முடியும்மென சேக்கிழார் மன்றச் செயலாளர் க.ஆனந்தகணேஸ் தெரிவித்துள்ளார். (2)

### சட்டவிரோத மணல் அகழ்வு

# பெரிய குஞ்சுக்குளம் பகுதி மக்கள் வீதியை மறித்து மறியல் போராட்டம்

மன்னார் - மடு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பெரிய குஞ்சுக்குளம் பகுதியில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெறுவதனால் விவசாயிகள் பாதிப்படைவதாக தெரிவித்து நேற்று முன்தினம் மண் அகழ்வில் ஈடுபட்ட வாகனங்களை மறித்து மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

பெரிய குஞ்சுக்குளம் கமக்கார அமைப்பு, கிராம அபிவிருத்தி சங்கம், மாதர் கிராம அபிவிருத்தி சங்கம் ஆகியன ஒன்றிணைந்து இந்த போராட்டத்தில் ஈடுபட்டிருந்தன.

மணல் அகழ்வை நிறுத்தக்கோரி உயர் அதிகாரிகள் அரசியல் தலைவர்களுக்கு தெரியப்படுத்துமுகமாக இதன்போது கையெழுத்துக்களும் பெறப்பட்டுள்ளன.

குறித்த கிராமத்தில் 300 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் வசிப்பதாகவும் இக்கிராமம் மிகவும் பின்தங்கிய கிராமம் என தெரிவித்த மக்கள்,

கிராமத்தை சுற்றி மூன்று பக்கங்களாலும் மண் அகழ்வு இடம்பெறுவதாகவும் தெரிவித்த மக்கள் உடனடியாக இவை நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். (2-281)

# கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பிரதேசங்களில் நடமாடும் வியாபாரத்திற்குத் தடை

(வவுனியா)

தீபாவளி பண்டிகையினை முன்னிட்டு கரைச்சி பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களில் நிரந்தரமாக வியாபாரம் செய்யும் வர்த்தகர்களின் நலன்கருதி கடந்த 6 ஆம் திகதி முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் நடமாடும் வர்த்தக செயற்பாடுகள் அனைத்தினையும் முற்றாக தடைசெய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தலை மீறி செயற்படும் வர்த்தகர்கள் மீது பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும்.

பண்டிகைக்கால பொருட்களின் வர்த்தக செயற்பாடுகளுடன் தொடர்பற்ற வியாபார செயற்பாடுகளில் ஈடுபடுகின்ற வர்த்தர்கள் வியாபார செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு கரைச்சி பிரதேச சபையின் முன்னனுமதியைப்பெற்று மேற்கொள்ள முடியும் என கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை செயலாளர் கணேசன் கம்ஸநாதன் அறிவித்துள்ளார். (2)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள் – 94

## வீட்டுத்தோட்டத்தினூடாக வேளாண் காடுகளின் உருவாக்கம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

வாருங்கள் எம்மினிய உறவுகளே!

உலகளாவிய ரீதியில் காடுகளின் இழப்பு பெரிதாகவே உணரப்பட்டிருக்கின்றது. இந்த இழப்பினூடாக உலகமயமாக்கலில் தாக்கமும் ஏற்பட்டிருக்கின்றது என்றால் பாருங்களேன். இலங்கையிலும் காடுகளின் இழப்பு அதேவீதத்திலேயே இருப்பதாக கணிப்பிடப்பட்டுள்ளது.

1920ஆம் ஆண்டில் 49 சதவீதமாக இருந்த காடுகள் 2005 ஆம் ஆண்டில் 29.5 சதவீதமாக குறைந்திருக்கின்றது. இலங்கையில் 1990 இற்கும் 2000 இற்கும் இடையில் 26,800 ஹெக்டேயர் காடுகள் இழக்கப்பட்டுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இதன்படி வருடமொன்றுக்கு 1.14 சதவீதம் காடுகள் அழிக்கப்படுகின்றன. 2000ஆம் ஆண்டிலிருந்து 2005ஆம் ஆண்டு வரை இந்த வீதம் 1.43 ஆக உயர்ந்திருக்கின்றது. இனி நாம் என்ன செய்யலாம் என்ற அங்கலாய்ப்பே முடிவாகியிருக்கின்றது.

மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தவிக்க வேண்டியாயிற்று.

உணவுற்பத்திக்கான அடித்தளம் நிறைவாகவே பசுமைப் புரட்சியினால் இடப்பட்டது என்பது நிதர்சனமே. ஆனால் அதன் பின்னரான விளைவுகளில் ஒரு சில பாரதூரமாக இருப்பதனை உறுதி செய்தபோது இவ்வாறான புதிய யுக்திகளையும் அணுகுமுறைகளையும் பலமுறை நீண்டகால பரிசீலிப்பின் பின்னர் உறுதிசெய்து கொள்வதே



அவர்களது உற்பத்திப் பொருட்களைப் பற்றியும் உற்பத்தி செய்யவல்ல திறனைப் பற்றியும் இறுதியாக உலக உணவு ஸ்தாபனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட றியோ 20 எனும் உலகளாவிய மாநாடு நிறையவே அலசி ஆராய்ந்துள்ளது. இதில் சிறு விவசாயிகளின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கான வழிவகைகள் பற்றி பலமாக ஆராயப்பட்டுள்ளது. வீட்டுத் தோட்டத்தில் உள்ள தாவர வகைகளின் எண்ணிக்கையை நாம்

மரங்கள்,பல்பயன்தரும் மரங்கள் குறிப்பாக வருவாயைத்தரும் மரங்கள் மற்றும் கால் நடை தீவனமாக பயன்படும் மரங்கள், ஏறிகளுக்கு உதவும் மரங்கள் என்பனவற்றை இணைத்துக் கொளளலாம். மரங்களின் எண்ணிக்கையை நிர்ணயஞ்செய்தால் அவற்றுடன் ஏனைய தாவரங்களையும் இணைத்துக் கொள்ள எமக்குத் தேவையான பல்வகைத்தன்மை கிடைத்துவிடும். உணவுற்பத்தி வீட்டுத்தோட்டத்திலிருந்து அதுவும் இயற்கையையொத்த வீட்டுத்தோட்டத்து வேளாண் காட்டிலிருந்து கிடைக்க ஆவன செய்தல் வேண்டும். வேளாண் காடுகள் என்பன விவசாய நிலத்தில் மரங்களை நடுகை செய்வதன் மூலம் செயற்கையான காட்டினை உருவாக்குதலாகும். காடாக இருந்த இடங்களை கண்டபடி அழித்து நாம் குடியேறி இப்போது தொடர்ந்திருக்க முடியாதென்ற நிலை வந்தபின் அழித்த இடங்களில் மீண்டும் வேளாண் காட்டு மரங்களை நடுகை செய்ய முனைகின்றோம் அல்லவா. இயற்கையை அழித்து அழகும்

வீட்டுத்தோட்டங்களில் பல்பயன்தரும் மரங்களுக்கு முன்னுரிமை கொடுப்பது மிகவும் நல்லது. குறிப்பாக சீமைக்கிளுவை அல்லது கிளிறிசிடியா ஆகிய பல்பயன் தரும் மரத்திற்கு நடுகை செய்வதில் முன்னுரிமை கொடுப்பது சிறந்தது. கிளிறிசிடியாவின் பயன்பாடுகள் பல. அதனை வீட்டுத்தோட்டத்தில் பரந்த அளவில் நடுகை செய்து பயன்பாட்டை பெருக்கிக் கொள்ளலாம். இன்னும் பழமரங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கலாம். தினமும் ஒருபழமாவது உண்பதற்காகவாவது பழமரங்களை நடுகை செய்யலாம்.

எமது சூழலை நாமே

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 111

கலாய்ப்பே முடிவாகியிருக்கின்றது.

பசுமைப்புரட்சியின் பலன்களை நாம் உணவில் அதன் உற்பத்தியில் பெற்றிருக்கின்றோம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் எந்தவொரு தொழில்நுட்பமாயினும் அதனை தவறான வழியில் பிரயோகிக்கும் போது நாம் எதிர்பார்த்த பலன்களுக்கு மேலாக பாரதூரமான விளைவுகளையும் நாம் சந்திக்க வேண்டியேற்படுகின்றது. இது தவிர்க்கமுடியாததாக இருப்பினும் பசுமைப்புரட்சியின் விளைவாக திருந்திய கலப்பின பயிரினங்களை பயன்படுத்திய போது அவை உள்ளீடுகளில் முழுக்க முழுக்க தங்கியிருந்ததாலும் உள்ளீடுகளின் பாவனை பரிந்துரைக்கப்பட்ட அளவை விட பன்மடங்கு பெருகியதாலும் எமக்கும் சூழலுக்கும் இதனால் பாதகமான விளைவுகள் ஏற்படக் காரணமாயிற்று. இதனால் தற்போது நாம் இதிலிருந்து வெளியேறவும் முடியாமல் அதனை முழுமையாக உள்வாங்கவும் முடியாமல் எங்களூர் பெரியவர்கள் கூறியது போல

சாலப்பொருந்தும். எடுத்த மாத்திரத்தில் எமக்கு வேண்டியதை தருகின்றது என்பதற்காக நாம விரைந்து எந்தவொரு தொழில நுட்பத்தையும் கடைப்பிடிக்கக் கூடாது. பக்கவிளைவுகள் மற்றும் அதனால் ஏற்படக்கூடிய வேறு மறைமுகமான விளைவுகள் என்பனவற்றை நாம் கூர்ந்து அவதானித்து ஆராய்ந்து தொழில்நுட்பத்தை சரியானதும் முறையானதுமான வழியில் எமக்கு பயனைத்தரக்கூடியவாறு பயன்படுத்த வேண்டும். எமது தவறான செய்கையால் தொழில்நுட்பத்தை தவறானதாக காட்ட முயல்வது எமது விஞ்ஞான தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் தொழிற்றுறை அபிவிருத்திக்கும் இடையூறாக இருக்கும்.

வீட்டுத்தோட்டத்தைப்பற்றி பலவகையில் பலவாக நாம் கலந்துரையாடினாலும் அதிலும் இன்னும் பலவிடயங்கள் எமக்கு தெரியாத நிலையிலிருக்கின்றன. வீட்டுத் தோட்டம் எமது உணவுற்பத்திக்கு கணிசமான அளவு பங்களிப்பு செய்யவல்லது என்பதனை நாம் இன்னும் உணர்ந்துகொள்ள முடியவில்லையெனில் இதற்குமேல் உணவின்றித் தவிக்கும் மக்களை காப்பாற்றமுடியாமல் போய்விடும். குறுநில மன்னர்களான சிறிய விவசாயிகளைப் பற்றியும்

அதிகரிக்கும் போது அங்கே உயிர்ப்பல்வகைமையின் தன்னிறைவுக்கான நிலைகிடைக்க வாய்ப்புள்ளதலலவா. உயிர்ப்பல் வகைமையை வீட்டுத்தோட்டத்தில் இலகுவாக நாம் ஏற்படுத்திக் கொள்ளமுடியும். பல்வகைத் தாவரங்களைஅதிலும் எமது தேவைக்காக வளர்க்கக்கூடியதை இனங் கண்டுதெரிந்து வளர்க்க முடியும்.

குறிப்பாக வீட்டுத்தோட்டத்தில் நாம் வளர்க்கக்கூடிய மரங்களைப் பற்றி கவனம் செலுத்துவது நல்லது. வீட்டுத்தோட்டத்தில் வளரும் வளர்ந்திருக்கும் இன்னும் நாம் நடுகை செய்யப்போகும் மரங்களைப்பற்றிய தகவல்களைத் திரட்டினால் அவற்றின் பங்குபற்றியும் இன்னும் அவற்றை நாம் எவ்வாறு பயன்படுத்தப் போகின்றோம் என்பதையும் கவனத்திற்கொள்ளமுடியும். இங்கே மரங்களின் வயது, தண்டின் விட்டம்,உயரம், நிலமேற்பகுதியின் விட்டம் அல்லது குறுக்கு நீளம்,மரத்தின் வகை,கிடைக்கும் நிழலின் விஸ்தீரணம் மற்றும் பல்வகைப் பயன்பாடு என்பன முக்கியமான தரவாகக் கொள்ளலாம். வளர்க்கும் மரங்களின் எண்ணிக்கை,அதில் பழமரங்கள்,நிழல்

பார்த்து இப்போது அந்த இயற்கையை செயற்கையாக உருவாக்க முயற்சிக்கின்றோம். மனிதனின் செய்கையால் இயற்கையும் அவ்வப்போது சீறிச்சினந்து கொள்கின்றது. இவ்வருடம் இயற்கை சாதுவாக ஆனால் வழக்கத்துக்கு மாறாக மழையை பின்தள்ளி வைத்திருக்கின்றது. வழமையாக பெய்ய வேண்டிய இடங்களில் மழை எதிர்பார்த்த அளவு கிடைக்கவில்லை. சில இடங்களில் விவசாய செய்கையை முழுமையாக செய்ய முடியாதளவுக்கு ஏமாற்றியுமிருக்கின்றது. முளைவிட்ட நெற்பயிர்கள் கருகுவதும் விவசாய பெருமக்களை கலங்க வைத்திருக்கின்றது.

இதனால்தான் மிஞ்சியிருக்கின்ற இயற்கையையாவது நாம் பாதுகாக்க முயற்சி செய்வோம். அழிந்தது போக இருப்பதை நாம் மேலும் அழிக்காமல் பேணிப்பாதுகாப்பதுடன் வேளாண் காடுகளையொத்ததை வீட்டுத் தோட்டத்தில் உருவாக்க வேண்டும். வேளாண் காடுகளை வீட்டுத்தோட்டத்தில் நடுகை செய்யும் மரங்களூடாக உருவாக்கலாம். திட்டமிட்ட மரங்களின் நடுகை மூலம் வேளாண் காடுகளை நாம் மெல்ல மெல்ல கட்டியெழுப்ப வேண்டும்.

பாதுகாக்கவேண்டும். சூழலை மாசுபடுத்தும் பொருட்களின் பாவனையைக் குறைத்து சூழலை இயற்கையின் அழகில் வைத்திருக்கும் மரங்களை நடுகை செய்வதும் இயற்கையை பேணிப்பாதுகாக்கும் செயன்முறைகளுக்கு ஊக்கமும் கொடுக்கவேண்டும். இப்பூமித்தாயின் வனத்தை நாம் பேணிப்பாதுகாக்க வனத்தை வேளாண்மையில் உள்வாங்கி அதனைநாம் வாழும் வீட்டுத்தோட்டத்தினுள் விரும்பி உள்வாங்கிக்கொள்ள வேண்டும். நாம் நினைத்தால் இது முடியும். பூமித்தாயை நாம் வாழும் தேசத்தை வளப்படுத்த இயற்கையை மேம்படுத்த நாம் எமது சூழலைப் பாதுகாக்க வேண்டும். இன்னும் தெரிந்தெடுத்துஅரியவகை தாவரங்களை பயன்படுத்த முயற்சிக்கவும் வேண்டும். எமது உணவுப்பழக்கத்தை மாற்றிக் கொண்டால் இயற்கையாக கிடைக்கும் தாவரங்களை நாம் எமது உணவில் சேர்த்துக கொள்ள வாய்ப்புண்டு. இவற்றைநாம் வீட்டுத்தோட்டத்திலும் வளர்தது எமது தேவையைப் பூர்த்தி செய்து கொள்ளலாம்.

# விஞ்ஞான மேதாவளி ஆசிரியர் விஜயகுமார்



உலகம் எவ்வளவுதான் உன்னதமான வளர்ச்சியைக் கொண்டிருந்தாலும் ஒரு தேசத்தின் வளர்ச்சிக் குறிகாட்டியாகக் கல்வியே மிளிர்கிறது.

தனிமனித அகமியை மதியுரைகளூடாகப் புனிதப்படுத்தும் திறன் வாய்க்கப்பெற்ற ஆசிரியரைத் தெய்வமெனப் போற்றும் பண்பாட்டுக் கோலம் சிதறிப்போகாத வரைதான் அகிலம் அர்த்தம் வாய்ந்த தரிசனமாய்த் தென்படும். தானுருகி இருள் அகற்றும் ஜோதியான ஞானதேசிகன், மாணவரின் அறிவுப்புலத்தில் வேதியலை நிகழ்த்தி மேதினியை மேன்மையடையச் செய்துவிடுகிறான். கானகத்து மூங்கிலை வேய்ங்குழலாய் மாற்றும் வித்தகத்தைத் தன்னுட் புதைத்த மீயறிகையாளரிடம் கற்கும் கொடுப்பினை அனைவருக்கும் வாய்த்து விடுவதில்லை. இந்த வகையில் திரள் மாணவரை ஈர்க்கும் திறனோடு அறிவியற் தகவல் சேகரமாய் செயலனுபவக் கல்வியை வழங்கும் செயற்படுநரான ஆசிரியர் ந.விஜயகுமார் அவர்கள் 29.10.2016 அன்று பணிநிலை ஓய்வு பெறுதல் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர் குழுமத்திற்கு ஈடுசெய்ய இயலாத இழப்பென்றே கூற வேண்டும். நீள் அனுபவத்தின் பேரிடை வெளி பூரணமாக நிரப்பப்படுமா? என்ற கேள்வி வடமராட்சி கல்வியியற் சமூகத்திடம் இயல்பாகவே எழுவது அவரது தகைமைக்குச் சான்று பகர்கின்றது.

எளிமையின் வசீகரத்தோடு திகழ்கின்ற, நடராஜா விஜயகுமார் 29.10.1956 இல் பிறந்தவர். ஆரம்பக்கல்வியினை துன்னாலை ஞானசாரியர் கல்லூரியிலும் இடைநிலைக் கல்வியினை நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்திலும் கற்றுத் தேர்ந்தார். கல்லூரிப் பருவத்து அறிகைக் கோலங்களில் விஞ்ஞானத்தின் விழுக்காடு அதிகரித்தே காணப்பட்டது. எழுநூறு மில்லியன் சுவாசச் சிற்றறைகளிலும் ஆசிரியராக உருமாற வேண்டுமென்ற வேணவா நிரம்பித் தழும்பியது. இறையருள் சித்திக்க 25.10.1979 இல் முகிழ் நியமனம் வாய்த்து மாத்தளை எலமல் பொத்த முஸ்லிம் வித்தியாலயத்தில் சேவைக்கு கால் கோலிட்டார். ஒரே திசையை நோக்கி வீசும் காற்றோட்டம் காணப்படுகின்ற படை மண்டலம் போல் கொண்ட குறிக்கோளின் திசையின்றி வேறறியாத சிந்தையோடு ஏழு ஆண்டுகள் வெளி மாவட்டத்திலேயே பணியாற்றி வெற்றி கண்டார். சொந்தமண் திரும்பிக் கற்பித்தலை முன்னெடுத்த ந.விஜயகுமார் ஆசிரியருக்கு ஏழாவது கல்விக்கூடமாக பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி அமைந்தது.

வரலாற்று மகிமைமிகு ஹாட்லிக் கல்லூரியின் ஆசிரிய இழையத்தின் கலமாகி கனதியான தொழிற்பாட்டுக்கு ஆதாரமாகக் திகழ்ந்தார். தனிநபர் விரோதங்களைக் கடந்து அனைவரோடும் நட்புறவு கொண்டார். வேறு மூலகங்களோடு தாக்கத்தில் ஈடுபடாத ஆகன் போல் விழுமியவாயுவாக மனத்தடையின்றி மகிழ்வோடு பழகினார். பிறர்க்கு உதவுவதில் ஓவகைக் குருதிபோலப் பொது வழங்கியாகவே செயற்பட்டார். மாணவத் தோணிகளுக்கு கலங்கரை விளக்காகத் திகழ்ந்து தற்புதுமையான பயிற்று முறைக்கு உதாரணபுருஷனாக மிளிர்ந்தார். கற்பித்தலில் நூதனங்களை வெளிக்கொணர மாணவர்களிடம் நுட்பமான அகத்துறிஞ்சல் நிகழ்ந்தேறியது. தனக்கே உரித்தான கவர்ச்சியை வெளிப்படுத்திக் கற்பித்தலால் ஹாட்லியின் காந்தப் புலமாகவே விளங்கினார்.

ஆழமான அரசியல் தரிசனமும் சமூக அக்கறையும் ஆன்மீக நாட்டமும் உடைய இவர் மூடுமர்மங்கள் பொதிந்த நகைச்சுவையினை அவிழ்ப்பதில் வல்லவர். தலைமைத்துவத்தோடு தகுநயமாக நெருங்கி மதியூக மந்திரிபோலச் செயலாற்றும் திறன் படைத்தவர்.

தீவிர ஈடுபாடற்ற செயல்களைத் தவிர பிறிதொன்றிலும் கவனம் செலுத்தாத இவரது குணாதிசயம் வியப்பிற்குரியது. நெற்றியடி கருத்துக்களை வெகு இயல்பாகவே இவரது உதடுகள் உதிர்க்கும் அழகு நயஞ்செறிந்ததாகும்.

உடல் நலத்திற்கு உகந்த உணவை கொண்டாட்ட மனப்பாங்கோடு அருந்தும் போக்கினைத் தமிழ்ச் சூழலிலே காண்பது மிகவும் அரிதானது. தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக வயிறு நிரப்புவோர் மத்தியில் அலாதிப்பிரியத்தோடு ஆகாரங்களை அணுகுகின்ற ஆசிரியர் ந.விஜயகுமார் வியப்பின் குறியீடாகவே கொள்ளத்தக்கவர். வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தை நாடிச் சென்று ஞானத் தேடல் நிகழ்த்துவதும் குறிப்பிடத்தக்கது.

தன்னலமற்ற சேவையின் சமனான மறுதாக்கத்தினை அவரது குடும்பத்தின் எழுகையில் இனங்காணலாம். ஆண் பிள்ளைகளில் இருவர் மருத்துவராகவும் மூன்றாமவர் பொறியியலாளராகவும் காணப்படுகின்றனர். பெண்பிள்ளை விவசாய பீடத்திலே கல்வியினைத் தொடர்கிறார்.

வெற்றியின் புத்திரன் என்ற அர்த்தத்தையுடைய நாமங்கொண்ட ஆசிரியர் ந.விஜயகுமார் தனது ஓய்வுக் காலத்தில் தன் துணைவியான இதயகலா அவர்களின் இதயத்திலே கலாபூர்வமான பிரதிமையாகி தேக சுகத்தோடு பூரண இறையாசிபெற்று வாழ வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரிய நண்பர்கள்**
**வடமராட்சி**




# பாரிய நிதி மோசடிக்கு அர்ஜுன் மகேந்திரன் தான் பொறுப்புக்கூற வேண்டும்

## கோப் குழு அறிக்கையில் பரிந்துரை

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கியின் முறிகள் விற்பனையின் போது இடம்பெற்ற பாரிய நிதி மோசடிக்கு முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் பொறுப்புக்கூற வேண்டும் என்று தெரிவித்துள்ள கோப் குழுவின் அறிக்கை, அவர் உட்பட இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என பரிந்துரைத்துள்ளது.**



மத்திய வங்கியின் முறிகள் தொடர்பான கொடுக்கல் வாங்கலில் ஏற்பட்ட பாரிய நிதி மோசடி தொடர்பில் விசாரணை நடத்திய பொது வர்த்தக செயற்குழுவான கோப் குழுவின் விசாரணை அறிக்கையை அதன் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி நேற்று நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றுகையிலேயே இந்த பரிந்துரையையும் முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடிய நிலையில், அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட மத்திய வங்கி முறிகள் கொடுக்கல் வாங்கலில் இடம்பெற்ற பாரிய நிதி மோசடி குறித்த கோப் குழுவின் விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பித்து உரையாற்றிய கோப் குழுவின் தலைவரான ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி, 2015 ஆம் ஆண்டு பெப்ரவரி 27 ஆம் திகதி இடம்பெற்ற முறிகள் கொடுக்கல் வாங்கலின் போது, முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் நேரடியாக தலையீடு செய்துள்ளமை தமது விசார்ணைகளில் தெரியவந்துள்ளதாகத் தெரிவித்தார்.

இதனால் இலங்கை மத்திய வங்கியின் நம்பகத்தன்மை பாதிக்கப்பட்டுள்ளதுடன் குற்றம்சாட்டப்பட்டுள்ள பேர்பசுவல் டெரிஸ் நிறுவனம், பெருமளவு இலாபத்தை உழைத்துள்ளமையும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை குறித்த கொடுக்கல் வாங்கலுடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் அதிகாரிகளிடம் அறவிட நடவடிக்கை எடுப்பதுடன், நீதிமன்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட வேண்டும் என கோப் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்த நடவடிக்கைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படுகின்றனவா என்பதை ஆராய்வதற்கும் மேற்பார்வை செய்வதற்கும் மத்திய வங்கி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோப் குழு குறிப்பிட்டுள்ளது.

அதேவேளை மீண்டும் ஒரு முறை இவ்வாறான நிதி மோசடி இடம்பெறாது என்பதை உறுதிப்படுத்துவதற்கு முறிகள் விற்பனையின் போது விசேட கண்காணிப்புக் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்றும் கோப் குழு பரிந்துரைத்துள்ளது.

இந்த கோப் குழுவின் பரிந்துரைகள் தொடர்பில் குறித்த குழுவில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ள போதிலும், அறிக்கை தொடர்பில் உறுப்பினர்களிடையே கருத்து முரண்பாடுகள் காணப்படுவதாகவும் கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன்நெத்தி நாடாளுமன்றில் தெரியப்படுத்தினார். (இ-7-10)



தீபாவளி
சிறப்பு மலர் – 2016





Periyathampi
Auto A/C & Wiring
பெரியதம்பி AC & வயரிங்
சகல விதமான வாகனங்களுக்கும்
A/C and Wiring
வேலைகள் உத்தரவாதத்துடன்
செய்து கொடுக்கப்படும்
Happy Diwali
521 ஸ்ரான்லி வீதி (ஸ்ரேசன் பின்புறம்)
யாழ்ப்பாணம்.
T.P:- 077 387 1549
075 040 3468
தரமான உதிரிப்பாகங்கள்
உத்தரவாதத்துடன் மாற்றிக்
கொடுக்கப்படும்




அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்....
தற்பொழுது அண்ணாவின் அனைத்து உற்பத்திப் பொருட்களும்
நாடுபூராக பெற்றுக் கொள்ளும் வசதி செய்யப்பட்டுள்ளது
என வாடிக்கையாளர்களுக்கு மகிழ்வுடன் தெரிவிக்கின்றோம்
ஜீவாகாரம்
ANNA JEEVAKARAM
குழந்தைகள் முதல்
முதியோர்வரை பாவிக்க
உகந்த சத்துணவு
Anna Coffee
100% Pure Ground Coffee
அன்னா கோப்பி
ANNA SPICED COFFEE
Superbly Blended & Roasted to a Strict Formula....
எமது புதிய தயாரிப்புக்கள்....
ANNA Chinese NOODLES
ANNA SAMBRANI
அண்ணா தொழிலகம் - இணுவில்.
TEL: 021 - 2241565,
021 7200800, 0112 - 436063




கடந்த 25 வருடங்களாக
யாழ் மண்ணின் பாரம்பரிய
உணவுகளுடன்...
நியூ இன்பாலா
ஹோட்டல்
New
INPALA
HOTEL
Taste for Hunger...
Halal Food
Airconditioned @ Normal
Service Available...
259, K.K.S. Rood,
Jaffna.
Contact : 0777770689
0767846663
Orders are
undertaken
10/1, 1st Cross Street,
Vavuniya.
Contact : 0777770689
0767846663


தித்திக்கும் தீபாவளி
வாழ்த்துக்கள்...
காலங்கள் மாறலாம். அதுபோல் நாமும்.
புதிய பழக்க வழக்கங்கள். அனுபவங்கள்.
அங்கீகாரங்கள். பொறுப்புக்கள்.
இந்த மாற்றங்கள் எல்லாம் வளர்ச்சியின் ஒரு பாகம்.
இருப்பினும். இப்படியொரு மாற்றங்கள்
நமக்குள் இருந்தாலும்
சில பொருட்கள் நம்மிடையே
என்றுமே மாறுவதில்லை.
எத்தனையோ மாற்றங்களிலும்
ஒன்று மட்டும் என்றுமே
மாறாது. உறவுகள்...
தங்கமான உறவு
இப்பொழுது
புதிய பொலிவுடன்
நியூ உதயா
தங்கப்பவுண் நகை வியாபாரம்
ஜுவல்லர்ஸ்
Thank You
NEW Uthayaa
JEWELLERS
021 222 2031
newuthayajwellrs@gmail.com
No. 91, Power House Road, Jaffna
Newuthaya Jewellers
uthaya.new

# தீபாவளி

## சிறப்பு மலர் – 2016











# ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்









வழங்கப்படும் சேவைகள்: உடல்நிறை குறைத்தல்,தீராததலைவலி, பாரிசவாதம், முகநரம்பு பாதிப்பு, சோரியாசிஸ், ஞாபகமறதி, முள்ளந்தண்டுப் பிரச்சினை, வாத ரோகம், மூட்டுக்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பு, மாறாத சர்மரோகங்கள், வயிற்றுப்புண், நீரிழிவுரோகம், மாறாத புண்கள், நீண்டகால சளித்தொற்று, மூட்டுவிலகல், தோள்மூட்டில் ஏற்படும் வலி, பசியின்மை,குழந்தைகளுக்கு அடிக்கடி ஏற்படும் சளி, உணவு எடுக்க விரும்பமின்மை போன்றவற்றுக்கு சிறப்பான சிகிச்சையளிக்கப்படுகி-றது. பிறப்பிலே ஏற்படும் Cerebral Palsy, Autism Spectrum disorders (Global Mental Di sorders) இவற்றிற்கு கேரளா ஆயுர்வேத சிகிச்சை நடைபெறுகிறது.

நீரிழிவு நோய்க்கு குருதிக்குளுக்கோசின் அளவைக் கட்டுப்படுத்துவதற்கு நாவல் கோப்பி விற்பனை செய்யப்படுகிறது. இக்கோப்பியானது நீங்கள் உபயோகிக்கும் மருந்துகளுடன் சேர்த்து பானமாக உபயோகிக்கும் பட்சத்தில் 2-3 கிழமைகளில் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் குருதிக்குளுக்கோசு குறைவடைகிறது. பின் உங்கள் மருத்துவரின் ஆலோசனைப்படி மருந்துகளை குறைவாக உபயோகிக்கலாம். பக்கவிளைவற்றது.

## *முள்ளந்தண்டு பிரச்சினைக்கு தீர்வு*

யாழ்ப்பாண.இந்திய கேரள ஆயுர்வேத, சித்தமருத்துவ முறைகளை உள்ளடக்கிய பக்க விளைவற்ற முற்றிலும் மூலிகைகளால் தயாரிக்கப்பட்ட மருந்துகள் மூலம் சிகிச்சையளிக்கப்படுகிறது. உங்களுக்கு ஏற்பட்ட முள்ளந்தண்டுப்பிரச்சினைகளுக்கு சத்திரசிகிச்சையின்றி ஆயுர்வேத சிகிச்சையினால் 2 வாரங்களில் தீர்வளிக்கப்படுகிறது.

சித்த ஆயுர்வேத, பாரம்பரிய மருத்துவ சேவையை தினமும் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 6 மணிவரை பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இல. 021 222 2537, 075 041 3579, 077 820 1195 முற்பதிவு அவசியம்

Dr.G.Sritharan B.S.M.S (SL) M.Phil (Jaffna.) ,
Dr(Mrs) S.Anpuchelvy B.S.M.S (SL),M.D(S)(India),
Herbal Health Care Centre
65, கே.கே.எஸ் வீதி, கொக்குவில்.
(பூநாறி மரத்தடிக்கும் கொக்குவில் சந்திக்குமிடையில்)









அரச அங்கீகாரம் பெற்ற "A" தர சாரதிப் பயிற்சிப் பாடசாலை

# நியூ நெல்சன் லேணர்ஸ்



# New Nelson Learners

அனைவருக்கும் இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

- சாரதி பயிற்சிகள் எமது அலுவலகத்தில் இருந்து ஆரம்பிக்கப்படும்.
- சகல வாகனங்களுக்கும் அனுபவம் மிக்க சாரதிகளால் சிறந்த முறையில் பயிற்றுவித்து மிக விரைவாக சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.
- எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வகுப்புகள்.
- அதிகூடிய பயிற்சி நேரங்கள். அதிகூடிய பயிற்சிக் காலங்கள். தவணைமுறைக் கட்டணங்கள்.
- வீதி ஒழுங்கு நூல் இலவசமாக வழங்கப்படும்.
- நவீன வாகனங்களில் வாகனப் பயிற்சிகள்.



## கிளைகள்

இல.97 A,
பருத்தித்துறை வீதி,
நெல்லியடி.
021 226 1393,
077 111 3382

இல.89, கண்டி வீதி
சுண்டுக்குளி
யாழ்ப்பாணம்.
021 222 4527
077 358 1916

பஸ் நிலையம்,
சுன்னாகம்
077 715 0097
021 492 3732

சீரணிச் சந்தி,
சண்டிலிப்பாய்.
021 225 6955
077 794 2312/ 071 735 8440

காவிகோயில் வீதி,
சாவகச்சேரி
021 492 3114
077 761 1686

பிரதான வீதி,
வல்வெட்டித்துறை,
077 557 3711
021 492 3733



# சாரங்கா
## நகை மாடம்





**இல.157/I, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி 021 222 6972, தொலைநகல்: 021 222 8869**



# Saranka
## Nakai Maadam

**Sharanga Money Exchange (pvt) Ltd.**

**No.157/1, Kasthuriar Road, Jaffna.**
**Tel: 021 222 6972, Fax: 021 222 8869.**
Email:sarankajewellers@yahoo.com
Web: www.saarangajewellers.com



எமது வாடிக்கையாளர்கள்
அனைவருக்கும்
தீபாவளி
நல்வாழ்த்துக்கள்.




## வேதாந்தமட குருபீடாதிபதியின் தீபாவளி ஆசிச்செய்தி



தீபாவளிப் பண்டிகை, எதிர்மறை சக்திகள் அழிந்து புத்தொளி பிறப்பதன் அடையாள மாகக் கொண்டாடப்படுகிறது. தீபத்திற்கு ஒளி ஏற்றுவது போல வாழ்க்கையிலும் அன்பு எனும் அகலில் பாசம் எனும் எண்ணெய் ஊற்றி, தர்மம் எனும் ஒளியை அதில் ஏற்ற வேண்டும். பாசத்தோடும் அன்போடும் தர்மம் செய்யும் போது மனதில் இருள் அகன்று ஒளி பிறக்கும். அவ்வாறு மனதில் ஒளி பிறக்கும் பொழுது எதற்காகப் பிறந்தோம்,எதற்காக வளர்ந்தோம், எதற்காக வாழ்கிறோம் என்னும் ஞானம் பிறக்கும். அத்தகைய மெய்ஞ்ஞான நிலையை அடைவதே உண்மையான வாழ்க்கையுமாகும். ஒவ்வொருவரும் தங்களைத் தாங்களே விரும்புவது போல மற்றவர்களையும் விரும்ப வேண்டும். புத்தாடைகள் அணிந்து, பலகாரம் சாப்பிட்டு, பட்டாசுகள் வெடித்து, உறவினரைச் சந்தித்து உற்சாகம் கொள்ளும் விழாவாக மட்டுமே தீபாவளியைக் கருதிவிடக்கூடாது.

நம்மைவிடப் பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு நாம் உதவிடும் விழாவாக தீபாவளி இருக்க வேண்டும். ஒருவர் செய்வதில் நல்லது எது, கெட்டது எது, உண்மை எது,நேர்மை எது, ஒழுக்கம் எது என்பதையெல்லாம் ஆன்மா உள்ளிருந்து உணர்த்திக் கொண்டே இருக்கும்.

அதை உணர்ந்தும் உணராதது போல் அறிந்தும் அறியாதது போல் செயற்படக்கூடாது. மக்களிடம் அருள்நோக்கம் பெருக வேண்டும். ஆனால் இப்போது எல்லாமே பொருள் நோக்கம் ஆகிவிட்டது. இப்படியாக நற் குணங்கள் மக்களிடமிருந்து மாற, மாற,இயற்கையும் தன் இயல்பான தன்மைகளிலிருந்து மாற்றம் அடைகிறது. சீற்றம் பிறக்கின்றது. உண்மையான அன்பும், நேர்மையான பண்பும், நேசமுள்ள பாசமும், பதில் உபகாரம் எதிர்பார்க்காத தர்மமும் பெருகப் பெருக , பேரழிவுகளும் தடுக்கப்படும் என்பதை அறிய வேண்டும். கடல் அலை போல் மனம் அலைபாயக்கூடாது. 'மேலே அலைபாய்வதாகத் தெரிந்தாலும், கடல் உள்ளுக்குள் அமைதியாக உள்ளது போல், வெளியே பரபரப்பாகத் தெரிந்தாலும் மனிதன் மனதின் ஆழத்தில் அமைதி வேண்டும், அடக்கம் வேண்டும், செய்யும் தர்மத்தை மகிழ்ச்சியோடு செய்ய வேண்டும்.

நல்லொளி உங்களுடைய வாழ்விலும் பிரகாசிக்க தீபாவளி நல்வாழ்த்துக்களுடன் ஆசி கூறி குருவருளையும் திருவருளையும் வேண்டி பிரார்த்திக்கிறோம்.

**ஸ்ரீமத் வேதவித்தியாசாகர சுவாமிகள்**
**8 ஆவது குருபீடாதிபதி**
**ஸ்ரீசிவகுருநாதகுருபீடம்**
**மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமம்**
**வேதாந்தமடம்.**

## இன்பங்கள் மலரட்டும்



துன்பங்கள் தொலைந்து இன்பங்கள் மலரும் திருநாள் தீபாவளி. இந்தப் பண்டிகையை மக்கள் அனைவரும் சந்தோசமாக கொண்டாடுவதற்கு காரணகர்த்தா நரகாசுரன். ஆதிசக்தி பீடத்தின் தலைவி அன்னை காமாக்யா தேவியை அவன் வணங்கி வந்தான். காமாக்யா தேவிக்கு திருக்கோவில் கட்டினான். மகாவிஷ்ணுவின் கட்டளையால் காமாக்யா தேவி அசுரர்களுக்கும் தேவர்களுக்கும் பிரச்சினைகளோ சண்டை சுண்டைகளோ வராமல் பாதுகாத்து வந்தார். மகாவிஷ்ணு தன் பேராற்றலை, தன் அருட்சக்தியை நரகாசுரனுக்கு வழங்கினார். பாணாசுரன் என்ற விஷஜந்து இவரோடு கூடியது. புத்தியை மாற்றியது. வசிஷ்டர் சாபம் வந்தது. மகா விஷ்ணுவுக்கு கொடுத்த வாக்கை நரகாசுரன் மீறினான். மகாவிஷ்ணு மதியாலும் சத்யபாமாவின் உதவியாலும் நரகாசுரனை வீழ்த்தினார். இன்று தீபாவளி நடக்கும் நன்மைகளை கெடுப்பதற்கு என்றே தீய சக்திகள் உலகு எங்கும் உலாவுகின்றன.

அவற்றை கண்டு மயங்கி, புத்தியை நிலை தடுமாற விட்டு தன்னைத்தான் அழித்து கொள்கின்ற நிலைமை வந்து விடுகிறது. மகரிஷிகள், ஆத்மஞானிகள், வேதாத்திரிகள் எல்லாம் எல்லாம் நடமாடும் தெய்வங்கள் ஆவார்கள். இவர்களை மதிக்க வேண்டும் என்ற பாடத்தை நாம் கற்றுக் கொள்ள வேண்டும். காமாக்யதேவியின் செல்லப் பிள்ளையான நரகாசுரன்தான் அவருக்கு திருக்கோவிலை கட்டினார். காமாக்யதேவி நரகாசுரனுக்கு கொஞ்சம் கருணை காட்டி இருக்கலாம். ஆகவே உயர்ந்தவர்கள், உத்தமர்களுக்கு தீங்கு செய்யாமல் இருக்க வேண்டும். அப்போதுதான் தெய்வம் நம்மை காப்பாற்றும். ஆணவம், அகங்காரம் கூடாது என்ற பேருண்மையை தீபாவளி மூலம் நாம் கற்றுக் கொள்ளலாம். அனைவருக்கும் தீபாவளி நல்லாசிகள்.

**சர்வே ஜனகா சுகினோ பவந்து**
**இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க**
**தமிழ் முகில்**
**சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் (ஜே.பி), இந்து மத குரு பீடாதிபதி, பிரதமகுரு**
**வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்,**
**வல்வெட்டித்துறை.**



### ஆடம்பரம் இம் முறை வேண்டாம்

சோகத்தில் இந்தமண் தோய்ந் திருக்கும் போது
சோக்காக வேண்டாம் தீபாவளி!
சமாராக இருக்கட்டும் தேகத்தில் இம் முறை
தித்திப்பு வேண்டாம் தீபாவளி இம்முறை
தெய்வங்களுக்காகட்டும்
(கே. எஸ் . சிவஞானராஜா)

### மலர்ந்தது நல் தீபாவளி

ஆண்டுக்கு ஒரு முறை மலரும் ஆனந்தத் தீபாவளியே!
நானிலத்தில் பாவங்கள் –அழிந்து
நன்மைகள் பெருகி மலரட்டும் நல் தீபாவளி
பண்டைய பண்பாட்டுக் கலாசாரத்தை
எடுத்தியம்பும் நல் தீபாவளியே!
பட்டாடை உடுத்துப் பட்டாசு கொளுத்தி
பலகாரம் பல உண்டு மகிழும் நல் தீபாவளி!
வரம்பு மீறும் வன்முறைக் கலாசாரத்தால்
வாழ்வில் நிம்மதியை இழந்துவிட்டோம்.
உன் தீப ஒளியால் தீயவரை எரித்துவிடு
பெருகட்டும் நல்ல தீப ஒளி மலரட்டும் நல் தீபாவளி
(நயினை விசு. --இராச நாயகம்)

### தீதனைத்தும் நீங்கத் திருமாலை வணங்குவோம்

வேதன உயர்வுக்காய் வாடும் ஊழியர்
வேதனை நீங்கிட வேண்டி
ஆதரவு தேடி இல்லத்திற்காய் அல்லலுற்று
அழுவோர்க்கு ஆறுதல் வேண்டி
பாதகச் செயல்களால் பாதித்துப் பீதியுற்றோர்
பயமின்றி பயணிக்க வேண்டி
தீதனைத்தும் நீங்கிட இத் தீபாவளித் திருநாளில்
திருமாலைப் பணிந்து வணங்குவோம்
(குளப்பிட்டி க. அருமைநாயகம்)

## இருளை அகற்றி ஒளியை ஏற்றுவோம்



ஒளியின் பெருவிழாவான தீபாவளி திருநாளைக் கொண்டாடும் இந்துசமய சகோதரர்கள் அனைவர்க்கும் அன்பான தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம். குடும்ப உறவுகளிலும் நட்பு வட்டங்களிலும் நடைபெறும் கொண்டாட்டங்கள் எப்போதும் மகிழ்வானவை. அன்பையும் உறவையும் வளர்ப்பவை. இந்த வகையில் இப்பெருவிழா உங்கள் குடும்ப மற்றும் நட்பு உறவுகளைப் புனிதப்படுத்தி புதியதாக்கி அன்பையும் புரிந்துணர்வையும் எதிர்கால நம்பிக்கையையும் தரும் ஒரு விழாவாக அமைய வேண்டுமென வாழ்த்துகிறோம்.

இருளைப் பழிப்பதைவிட ஒளியை ஏற்றுவதே சிறந்தது என்று கூறப்படுவதை நாம் அறிவோம். ஒளியை எல்லோரும் விரும்புகிறார்கள். இருளைப் பார்த்து எல்லோரும் பயப்படுகிறார்கள். இருளுக்கும் ஒளிக்குமான போராட்டத்தில் ஒளியே வெல்ல வேண்டும். நன்மைக்கும் தீமைக்குமான போராட்டத்தில் நன்மையே வெல்ல வேண்டும்.

இருள் நிறைந்த துன்பமான வேதனைமிக்க வாழ்வை விடுத்து ஒளிமிகுந்த மகிழ்ச்சியான வாழ்வையே எல்லோருக்கும் நாம் ஆசிக்கவேண்டும். இதையே நற்செய்தி ஏடுகள் பின்வருமாறு தெரிவிக்கின்றன.

"நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீகள்" எவரும் விளக்கை ஏற்றி மரக்காலுக்குள் வைப்பதில்லை. மாறாக விளக்குத்தண்டின் மீதே வைப்பர். அப்போதுதான் அது வீட்டில் உள்ள அனைவர்க்கும் ஒளி தரும். இவ்வாறே உங்கள் ஒளி மனிதர்முன் ஒளிர்க. அப்பொழுது அவர்கள் உங்கள் நற்செயல்களைக்கண்டு உங்கள் விண்ணக தந்தையைப் போற்றிப் புகழ்வார்கள்". (மத்தேயு 5:14 -16)

இந்த ஒளியின் விழாவில் நாம் ஒளியை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவே அழைக்கப்படுகிறோம். வாழ்வில் நம்பிக்கை இன்றி விரக்தியில் இருப்போர் - எல்லோராலும் கைவிடப்பட்டு வீடுகளிலும் வயோதிப இல்லங்களிலும் தனிமையில் வாடுவோர் - வைத்தியசாலைகளிலும் வீடுகளிலும் வருத்தத்தில் இருப்போர் - சிறையிலும் தடுப்பு முகாம்களிலும் அல்லற்படுவோர் - அடுத்த நேர உணவு என்ன - யார் எமக்குத் துணை என ஏங்குவோர் - தாம் புரியப்படவில்லை தம் எண்ணங்கள் ஏற்கப்பட வில்லை என ஏங்குவோர் இவர்களே இன்று இருளில் இருப்பவர்கள். இவர்களுடைய வாழ்வில் ஒரு தரிசிப்பால் - ஒரு அன்பான வார்த்தையால் - அமைதியான செவிமடுத்தலால் - ஒரு நம்பிக்கையூட்டும் செயலால் - ஒரு சிறிய அன்பளிப்பால் - ஒரு நேர உணவால் ஒளியைக்காட்ட முடியுமாயின் அதுவே நாம் கொண்டாடும் சிறந்த தீபாவளிப் பெருவிழாவாகும். உங்கள் ஒளி மனிதர் முன் ஒளிர்க என்ற வார்த்தைகளை நம்முடையதாக்குவோம்.

**மேதகு கலாநிதி யஸ்ரீன் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை**
**யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்**

## செஞ்சொற்செல்வரின் தீபாவளிச் செய்தி



இந்துக்களின் இனிய பண்டிகைகளில் தீபாவளித்திருநாள் மிகவும் முக்கியமா னது. அறம் வென்று அதர்மம் தோற்ற த்தை வாழும் மக்களுக்கு உணர்த்துவதற் காக இத்திருநாள் கொண்டாடப்படுகிறது. அதர்மமான காரியங்களைச் செய்த நரகா சூரன் தான் செய்த தவறை உணர்ந்து உலகத்திடம் மன்னிப்பு கேட்ட நாளே தீபாவளி. இடர் செய்பவர்கள் எம்மைச் சூழ்ந்திருக்கும் போது இருளில் வாழ்வதாகவே கருதுகி றோம். இடரின்றி வாழ்வதற்கு இறைபக்தியே அனைவரு க்கும் தேவை. எம்மண்ணில் இறைபக்தி ஓங்கி வளரு மானால் எல்லாமே தீர்ந்துவிடும். தீபாவளித் திருநாளில் விடிவு கேட்டு விளக்கேற்றி வணங்குவோம். இயன்றவரை பிறருக்கு இடையூறின்றி வாழ முற்படுவோம். நாம் செய்த நல்ல காரியங்களை எண்ணி மகிழ்வோம். நன்மை செய்ய வேண்டிய காலத்தில் நாம் நன்மை செய்ய தவறியதையிட்டு இறைவனிடம் மன்னிப்பு கேட்போம். நல்ல நாள் பெருநாட்க ளிலாவது கடவுளிடம் நாம் செய்த தவறுகளுக்காக மன்னிப்பு கேட்கப் பழகுவோம். தீபாவளி திருநாள் எம்மை நாம் திருத்துவதற்குரிய திருநாள். அகந்தையை ஒழித்து அனைவரையும் அரவணைக்கும் நன்னாள். சாதிக்கப் பிறந்த மனிதன் தினமும் சஞ்சலப்பட்டுக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை. புறப்படுவோம். புதுமையான வழியில் எம் பயணத்தைத் தொடருவோம். கருணையையும் காருணியத்தையும் அரணாகக் கொண்டு எம் கடமைகளைச் செய்வோம். பகையை வளர்க்காமல் பிறரைப் பண்பினால் வெல்லுவோம். மூத்தோரை மதிப்போம். இளையோரை வாழ்த்துவோம். இந்த மனிதனைச் சந்திப்பதனால் ஆறுதல் கிட்டும் என மற்றவர் உள்ளம் மகிழ வாழ்வோம். தீபாவளி நாளில் புதிய ஆடை சூடுவது போல புதிய எண்ணங்களையும் எம் உள்ளத்திற்கு வழங்குவோம். தர்மம் ஒரு நாளும் தோற்பதில்லை. அதர்மம் ஒரு நாளும் நிலைப்பதில்லை. இது அனைவரும் அறிந்த உண்மை. தீபாவளித் திருநாளை எங்களை நாங்கள் புனிதப்படுத்தும் நாளாக கருதி மகிழ்வுடன் கொண்டாடுவோம். அல்லலுறுபவர்களுக்காக ஆண்டவனை மன்றாடுவோம். வைத்தியசாலைகளிலும் சிறைக்கூடங்களிலும் அகதிமுகாம்களிலும் ஆதரவற்ற இல்லங்களிலும் வாழ்வோருக்காக ஒரு நிமிடமாவது பிரார்த்திப்போம். கடவுள் எமக்கு தந்தவற்றிற்கு என்ன கைம்மாறு செய்வோம் என சிந்தித்து தீபாவளியை பிரார்த்தனைக்குரிய நாளாக கருதி வழிபாடு செய்து வாழ்வாங்கு வாழ்வோமாக.

**கலாநிதி ஆறு.திருமுருகன்**
**தலைவர், ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,**
**தெல்லிப்பழை.**
**தலைவர், சிவபூமி அறக்கட்டளை**
**உப தலைவர்,**
**அகில இலங்கை இந்துமாமன்றம்.**

## தீபாவளித்திருநாளை முன்னிட்டு அகில இலங்கை இந்துமா மன்ற அறிக்கை

நாம் கடந்த காலத்தில் குறிப்பிட்டதுபோல் இந்நாட்டில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் தீபாவளியைக் களிப்புடன் கொண்டாடும் நிலை இவ்வாண்டும் எம்மக்களுக்குக் கிட்டவில்லையென்பதே யதார்த்தமாக உள்ளது. தீபாவளியை தேசிய பண்டிகையாகக் கொண்டாட அரசாங்கம் திட்டம் தீட்டுவதாக ஊடகங்கள் வாயிலாக அறிந்தோம். இந்நிலையில் இலங்கை இந்து மன்ற அமைப்புக்களினதும் ஆலய நம்பிக்கைப் பொறுப்புக்களினதும் ஒன்றியமாக இந்துக்களின் உச்ச நிறுவனமாகத் திகழும் "அகில இலங்கை இந்து மாமன்றம்" இந்து மக்களின் நிலைப்பாட்டை எடுத்துக்காட்ட கடமைப்பட்டிருக்கிறது. தீபாவளியன்று இறைவனை நினைத்து வழிபட்டு இப்புனித நன்னாளில் இந்துமக்கள் தமது ஆன்மீகப்பாதை தவறாது இறைவழிபாட்டில் ஈடுபட வேண்டுமென்பதே எமது வேண்டுகோளாகும். இதுவே, எமது மக்கள் சொல்லொணாத் துன்பங்களைச் சந்தித்த போதெல்லாம் துணிவுடன் எதிர்நீச்சல் போடும் தைரியத்தை எம்மக்களுக்குக் கொடுத்து வந்திருக்கிறது. சிறையில் வாடும் எமது உடன் பிறப்புக்களை விடுதலை செய்யாது இக்கொண்டாட்டங்களை முன்னெடுக்க இந்து மக்கள் தயாராகவில்லை. தொடர்ந்தும் முகாம்களில் சொல்லொணாத் துயரத்துடன் வாழும் எம்மக்களை அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்திவிட்டு தீபாவளியைத் தேசிய பண்டிகையாகக் கொண்டாட அரசு ஆலோசிக்க வேண்டும். காணாமல் போனோர் தொடர்பாக அவர்களை இழந்து துடிதுடித்துக் கொண்டிருக்கும் குடும்பத்தினருக்கு சரியான தீர்வைப் பெற்றுத்தராமல் சொத்து சுகமெல்லாம் இழந்து நடைபிணங்களாக வாழும் எமது மக்களிற்கு அவர்களால் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வொன்றைத் தராமல் இதனைத் தேசியப்பண்டிகையாகக் கொண்டாடுமாறு கேட்க முடியாது. யுத்தத்தால் கொன்று குவிக்கப்பட்ட அப்பாவி மக்களின் காயத்தை ஆற்றுவதற்காக சர்வதேச விசாரணையை நடத்தி அவர்களுக்கான மன ஆறுதலை கொடுக்குமாறும் அம்மக்களை அவர்தம் துயர நிலைகளில் இருந்து முற்றாக வெளிக் கொணருமாறும், அவர்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுமாறும், அவர்தம் சொந்த மண்ணில் நிம்மதியாக வாழ வழிசெய்யுமாறும், அரசைக் கேட்டுக் கொள்கின்றோம். நாம் இந்நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்காக விசேடமாக இந்து மக்களுக்காகக் குரல் கொடுக்க என்றும் தயங்குவதில்லை. எனவே ஜனாதிபதி, பிரதமரே, நாம் சுட்டிக்காட்டிய எம்மக்களின் ஆதங்கங்களை நிவர்த்தி செய்யுங்கள். தாங்கள் கைகோர்த்து முன்னகர்த்தும் நல்லாட்சியில் எமது மக்களிற்கான விடிவு கிடைக்க வேண்டும்-கிடைக்குமென எம் மக்கள் நம்புகின்றனர். அதுவரை எம்மக்கள் தீபாவளிப் பண்டிகையை இறை வழிபாட்டுடன் அமைதியாக கொண்டாட வேண்டுமே ஒழிய தேசிய பண்டிகையாகக் கொண்டாட முடியாதென்பதையும் வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம்.

| | |
|---|---|
| **தலைவர்** | **வே. கந்தசாமி** |
| **கந்தையா நீலகண்டன்** | **பொதுச்செயலாளர்** |



# தீப ஒளி பிறக்கும் தீபாவளி

உலகமெங்கும் வாழுகின்ற இந்து மதத்தினர் வருடந்தோறும் தீபத் திருநாளாம் தீபாவளியை மிகச் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இது மிகவும் பழைமையான திருநாளிளொன்றாகும் என்பது வெள்ளிடைமலை. தீபாவளியை புராதன காலத்திலிருந்து கொண்டாடி வருகின்றமையினால் பல ஐதீகங்கள் இவ்விழாவில் தொடர்புபட்டிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாகவுமுள்ளது. ஐப்பசி மாத அமாவாசைக்கு முன்னரும் திரயோதசி, சதுர்த்தசி, அமாவாசை அதனையடுத்து கார்த்திகை சுக்கில பிரதமை ஆகிய நான்கு நாட்களும் தீபாவளி தொடர்புடைய தினங்களாகும். தீபாவளி என்ற சொல்லுக்கு தீபங்களின் ஆவளி அல்லது வரிசை என்பது பொருளாகும். எனவே மேற்குறிப்பிட்ட நான்கு நாட்களும் தீபச்சுடர் ஏற்றுவதை பிரதான சடங்காகக் கொண்டுள்ளது எனவும் கொள்ளலாம். இது தொன்று தொட்டுப் பின்பற்றப்பட்டு வருகின்றமை கண்கூடு.

முதலில் வருகின்ற சதுர்த்தசிக்கு நரசதுர்த்தசி என்று நாமமிடப்பட்டுள்ளது. அதிகாலை நான்கு நாழிகையில் சதுர்த்தசியிருக்கும் நாளில் அருணோதய காலத்திற்கென்று நரசு சதுர்த்தசி ஸ்நானம் விதிக்கப்பட்டுள்ளது. காலையில் நித்திரை விட்டெழுந்து தீபச்சுடர் ஏற்றி வைத்து அதில் இலக்குமியைத் தியானிக்க வேண்டும். பழம், வெற்றிலை, பாக்கு, எண்ணெய், தின் பண்டங்கள் என்பவற்றை இலக்குமி நாராயணருக்கு நிவேதனம் செய்ய வேண்டும். இலக்குமி அருள் பெறுவதற்காக தாம்பூலம் தரித்துக் கூடுமானால் மனைவியின் கையால் தலைக்கு எண்ணெய் இட்டுக் கொள்ள வேண்டும்.

அந்த எண்ணெயில் இலக்குமி வீற்றிருப்பதாகவும் அன்றைய தினம் ஸ்நானத்திற்கு பயன்படுகின்ற வெந்நீரில் கங்கை வசிப்பதாகவும் புராணங்கள் எடுத்து இயம்புகின்றன.

அன்று அருணோதய நேரத்தில் எண்ணெய் தேய்த்து நீராடுவோர் கங்கையில் நீராடியதற்கு ஒப்பாகும் என்பதால் அதற்குரிய பயனைப் பெறுகின்றனர். அருணோதய காலத்தில் சந்திரன் வானில் தோன்றிய பின்வரும் காலம் ஸ்நானத்திற்கு உசிதமாகும் என்று கூறினாலும் மிகையாகாது.

தீபாவளி என்பது ஒளித் திருநாளாகும். அறியாமை, அகந்தை, மமதை முதலான இருளிலிருந்து விடுபட்ட நரகாசுரன் என்னும் அரக்கனின் வேண்டுதலுக்கு கிடைத்த அருளே தீபாவளித் திருநாளாகும். நரகாசுரன் இறுமாப்புடன் தேவர்களுக்கு இன்னல், இடர்களைக் கொடுக்கவே அவனை மகா விஷ்ணு அடக்கினார். அவ்வேளையில் தான் இருளிலிருந்து விடுபட்டு இறந்த தினத்தை உலகில் வாழுகின்ற இந்துக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொண்டாட வேண்டுமென வேண்டினான். அதுவே தீபாவளிப் பெருநாளாக பரிணமித்தது என்றும் கூறலாம்.

தீபாவளியன்று காலையில் இந்துக்கள் எல்லோரும் என்ணெய் வைத்து ஸ்நானம் செய்து புத்தாடை உடுத்து வீட்டிலும் கோயிலிலும் சுவாமி தரிசனம் மேற்கொண்ட பின் தத்தமது வசதிக்கேற்ப பல்வகை தின் பண்டங்களை உண்டு மகிழ்வதே தீபாவளி பண்டிகையாகும். வீடுகளிலும், கோயிலில்களிலும் தீபங்களை ஏற்றுவதும் ஒரு வழிமுறையெனலாம். இவைகள் அனைத்தினதும் உள்ளார்ந்த தத்துவம் ஞான ஒளிக்கான வழிகளை நாம் கடைப்பிடிக்க வேண்டுமென்பதேயாகும்.

தமிழகத்தில் தீபாவளியன்று காலையில் அனைத்து சம்பிரதாய நிகழ்வுகளை முடித்த பின்னர் தீபாவளிப் பண்டிகை கொண்டாடப்படும். நண்பரகள், உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று "கங்கா ஸ்நானம் ஆயிற்றா?" என்று விசாரிப்பதும் வேலைக்காரர் களுக்கு வெகுமதி அளிப்பதும், அறுசுவையுடன் விருந்துண்பதும் அன்றைய தினம் அவசியம் செய்ய வேண்டிய கருமங்களாகும். இரவில் திரயோதசி வரும் நாளில் யமனுடைய திருப்தியை உத்தேசித்து யமதீபகானமும், பகலில் சதுர்த்தசி வரும் நாளில் யமதர்ப் பணமும் மேற்கொள்ள வேண்டும் என்று சாஸ்திரங் கள் கூறுகின்றன.

வட இந்தியாவிலும் மேலை இந்தியாவிலும் உள்ள இந்துக்கள் பெரும்பாலும் விக்கிரம தசாப்தத்தைக் கைக்கொள்வர். இந்த சகாப்தத்தின்படி ஆண்டு பிறப்பு கார்த்திகையிலேயாகும் என்றும் விக்கிரம சகாப்தத்தை ஏற்படுத்திய விக்கிரமமாதித்தியன் இந்தக் கார்த்திகை சுக்கிலப் பிரதமையில் தான் பட்டாபிஷேகம் செய்து கொண்டான் என்றும், அதிலிருந்து விக்கிரம சுபக்கணக்கு தொடங்கிற்று என்றும் மக்கள் இதற்கு ஐதீகம் கூறுவர். பிரகலாதனுடைய பேரனும் மகா விஷ்ணு பக்தனுமான பலிச்சக்கரவர்த்தி பட்டாபிஷேகம் செய்து கொண்ட நாள் இது. அதன் நினைவாகவே பலிபரதி என்ற இந்தப் புத்தாண்டுப் பிறப்புக்கு கொண்டாட்டம் நடைபெறுகிறதென்றும், அன்று ஏற்றப்படும் தீபம் பலி தீபம் எனப்பெறும்வாமன புராணம் முதலியன கூறுகின்றன.

அக்பர் ஆண்ட போது தீபாவளி இரவில் அவருடைய அரண்மனை விளக்குகளால் அணிசெய்யப் பெறுவதுமுண்டு. ஷாஜகான் சக்கரவர்த்தியின் மகன் தாரா ஷிக்கோ என்பவர் பெரும் புலவர். அவர் தீபாவளி கொண்டாட்டத்தில் மிகுந்த ஆர்வம் உடையராக இருந்தார். வங்காளத்தில் உள்ள இந்துக்கள் தீபாவளியன்று காளி பூஜை செய்வர். அதுவும் மகா லட்சுமியை நோக்கிச் செய்வதேயாம். அன்று சீதேவியை அழைப்பர் மூதேவியை விரட்டியடிப்பர்.

சீக்கியர்களும் தீபாவளியை மிகுந்த குதூகலத்துடன் கொண்டாடுகின்றனர். அவ்வாறே இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளிலுள்ள இந்துக்களும் உலகில் வாழுகின்ற இந்துக்களுடன் இணைந்து தீபாவளியை வெகு சிறப்பாகக் கொண்டாடுகின்றனர். மகாவிஷ்ணு நரகா சுரனைக் கொன்று ஒளியேற்றிய தீபத் திருநாளை இந்துக்களாகிய நாமும் கொண்டாடுவோமாக.




INTERNATIONAL COLLEGE OF BUSINESS & TECHNOLOGY • ICBT

# ICBT CAMPUS JAFFNA


யாழ்.மண்ணில் இருந்தவாறு சர்வதேச தரத்திலான
பட்டம் ஒன்றைப் பெறும் உங்கள் கனவை நனவாக்குங்கள்

## SOFTWARE ENGINEERING / IT
## CIVIL ENGINEERING
## QUANTITY SURVERING
## BUSINESS MANAGEMENT

சகல வசதிகளுடனும், முற்றுமுழுதான பல்கலைக்கழக சுற்றாடலில் பட்டப்படிப்பை கற்கக்கூடிய ஒரு கல்விக்கூடம் தற்போது யாழ்.மண்ணில்....

A/L, O/L பரீட்சை முடித்தவர்கள் தங்கள் பொன்னான காலத்தையும் வயதையும் வீணடிக்காமல், மூன்று வருடங்களில் ஒரு பிரித்தானிய பட்டதாரியாகக்கூடிய சந்தர்ப்பத்தை யாழ். மண்ணில் உங்களுக்கு வழங்குகின்றது ICBT.

# 077 074 6553



# தீபாவளி
## சிறப்பு மலர் – 2016




CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.



அழையுங்கள் - 077 29 31 062

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)



ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

மீண்டும் யாழ் நகரில் புதுப்பொலிவுடன்

# ரூபி ஜுவல்லரி

(ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு 1982)

தங்கத்தை தரம்பார்க்கும் நவீன இயந்திரம் எம்மிடம் உண்டு.

இங்கு 916 தங்க நகைகள் Ready-Made ஆக வாங்கவோ அல்லது Order கொடுத்து செய்து கொள்ளவோ முடியும்.

227 – 229, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

021 221 6919 / 077 734 4074

www.rubejewellery.com

உரிமையாளர்: நந்தகோபால் கஜரூபன்



2016 !

எமது ஸ்தாபனத்திற்கு யாழ் நகரிலோ இலங்கையில் வேறு எப்பாகத்திலோ கிளைகள் கிடையாது.





அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

# எரிக்கணேஷ்
## மூக்குக் கண்ணாடியகம்



நவீன ரக மூக்குக் கண்ணாடிகளை மிகவும் மலிவான விலையில் பெற்றுக் கொள்ள தேர்ந்த ஒரே ஸ்தாபனம்

564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P. 021 222 2486

கிளைகள்:-

பழைய பொலிஸ் நிலையம் முன்பாக,
இல. 80, கே.கே.எஸ்.வீதி,
சுன்னாகம்.

இல. 91, கே.கே.எஸ். வீதி,
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.



KIRUBA LEARNERS

# கிருபா
KIRUBA LEARNERS
லேணர்ஸ்
No.1 Driving Training School IN NORTH

Govt.Approved A Grade Driving Training School



அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப்பாடசாலை

அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

திறமையான சாரதிகள் ஆக வேண்டுமா? கிருபா லேணர்ஸ் உடன் இணையுங்கள்

- தவணைமுறையில் கட்டணம் செலுத்த முடியும்.
- இலவச எழுத்துப் பரீட்சை வகுப்புக்களும்.
- வாகன தொழில்நுட்ப வகுப்புக்களும் உண்டு.
- பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், மாதிரிவினாத்தாள் இலவசமாக வழங்கப்படும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள்.
- எழுத, வாசிக்க தெரியாதவர்களுக்கு வாய்மொழிமூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புகள் நடைபெறும்.
- விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து Learner Permit பெற்றுத்தரப்படும்.
- சாரதி தெரிந்து கொள்ள வேண்டிய வாகனம் சம்பந்தமான அடிப்படைக்கல்வி மற்றும் சாரதிக்கான சிறந்த பயிற்சி வழங்கப்படும்.
- License விண்ணப்பிக்கும் ஒழுங்குகளும் எங்கள் காரியாலயத்திலே செய்துதரப்படும்.
- உடைந்த, தொலைந்த, தெளிவில்லாத License புதுப்பிக்க ஒழுங்கு செய்துதரப்படும்
- சர்வதேச லைசன்ஸ் International License பெற்றுக்கொள்ளக்கூடிய வசதி உண்டு.



சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள்

★ அடையாள அட்டை
★ பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் (மூலப்பிரதி)
★ திருமண அத்தாட்சிப்பத்திரம் (பெண்கள் மட்டும்)
★ சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)
★ தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் வழங்கும் மருத்துவச் சான்றிதழ்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| A9 வீதி கிளிநொச்சி (கச்சேரி முன்பாக) 021 228 5505, 076 767 6770 | 216, A9 வீதி, வவுனியா (வசந்தி திரையரங்கம் முன்பாக) 024 222 7777, 077 710 0444 | 94, பிரதான வீதி, மன்னார். 023 225 1656, 077 847 2732 | பிரதான வீதி, (பொலிஸ் நிலையம் முன்பாக) நெல்லியடி. 021 300 6550, 071 454 6957 | 36, கச்சேரி நல்லூர் வீதி (கச்சேரி அருகாமை), யாழ்ப்பாணம். 021 222 6699, 076 722 5292 | பருத்தித்துறை வீதி (ஓம் பிளாசா), ஆவரங்கால். 021 222 6688, 077 242 2622 |
| 227/6, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் (மதவடி அண்மையில்). 021 224 2022, 077 723 8600 | புளியடிச்சந்தி, முல்லைத்தீவு, விசுவமடு. 021 320 1515, 071 454 6955 | நாச்சிக்குடா சந்தி, மன்னார் வீதி, முழங்காவில். 021 300 6544, 071 454 6955 | வாடியடிச் சந்தி பூநகரி. 021 320 1818, 070 333 7171 | கண்டி வீதி, சாவகச்சேரி. (நீதிமன்றம் அண்மையில்) 021 227 0700, 071 454 6957 | முதலாம் கட்டைச்சந்தி, பருத்தித்துறை. 021 492 3201, 071 454 6958 |

தலைமைக் காரியாலயம்

இல. 226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

077 722 5292

021 222 4353 - 021 492 3200





## இடர் நீங்க சுடரேற்றுவோம்



அன்றோர் அரக்கன் அழிந்திட்ட நன்னாளை
இன்றும் மறவாமல்
எம்மவர்கள் -நன்றே
சுடரேற்றி நாடெங்கும்
கொண்டாடி வாழ்வின்
இடர் நீங்கக் கொள்ளும் மரபு.

இருப்போர் கொடுத்து எழியோர்கைத் தூக்கி
விருப்போ டவர்தம் விழிநீர் துடைத்து
பெறுகின்ற ஆனந்த பேரின்பம் அள்ளித்
தரும் **தீபாவளி நல்வாழ்த்துக்கள். (வலம்புரிக்குடும்பம்)**










# தீபாவளி
## சிறப்பு மலர் – 2016


**SPEED**
PURIFIED DRINKING WATER

**சுத்தமான குடி தண்ணீர்**
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ள
மங்கல நிகழ்வுகள், விடுதிகள்,
ஹோல்கள் (Hall)
விசேட விலைக்கழிவு
வழங்கப்படும்.

**ஸ்ரீமுருகன்**
தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 5392

**அனைத்து நாடுகளுக்குமான**
**விரைவு பொதிகள் சேவை**
**விசேட விலை குறைப்பு**
UK – 550*/=Kg
DELIVERY IN 3 - 5 DAYS (நிபந்தனைகளுக்குட்பட்டது)
மேலதிக கட்டணமின்றி பொதிகள்
வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
தொடர்புகளுக்கு: **0768226240**
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை
V2 TRAVELS
(8-5799)



**புதிய பிரிவுகள் ஆரம்பம்**

LONDON METROPOLITAN COLLEGE

**IELTS**
Duration : 60 hours (Week, Weekends)
• Student Visa • Skill Migration

**IELTS**
LIFE SKILLS A1, B1
(Speaking & Listening)
Duration : 48 hours (Week, Weekends)
UKBA இன் புதிய நடைமுறைக்கேற்ப Settlement விசாக்களுக்கான IELTS A1 பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

**APPLIED SPOKEN ENGLISH** (with Grammar)
Duration: 48 hours (Week, Weekends)
ஆங்கிலத்தில் சரளமான உரையாடல் திறனை வளர்த்துக்கொள்ள விரும்புவோர்க்கான கற்கை நெறி

**DIPLOMA IN ENGLISH**
Duration: 60 hours (Week, Weekends)

**COMPUTER COURSES**
- Certificate in MS Office 2013
- Certificate in JAVA, VB, Net, C#
- Internet & Email
- Diploma in Computer Studies
- Diploma in Computer Programing

LONDON METROPOLITAN COLLEGE
No 136, palali road,
parameswara junction, Jaffna.

HOTLINE : 0714150995 | 021 753 8395

அனைவருக்கும் **BCAS Campus** இன் இனிய
**தீபாவளி நல்வாழ்த்துக்கள்**

edexcel | PEARSON
London South Bank University | University of WOLVERHAMPTON
CIOB | RICS

உயர்கல்வித் துறையில் 18 வருடகால அனுபவமும், நம்பகத்தன்மையும், சிறந்த தரநிர்ணயத்துடனான சர்வதேச மற்றும் தேசிய அங்கீகாரங்களும் கொண்ட BCAS Campus இல்

- QS – Quantity Surveying
- BMS – Biomedical Science
- LLB – Law
- BM – Business Management
- CSD – Computing & Systems Development
- CE – Civil Engineering

BCAS Campus wins 4 International Awards in 2016

CALL 077 710 2131

Jaffna Campus
16, Point Pedro Road,
Jaffna.

Corporate Office
32, Dharmarama Road,
Colombo 6.
T : 011 258 5391

18 YEARS
ISO 9001:2008 CERTIFIED

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

HOTLINE : 021 221 9910
Visit us on Facebook | info@bcas.lk | www.bcas.lk

# பாரிசவாத (பக்கவாத) நோய் அற்ற சமூகத்தைக் கட்டியெழுப்புவோம்

உலக பாரிசவாத தினம் ஆண்டுதோறும் ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

இவ்வருட கருப்பொருள் ''உண்மைகளுக்கு முகங் கொடுப்போம்மேம்பட்ட விழிப்புணர்வு, அணுகுதல், செயற்பாடு மூலம் வாழ்க்கையை மேம்படுத்த முடியும் எனும் கோஷத்தோடு பாரிசவாத நோய்க்கு சிகிச்சையளிக்க முடியும்'' என்பதாகும்.

எனவேதான் பாரிசவாத நோய் பற்றிய விழிப்புணர்வை அனைவர் மத்தியிலும் ஏற்படுத்துவதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

மனித உடலின் மிகவும் பிரதானமான உறுப்புக்களில் ஒன்றான மூளை உடற்செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதுடன் எமது எண்ணங்கள், கற்றல், உணர்தல், தொடர்பாடல் முதலிய உளத்தொழிற்பாடுகளையும் கட்டுப்படுத்துகின்றது.

மூளைக்குத் தேவையான முக்கியமான போசனைப் பொருட்களும் ஒட்சிசனும் குருதியின் மூலம் மூளைக்குத் தொடர்ச்சியாகக் கடத்தப்படுதல் அவசியமாகும்.

மூளைக்குக் குருதிச் சுற்றோட்டம் இல்லாவிடில் மூளைக் கலன்கள் பழுதடைந்து விடுகின்றன. அல்லது அழிவடைந்து விடுகின்றன.

மூளையின் குருதிச்சுற்றோட்டம் தடைப்படுவதால் அதன் ஒருபகுதி பாதிக்கப்பட்டு உடலின் ஒருபகுதி தனது செயலை இழக்கும் நிலை பாரிசவாதம்(Stroke) எனப்படுகின்றது. பாரிசவாதம் இரு வகைகளில் ஏற்படலாம். அவையாவன,

1.மூளைக்குரிய குருதிக் குழாய் அடைபட்டு குருதிச்சுற்றோட்டம் தடைப்படுவதால் ஏற்படும் பாரிசவாதம் ("Ischaemic" Stroke)

2.மூளைக்குரிய குருதிக் குழாய்கள் வெடித்து இரத்தக்கசிவு ஏற்படுவதனால் ஏற்படும் பாரிசவாதம் ("Haemorrhagic" Stroke)

இரத்தக்கட்டியொன்று (Thrombus) குருதிக்குழாய்களை அடைப்பதனால் மூளைக்குச் செல்லும் குருதி தடைப்பட்டிருக்கிறது.

இது குருதிச்சுற்றோட்டம் தடைப்படுவதால் ஏற்படும் பாரிசவாதமாகும். 80% பாதிப்பு இவ்வகையான பாரிச வாதத்தாலேயே ஏற்படுகின்றது. இரத்தக்கட்டி வெவ்வேறு இடங்களில் தோன்றலாம். இவை மூளையின் பிரதான குருதிக் குழாய்களைத் தடை செய்யலாம்.

இரத்தக்கட்டி இதயத்தில் அல்லது கழுத்துப்பகுதியில் ஏற்பட்டு குருதிச்சுற்றோட்டத்தின் மூலம் எடுத்துச்செல்லப்பட்டு மூளையிலுள்ள சிறிய குழாய்களை அடைக்கலாம் இது "Embolism" எனப்படும். இரத்தக்கட்டியானது மூளையின் உள்ளீட்டிலுள்ள மிகச்சிறிய குருதிக்குழாய்களையும் அடைக்கலாம் இது Lacunar Stroke எனப்படும்.

குருதிக்குழாய்கள் வெடித்து குருதிக் கசிவு ஏற்படுவதால் ஏற்படும் பாரிசவாதம் "Haemorrhagic" Stroke எனப்படும். 15% பாதிப்பு இதனால் ஏற்படுகின்றது. குருதியமுக்கம் சடுதியாக அதிகரிக்கப்படுவதனால் குருதிக்குழாய்கள் வெடித்து மூளையினுள் குருதிக்கசிவு ஏற்படும். இங்கு கசிவடையும் இரத்தத்தின் அமுக்க விளைவு மூளையை பாதிப்படையச் செய்கின்றது.

அடுத்து Mini Stroke சிறிய அளவிலானபாரிசவாதம் பற்றி நோக்கலாம். இது சிறிது நேரத்திற்கு குருதிச்சுற்றோட்டம் தடைப்பட்டு ஆனால் மீண்டும் உடனடியாக குருதிச்சுற்றோட்டம் சீராகும்போது பாரிசவாதத்திற்குரிய குணங்குறிகள் தோன்றி மறையும்.

இது பாரிசவாதம் போன்றது. ஆனால் சில நிமிடங்களில் தோன்றி மறைந்து விடும். இவ்வகையான பாரிசவாதத்தின் உடனடிப்பாதிப்புக்கள் பின்வருமாறு,

முகம், கை, கால்களில் ஏற்படும் விறைப்பு அல்லது பலவீனம் குறிப்பாக உடலின் ஒரு பக்கத்தில் ஏற்படும்.

கதைப்பதில் அல்லது விளங்கிக்கொள்வதில் மாறாட்டம் அல்லது சிரமம் ஏற்படும்.

ஒன்று அல்லது இரண்டு கண்களிலும் பார்வையிழப்பு ஏற்படும். அநேகமாக தாம் காண்பதில் அரைப்பாங்கையே காண்பர். சில வேளைகளில் பொருட்கள் இரண்டாகத் தென்படும்.

நடப்பதில் சிரமம், தலைச்சுற்று, சமநிலை ஒருங்கிணைத்தல் தொழிற்பாடுகள் பாதிக்கப்படல், விழுங்குவதில் கடினம் என்பன ஏற்படும்.

சடுதியான உக்கிரமான தலையிடி ஏற்படலாம்.

உடலிலே வலது பக்கத்தை இடதுபக்க மூளையும் இடது பக்கத்தை வலது பக்க மூளையும் கட்டுப்படுத்துகின்றது.

எனவே தான் வலது பக்க மூளை பாதிக்கப்படும் போது உடலின் இடது பக்கம் பாதிக்கப்படுகின்றது. அதேபோல் இடதுபக்க மூளை பாதிக்கப்படும் போது உடலின் வலது பக்கம் பாதிக்கப்படுகின்றது. அநேகமானோர்க்கு மொழி– பேச்சு, விளங்கிக் கொள்ளுதல், வாசித்தல், எழுதுதல் என்பன மூளையின் கட்டுப்பாட்டில் உள்ளன.

வலதுபக்க மூளையானது உணர்வுகளுக்கான பயிற்றப்பட்ட செயற்பாடுகளுக்கும் (பார்த்தல், கேட்டல், தொடுதல், துலங்குதல்), கணிப்பீட்டுச்செயற்பாடுகளுக்கும் (அளவு, வேகம், தூரம் அல்லது வெளி நிலையை கணித்தல்) பொறுப்பானது. இடது மூளையின் கதைப்பதற்கு பொறுப்பான பகுதி பாதிப்படையின் நோயாளிகளுக்கு கதைக்க முடியாதிருக்கும்.

ஆனால் விளங்கிக் கொள்வதற்கான பகுதி பாதிப்படையவில்லையாயின் அவரால் மற்றவர்கள் கதைப்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

அடுத்து பாரிசவாதத்தை எவ்வாறு அடையாளம் காண்பது என நோக்கலாம். (இது Act-Fast எனப்படும்)

F-Facial Weakness முக அசைவுகளில் பலவீனம்– சிரிக்க முடியாதிருத்தல், வாய் ஒருப்பக்கத்திற்கு இழுக்கப்படல்.

A-Armed Weakness அவயவங்களில் பலவீனம்– கைகளை அல்லது கால்களை உயர்த்த முடியாதிருத்தல், ஒரு பக்க அவயவங்கள் பலவீனமுறல் அல்லது ஒரு பக்கத்திற்கு இழுக்கப்படுதல்.

S-Speech Weakness தெளிவாகப் பேச முடியாதிருத்தல் – கதைப்பதனை விளங்காதிருத்தல்.

T-Test all three functions மேற்குறித்த மூன்று தொழிற்பாடுகளையும் பரிசோதித்து ஏதாவது வேறுபாடுகள் காணப்படின் உடனடியாகவைத்தியஆலோசனை பெறப்படவேண்டும்.

இனி பாரிசவாத நோயாளிகளை எவ்வாறு பராமரிப்பது என நோக்கலாம். நோயாளிகள் தமது பிரச்சினைகளை வெளிப்படுத்த முடியாதவர்களாக இருப்பின் அவர்களைப் பராமரிப்பது சிக்கலாகி விடுகிறது.

மூன்றிலொன்றிற்கும் அதிகமான பாரிசவாத நோயாளிகள் விழுங்குவதில் சிரமத்தை எதிர்கொள்கின்றனர். சுயநினைவுடைய நோயாளி சாப்பிடும் போது அவருக்கு சரியாக விழுங்க முடியாது விடின் சுவாசப்பையினுள் உணவு அல்லது நீர் சென்று சுவாசப்பைகளை அடைத்து விடும்.

இதனால் சுவாசப்பையில் தொற்று ஏற்பட்டு விடும். எனவே குழாய் மூலம் உணவூட்டல் தேவைப்படும். விழுங்குவதில் சிரமம் காணப்படும் நோயாளிகளுக்கு திரவப் பதார்த்தங்கள் கடினமாய் தோன்றும்.

திரவப் பதார்த்தங்கள் வாயினுள் விரைவாக அசைந்து செல்வதனால் பலவீனமடைந்த குரல்வளை மூடிக்கு, ஒருங்கிணைந்து தொழிற்பாட்டுப்பாதை மூடுவதற்கு நேரம் போதாதிருக்கும்.

ஆனால் தடிப்பான உணவுப் பதார்த்தங்கள் அசைந்து செல்வதால் குரல்வளை ஒருங்கிணைந்து தொழிற்பட நேரம் போதுமானதாக இருக்கும்.

இதனாலேயே சில நோயாளிகளுக்கு திரவத்தைக் கட்டியாக்கக் கூடிய பதார்த்தங்களைக் கலந்து ஆரம்பத்தில் சில காலங்களுக்கு கொடுக்கப்படுகிறது.

அரைத் திண்ம பதார்த்தங்களான ஜெலி, மசிக்கப்பட்ட பப்பாசிப் பழம், தடித்த சூப் என்பன அவர்களுக்கு இலகுவில் எடுக்கக் கூடிய தொன்றாகும்.

உணவைப் பாதுகாப்பாக விழுங்குவதற்கான நுட்பங்கள்.

உணவுவேளையில் அமைதியாகவும் தளர்வாகவும் இருக்குமாறு ஒழுங்குபடுத்துங்கள், நோயாளியை அவசரப்படுத்த வேண்டாம்.

நோயாளிக்கு அடிக்கடி சிறியளவில் உணவூட்டலாம்.

ஒரு தடவை ஒரு தேக்கரண்டி நிரம்பிய உணவைக் கொடுத்து மறுதடவை மறு கரண்டி கொடுக்கும் முன்னர் கொடுக்கப்பட்ட உணவை முழுதாக விங்கிவிட்டாரா? என உறுதிப்படுத்தல் வேண்டும்.

உணவையும் நீரையும் ஒரே தடவையில் ஒன்றாகக் கொடுக்க வேண்டாம்.

உணவு உண்ணும் போது நோயாளியைக் கதைக்க விட வேண்டாம்.

உணவுண்ட பின் நோயாளியை 1/2 மணித்தியாலங்களுக்கு நேராக இருத்தி வைத்திருத்தல் வேண்டும்.

வயது, தந்தை வழிப் பரம்பரை இயல்பு குடும்பத்தில் யாருக்கேனும் பாரிசவாதம் அல்லது மாரடைப்பு ஏற்பட்டிருத்தல் என்பன மாற்றப்பட முடியாத பாதகமான காரணியாகும்.

ஆயினும் ஏனைய பாதகமான காரணிகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் பாரிசவாதம் ஏற்படுவதற்கான மொத்த அபாயத்தைக் குறைக்கலாம். பின்வருமாறு அதனை மேற்கொள்ளலாம்.

உயர் குருதி அமுக்கம், நீரிழிவு அல்லது அதிக கொலஸ்ரோல் இருக்கின்றதா? என அறிந்து அவற்றைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

புகைத்தல் தவிர்க்கப்பட வேண்டும்.

மதுப் பழக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

ஒழுங்காக உடற்பயிற்சி செய்தல் வேண்டும்.

மனதை நெருக்கீடு இல்லாது வைத்திருத்தல்.

பழவகைகள், மரக்கறி நிறைந்த உப்பு, கொழுப்புக் குறைவான ஆரோக்கியமான உணவுகளை உள்ளெடுத்துக் கொள்ளல்.

80%மான பாரிச வாதம் வருமுன் தடுக்கக் கூடியது. எமது வாழ்க்கை முறையை ஆரோக்கியமாக வைத்திருத்தல் பாரிசவாத அபாயத்தைக் குறிப்பிட்ட அளவு குறைக்கும்.

குறிப்பிட்ட மருத்துவ நிலைகளை கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் பாரிசவாதம் உருவாகும் சந்தர்ப்பத்தைக் குறைக்க உதவும். எனவே தான் பாரிசவாத நோயற்ற சமூகத்தைக் கட்டியெழுப்ப ஒன்றுபடுவோம்.

சி.ஷேளினா.
மொழிபெயர்ப்புத்துறை
மாணவி, கலைப் பீடம் .
யாழ்.
பல்கலைக்கழகம்.




வட மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தின் நிதி ஒதுக்கீட்டில் கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் அமைக்கப்பட்ட துவிச்சக்கரவண்டி தரிப்பிடம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் எஸ்.இராகவன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட எம்.கே.சிவாஜிலிங்கம் அதனைத் திறந்து வைத்தார்.

இந் நிகழ்வில் கரவெட்டி கல்விக் கோட்டப் பணிப்பாளர் கே.யோகநாதன் மற்றும் மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்:- கரணவாய் செய்தியாளர்)

## மதிப்பளிப்பு நிகழ்வு

கரவெட்டி விக்னேஸ்வரா ஆரம்பப் பாடசாலையின் மாணவர் மதிப்பளிப்பு நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் ம.மகாகேதீஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தன், சிறப்பு விருந்தினராக வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்(ஆங்கிலம்) ஐ.செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7-60

## ஆவணப்படுத்தல் செயற்றிட்டம்

தொன்மம் கலைக்குழுவானது பாரம்பரிய கலைகளை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்லும் நோக்கில் இன்று சனிக்கிழமை, நாளை மறுதினம் 31 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய நாட்களில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய பிரதேசங்களில் உள்ள பறையிசைக் கலைஞர்களைச் சந்தித்து அவர்கள் தொடர்பான ஆவணப்படுத்தலை மேற்கொள்வதோடு நாளை 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பிரதேச செயலக மண்டபத்தில் முழுநாள் பயிற்சிப்பட்டறை ஒன்றினையும் நடத்தவுள்ளதாக தொன்மம் கலைக்குழுவின் செயலாளர் ஷாலினி சாள்ஸ் தெரிவித்துள்ளார்.

(இ-7)


# இலங்கை இராணுவத் தளபதியின் டில்லிக்கான இரகசியப் பயணம்

(கொழும்பு)

இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் கிரிசாந்த டி சில்வா இந்தியாவுக்கான இரண்டு நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு, இந்தியாவின் முப்படைகளின் தளபதிகளையும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.







இந்திய இராணுவத் தளபதியின் அழைப்பின் பேரில், கடந்த 24.25ஆம் திகதிகளில் இலங்கை இராணுவத் தளபதி இந்தியாவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

கடந்த 24ஆம் திகதி டில்லி சென்றிருந்த இலங்கை இராணுவத் தளபதிக்கு இந்திய இராணுவத் தலைமையகம் மற்றும் பாதுகாப்பு அமைச்சு அமைந்துள்ள சவுத் புளொக்கில், அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது.

இதையடுத்து இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் தல்பீர் சிங்குடன் இலங்கை இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா பேச்சுக்களை நடத்தினார்.

அதன் பின்னர், இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லம்பாவையும் இந்திய விமானப்படைத் தளபதி எயர் மார்ஷல் பி.எஸ். தானோவையும் அவர் தனித்தனியாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

மறுநாள், இந்திய இராணுவத்தின் இராணுவ பொறியியல் கல்லூரிக்கும் தேசிய பாதுகாப்பு அக்கடமிக்கும் சென்ற இலங்கை இராணுவத்தளபதி, அங்கு பயிற்சி பெற்று வரும் இலங்கைப் படையினரையும் சந்தித்துள்ளார்.



இலங்கை இராணுவத் தளபதியுடன் இராணுவ செயலர் மேஜர் ஜெனரல் ஜனக வல்கமவும் டில்லி சென்றிருந்தார்.

இலங்கை இராணுவத் தளபதியின் இந்தியப் பயணம் தொடர்பான தகவல்கள் ஏதும் முன்கூட்டியே ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவர் நாடு திரும்பி இரண்டு நாட்கள் கழித்தே இலங்கை இராணுவத் தலைமையகம் இந்த தகவலை வெளியிட்டுள்ளது. (இ-7-10)

# கம்பஹா மாவட்டத்தில் மட்டும் 4 இலட்சம் மனநோயாளிகள்

(கொழும்பு)

கம்பஹா மாவட்டத்தில் மட்டும் சுமார் நான்கு இலட்சம் மனநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளதாக மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

உலக மனநல தினத்தை முன்னிட்டு நீர்கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது கம்பஹா மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் வைத்தியர் நளின் ஆரியரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தின் மொத்த சனத்தொகையே 22 இலட்சம் தான். ஆனால் இங்கு ஏதோ ஒரு காரணத்தினால் சுமார் நான்கு இலட்சம் பேர அளவில் மனநோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளனர். பொருளாதார, சமூக பிரச்சினைகள் காரணமாகவே மன நோய் ஏற்படுகின்றது. ஆனாலும் அதற்கு சிகிச்சை அளிப்பதற்கான வளங்கள் , போதுமான வைத்தியர்கள் இலங்கையில் இல்லை. இதன் காரணமாக 2020ஆம் ஆணடளவில் இலங்கையில் மன நோயாளிகளின் எண்ணிக்கை பாரியளவில் அதிகரிக்கும் என்றும் அவர் எதிர்வு கூறியுள்ளார். (இ-7-10)

## கொழும்பு–மதுரை விமான சேவை

# மிஹின் லங்காவுக்குப் பதிலாக ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

(கொழும்பு)

கொழும்பு - மதுரைக்கு இடையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தினசரி விமான சேவையை நடத்தவுள்ளது. இதன்படி, நாளை 30 ஆம் திகதி முதல் கொழும்பு மற்றும் மதுரைக்கு இடையில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் இயங்கும் என தெரிவிக்கப்படுகின்றது. முன்னதாக கொழும்பு மற்றும் மதுரைக்கு இடையில் இயங்கிய மிஹின் லங்கா எயார் லைன்ஸ் விமான சேவை இன்றுடன் தனது சேவையை நிறுத்தவுள்ளது.

இந் நிலையிலேயே, நாளை 30ஆம் திகதி முதல் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானம் தினமும் மதுரையிலிருந்து இயங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கொழும்பிலிருந்து பிற்பகல் 2.10இற்கு புறப்பட்டு மதுரைக்கு பிற்பகல் 3.10இற்கு வந்து சேரும். பின்னர் மாலை 4.30 மணிக்கு புறப்பட்டு மாலை 5.30 மணிக்கு கொழும்பை வந்தடையும் என தெரிவிக்கப்படுகின்றது. (இ-7-10)

## இன்று ஒரு தகவல்

### வெத்து வேட்டுக்கள்

பேருந்துகளில், புகையிரதங்களில் பயணம் செய்கையில் சிலர் உச்சஸ்தாயில் தங்கள் வீட்டு விவகாரங்கள், சொந்த சமாச்சாரங்கள் எல்லாவற்றையும் பொதுக்கூட்டத்தில் பேசுகிற மாதிரிப் பேசிக் கொண்டிருப்பார்கள்.

பொது இடங்களில் உரக்கப் பேசுவது அநாகரிகம் என்பது இவர்களுக்குத் தெரிவதில்லை. நம் விடயங்கள் ஏன் பிறருக்குத் தெரிய வேண்டும் என இவர்கள் ஏனோ எண்ணிப் பார்ப்பதில்லை. மாறாக, பேசுவது பிறருக்குக் கேட்க வேண்டும் என்றும் அதைப் பிறர் இரசிக்கட்டும் என்றும் இவர்கள் எதிர்பார்ப்பது கேலிக்குரியது. மற்றவர்களால் மதிக்கப்பட வேண்டும் என்பது தான் மனித இனத்தின் தலையாய உணர்வாக இருக்கிறது.

இந்த உணர்வு மனித இனத்திற்கு இருப்பதால் தான் இன்றும் பலர் நல்லவர்களாக இருக்கிறார்கள் அல்லது நல்லவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ள நடிக்கிறார்கள்.

இரைந்து பேசும் குணம் இயல்பில் நுழைந்துவிட்டால் எதை இரைந்து பேசலாம், எதை இரைந்து பேசக் கூடாது என்ற பாகுபாடு செய்து பார்க்கும் தன்மையே இல்லாமல் போய்விடும்.

பேசக்கூடாத நேரங்களில் பேசக்கூடாத விடயங்களை இரைந்து பேசி விரோதிகளைச் சம்பாதித்துக் கொள்பவர்கள் பலர். வீட்டு இரகசியங்களை வெளியே சொல்லி நட்டப்படும், அவமானப்படும் ஆசாமிகளும் இருக்கிறார்கள்.

புதிதாக அறிமுகமாகிறவர்களிடம் ஆர்ப்பாட்டமாகப் பேசுகிறவர்கள் தங்களைப் பற்றித் தவறான எண்ணங்கள் உருவாகவே வழிவகுக்கிறார்கள். அமைதியாகப் பேசுபவர்களோ, அட! இவர் எவ்வளவு நல்லவராக இருக்கிறார், எவ்வளவு அமைதியாகப் பேசுகிறார்! என்று மனதினுள் எண்ணி வியக்க வைக்கிறார்கள். மிகக்கனமான விடயங்களைக் கூட அமைதியாகப் பேசுவதன் மூலம் எடுப்பாகச் சொல்ல முடியும்.

சிலர் வாக்குவாதங்களின் போது குரலை உயர்த்திக் கத்துவார்கள். குரலை உயர்த்தினால் தான் நம் வாதம் எடுபடும் என்பது இவர்களது எண்ணம். இது தவறானது.

ஒரு வீதியில் வாகனங்கள் இரண்டு மோதிக் கொண்டன, சொற்ப காயம் தான். தவறு இருவர் மீதும் இருந்தது. ஒருவர் ஆய் ஊய் என்று குதித்துக் குதித்துப் பேசினார். மற்றவரோ அலட்டிக் கொள்ளாமல் நான் கையைக் காட்டாமல் திரும்பியது தவறு தான். இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் , நீங்களும் கோட்டைக் கடந்து வந்திருக்கக் கூடாது என்று அமைதியாகச் சொன்னார். எதிராளியோ அடங்கவில்லை. சாமி ஆடுபவர் போல் ஆடினார். கூடிய கூட்டத்திற்கோ பொறுக்கவில்லை. எல்லோருமாகச் சேர்ந்து கொண்டு அமைதியாகப் பேசியவருக்குப் பக்கபலமாகப் பேச ஆரம்பித்து விட்டார்கள். கத்தியவரின் குரல் எடுபடவில்லை. ஏமாற்றத்துடனும் அவமானத்துடனும் நகர்ந்து விட்டார். கத்துபவர்கள் தொண்டைக்கு வேலை தருவதோடு சரி மூளைக்கு வேலை தருவதில்லை. அமைதியாகப் பேசுபவர்களோ , மூளைக்கு வேலை தந்து காரியங்களை சாதித்துக் கொள்வதோடு நற்பெயரையும் தட்டிக் கொண்டு போய் விடுகிறார்கள்.

**லேனா தமிழ்வாணன்**




# சபாஷ் பூக்குட்டி!

..இறுக்கமான முகத்தோடு அது இவரையே பார்த்துக் கொண்டிருந்தாள். கொஞ்ச நேரம் கழித்துக் கேட்டாள்.

அப்புறம் என்ன தாத்தா செய்தீங்க?

என்னத்தச் செய்றது. மன்னிக்கவும் என்று சொல்லிட்டேன்ல அதுக்கு மேல என்ன இருக்கு? யார் ஒத்துக்கிறா இந்தக் காலத்துல? சரி போங்க என்றான். வந்துட்டேன் அவ்வளவு தான்.

விட்டுட்டானா.. நல்ல பொலிஸ். என்றாள் அஸ்வினி. கொஞ்ச நேரம் ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தது குழந்தை. என்ன யோசனை என்று அதையே பார்த்துக்கொண்டிருந்தார் இவர்.

சரி, தாத்தா நா பால் குடிக்கப் போறேன். என்றுவிட்டு எழுந்து அம்மாவைப் பார்த்து ஓடினாள். அந்த அழகையே ரசிக்கலானார் இவர்.

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே என்று சும்மாவா சொல்லியிருக்கிறார்கள் என்று தோன்றியது ராம்கிக்கு. ஆனால் மனசில் ஒன்று உறுத்தியது.

அதென்ன, நல்ல தாத்தா என்று சொல்லும் என்று பார்த்தால் நல்ல பொலிஸ் என்று விட்டுப் போகிறது. நான் சொன்ன கதையின் சாராம் சமான நேர்மை, உண்மை என்பவற்றைப் புரிந்து கொண்டாளா?



இல்லையா? கொஞ்சம் குழப்பமாகவே இருந்தது இவருக்கு.

கற்பனையில் திரித்துக் கூறும் கதைகள் சரியாகத் தனக்கு அமையவில்லையோ என்று நினைக்கலானார். இது தன்னின் அனுபவமாயிற்றே? அதனால் தானே பளிச்சென்று மனதில் தோன்றியதை அப்படியே சொன்னேன்.

ஒரு பிட்டுக் கற்பனை, மண்ணாங்கட்டி ஒன்று கிடையாதே! குழந்தை க்கு ஏதாச்சும் புரிந்ததா இல் லையா? சற்றுக் குழப்பத்துடனேயே படுக்கைக்குப் போனார் ராமகிருஷ்ணன்.

மறுநாள் காலையில் வழக்கம்போல் பள்ளிப் பேருந்தில் ஏற்றிவிட அழைத்துச் சென்றபோது குழந்தை அஸ்வினி சாவகாசமாய்க் கேட்டது.

ஏன் தாத்தா, நேர்மை, உண்மைன்னு நேற்றைக்கு சொன்னியே ஒரு கதை அந்தக் கதையில் பொலிஸ்காரர் உங்களை சரி போங்கன்னு விட்டுட்டார் வந்துட்டேன் என்றீங்கல்ல?

ஆமாம். என் ஒரு ஆளையே கவனிச்சிட்டிருந்தாப் போதுமா டிராஃபிக்கைக் கண்காணிக்க வேண்டாமா? எவ்வளவு கூட்டம்?

அது சரி தாத்தா அவன் போகச் சொல்லிட்டான் நீங்க வந்துட்டீங்க! ஆனாலும்.. என்னவோ சொல்லத் தயங்குவது போல நிறுத்தியது குழந்தை.

ஆனாலும்.? சொல்லு என்ன கேட்கிற? தயங்காமச் சொல்லு தெரியாமப் போயிட்டாலும் நீங்க onewayல போனது தப்பு தானே?

தப்புதான்..- குழந்தை என்ன சொல்ல வருகிறது என்று சற்று திடுக்கென்றே இருந்தது இவருக்கு.

அப்போ என்ன ஃபைனோ அதைச் சொல்லுங்கன்னு நீங்க கட்டிட்டில்ல வந்திருக்கணும்.. அப்போதானே அது உண்மையான நேர்மை?

ராம்கிக்கு அவர் கன்னத்தில் யாரோ பளாரென்று ஓங்கி அறைந்தது போலிருந்தது அந்த நிமிடத்தில். பேருந்தில் ஏறி அமர்ந்து இவரையே பார்த்து அதன் பதிலுக்காக அந்தக் குழந்தை காத்திருந்தபோது. முகத்தில் ஈயாடாமல் வெலவெலத்துப் போய் நின்று கொண்டிருந்தார் ராம்கி என்கிற ராமகிருஷ்ணன்.

ஒன்று மட்டும் மேலும் அவருக்கு நன்றாக விளங்கியது. தான் அதுநாள்வரை சொல்லிக் கொடுத்த நேர்மையும் நாணயமும் உண்மையும் கலந்த கதைகள் எல்லாம் சேர்ந்து தன் பேத்தியை நன்றாகத் தெளிவு பெற வைத்திருக்கிறது என்பதே அது!! (முற்றும்)




- 969 - பைசண்டைன் படைகள் சிரியாவின் அண்டியோக் நகரைக் கைப்பற்றின.
- 1665 - போர்த்துக்கல் படையினர் கொங்கோ பேரரசைத் தோற்கடித்து அதன் மன்னன் முதலாம் அண்டோனியாவைக் கொன்றனர்.
- 1859 - ஸ்பெயின் மொரோக்கோ மீது போரை அறிவித்தது.
- 1863 - சுவிட்சர்லாந்தில் கூடிய 16 நாடுகளின் பிரதிநிதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அமைக்கத் தீர்மானித்தனர்.
- 1886 - அன்றைய பிரித்தானிய இந்திய அரசுக்கும், திருவாங்கூர் மன்னருக்கும் இடையே முல்லைப் பெரியாறு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 1901 - ஐக்கிய அமெரிக்கக் குடியரசுத் தலைவர் வில்லியம் மக்கின்லியைக் கொலை செய்த குற்றத்திற்காக லியோன் சொல்கோஸ் என்பவனுக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.
- 1913 - எல் சல்வடோரில் பெரும் வெள்ளம் காரணமாக ஆயிரக்கணக்கானோர் இறந்தனர்.
- 1923 - ஓட்டோமான் பேரரசு முறிவடைந்ததைத் தொடர்ந்து துருக்கி குடியரசானது.
- 1929 - "கறுப்பு செவ்வாய்" என அழைக்கப்பட்ட இந்நாளில் நியூயோர்க் பங்குச் சந்தை வீழ்ச்சியடைந்தது. பெரும் பொருளியல் வீழ்ச்சி ஆரம்பமானது.
- 1948 - "சாஃப்சாஃப்" என்ற பாலஸ்தீனக் கிராமமொன்றில் புகுந்த இஸ்ரேலியர்கள் 70 பாலஸ்தீனர்களைச் சுட்டுக் கொன்றனர்.
- 1956 - இஸ்ரேலியப் படைகள் சினாய் தீபகற்பத்தைக் கைப்பற்றி எகிப்தியப் படைகளை சூயஸ் கால்வாய் நோக்கி விரட்டினர்.
- 1964 - தங்கனிக்கா மற்றும் சன்சிபார் இரண்டும் இணைந்து தன்சானியாக் குடியரசு ஆகியது.
- 1964 - 565 கரட் (113 கிராம்) "ஸ்டார் ஒஃப் இந்தியா" உட்படப் பல பெறுமதி மிக்க வைரங்கள் நியூ யோர்க் நகரில் உள்ள அமெரிக்க அருங்காட்சியகத்தில் இருந்து திருடப்பட்டன.
- 1967 - மொண்ட்ரியால் நகரில் 50 மில்லியன் மக்கள் கண்டு களித்த எக்ஸ்போ 67 உல்கக் கண்காட்சி முடிவடைந்தது.
- 1969 - உலகின் முதலாவது ஒரு கணினியில் இருந்து வேறொரு கணினிக்கான தொடுப்பு ARPANET மூலம் இணைக்கப்பட்டது.
- 1983 - துருக்கியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 1,300 பேர் கொல்லப்பட்டனர்.
- 1991 - நாசாவின் கலிலியோ விண்கலம் 951 காஸ்ராவுக்குக் கிட்டவாகச் சென்று சிறு கோள் ஒன்றுக்குக் கிட்டவாக சென்ற முதலாவது விண்கலம் ஆனது.
- 1998 - டிஸ்கவரி விண்ணோடம் STS-95 என்ற விண்கப்பலுடன் விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1998 - 39 பேருடன் சென்ற துருக்கிய விமானம் ஒன்று குர்தியத் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டது.
- 1998 - சூறாவளி மிட்ச் ஹொண்டூராசைத் தாக்கியது.
- 1999 - ஒரிஸாவில் இடம்பெற்ற பெரும் சூறாவளியினால் 10,000 பேர் வரை இறந்தனர். 2.5 மில்லியன் மக்கள் வீடுகளை இழந்தனர்.
- 2002 - வியட்நாமின் ஹோ சி மின் நகரில் பல்பொருள் அங்காடி ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் 60 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 2005 - டில்லியில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் 60பேர் வரை கொல்லப்பட்டனர்.

**பிறப்புகள்**

- 1931 - வாலி, தமிழகக் கவிஞர் . (இ. 2013)
- 1971 - மதிவ் எய்டன், அவுஸ்திரேலியத் துடுப்பாட்ட வீரர்.
- 1981 - ரீமா சென், இந்திய திரைப்பட நடிகை.
- 1985 - விஜேந்தர் குமார், இந்தியக் குத்துச் சண்டை மெய்வல்லுனர்.

**இறப்புகள்**

- 2001 - சுந்தா சுந்தரலிங்கம், இலங்கை வானொலி, மற்றும் பிபிசி தமிழோசை அறிவிப்பாளர்.
- 2007 - லா. சா. ராமாமிர்தம், தமிழ் எழுத்தாளர் . (பி. 1916)

**சிறப்பு நாள்**

- துருக்கி - குடியரசு நாள். (1923)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 80 | 40 | 80-120 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 100 | 120 | 93 | 110 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 50 | 100 | 55 | 70 | 120 | 100 |
| தக்காளி | 60 | 100 | 50 | 80 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 40 | 60 | 80 | 60 |
| கோவா | 70 | 100 | 55 | 80-100 | 100 | 100 |
| கரட் | 80 | 120 | 80 | 60-140 | 160 | 80 |
| பூசணி | 30 | 40 | 30 | 40 | 60 | 40 |
| புடோல் | 40 | 60 | 25 | 80 | 80 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 40 | 50 | 100 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 150 | 100 | 120 | 160 | 100 |
| பெரிய வெங்காயம் | 100 | 120 | 75 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 160 | 200 | 160 | 240 | 200 | 120 |
| வெண்டிக்காய் | 140 | 100 | 70 | 200 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 70 | 100 | 120 | 80 |
| பயற்றங்காய் | 160 | 200 | 150 | 180 | 200 | 80 |
| லீக்ஸ் | 140 | 200 | 100 | 160 | 160 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 50 | 50 | 100 | 60 |
| கறிமிளகாய் | 150 | 200 | 110 | 160 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 60 | 100 | 40 | 50 | 120 | 80 |
| போஞ்சி | 200 | 200 | 170 | 180 | 200 | 180 |
| கத்தரிதம்ளா | 50 | 30 | — | 60 | 60 | 60 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 15 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 550 | 600 | 500 | 600 | 600 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 25-30 | 45 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | 180 |
| வெங்காயப்பூ | 150 | — | — | 160 | 160 | 200 |
| முள்ளங்கி | 60 | 60 | 25 | 60 | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 20 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 10 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 60 | — | — | 100 | — |

# (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 874

அகில்ராஜ் பபி




சந்திரன் சிந்து




றாதை





சர்மி




தர்சி



விமலேந்திரன்




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# தமிழ் சினிமா வரலாறு

## தேவரின் இந்திப்படம்!

## யானையுடன் நடித்தார் ராஜேஷ்கண்ணா

286

**கதை எது?**

எந்தக் கதையை இந்தியில் தயாரிப்பது என்று ஆலோசனை நடந்தது.

1967இல் தெய்வச் செயல் என்ற படத்தை தேவர் எடுத்தார். மேஜர் சுந்தரராஜன், முத்துராமன் ஆகியோர் நடித்த இந்தப்படம் சுமாராகத் தான் ஓடியது.

அந்த தெய்வச் செயல் கதையைத் தான் இந்தியில் தயாரிக்கப் போவதாக தேவர் கூறியதும் எல்லோரும் திகைத்தனர். நாம் எத்தனையோ வெற்றிப்படங்களை எடுத்திருக்கிறோம். அதில் ஏதாவது ஒரு கதையை எடுக்கலாமே? போயும் போயும் சரியாக ஓடாத ஒரு படத்தின் கதையை எடுப்பதா? என்று டைரக்டர் திருமுகமும் வசனகர்த்தா ஆரூர்தாசும் கூறினர்.

நாம் இதுவரை எடுத்துள்ள படங்களில் மிக நல்ல கதை இதுதான் என்று தேவர் கூறிவிட்டார்!

**ராஜேஷ்கண்ணா**

இந்தக்காலகட்டத்தில் இந்திப் பட உலகின் சுப்பர் ஸ்டாராக ராஜேஷ்கண்ணா திகழ்ந்தார். அவரை புக் செய்ய தேவர் மும்பை சென்றார்.


தேவர் நாணயமானவர். பணத்தை ஒரே நேரத்தில் மொத்தமாகக் கொடுப்பார். குறித்த திகதியில் படத்தை முடித்து ரிலீஸ் செய்துவிடுவார் என்றெல்லாம் ராஜேஷ் கண்ணா உட்பட வட இந்திய கலைஞர்கள் எல்லாம் ஏற்கனவே அறிந்திருந்தனர். எனவே தேவரை வரவேற்று உபசரித்தார் ராஜேஷ் கண்ணா.

செக்கில் ஒரு பெருந்தொகையை எழுதி ராஜேஷ் கண்ணாவிடம் நீட்டினார் தேவர். அதைப் பார்த்ததும் ராஜேஷ் கண்ணாவுக்கு மயக்கமே வந்துவிடும் போலிருந்தது.

தேவர் ஆங்கிலம் கற்றவர் அல்ல என்றாலும் தான் நினைப்பதை புரிய வைக்கிற அளவுக்கு ஆங்கிலம் பேசிவிடுவார். ராஜேஷ்! ஒன்பேமண்ட் ஒன் ஷெட்யூல்! யூகம். ஐ பினிஷ்! என்று ராஜேஷ் கண்ணாவிடம் கூறிவிட்டு சென்னை திரும்பினார்.

**நேரம் தவறாமை**

ஹாத்தி மேரா சாத்தி, எம்.ஏ.திருமுகம் டைரக்‌ஷனில் வெற்றிகரமாக வளர்ந்தது.



மும்பை நட்சத்திரங்களில் பெரும்பாலானோர் காலை 10 மணிக்குத்தான் படுக்கையில் இருந்து எழுவார்கள். படப்பிடிப்புக்கு தாமதமாகத் தான் வருவார்கள்.

ஆனால் தேவர் நேரம் தவறாதவர். காலை 8 மணிக்கே படப்பிடிப்பை தொடங்கி விடுவார்.

ராஜேஷ்கண்ணா தொடர்ந்து தாமதமாக வந்ததால் ஒருநாள் தேவர் தமிழில் சில அசைவ வார்த்தைகளால் ராஜேஷ் கண்ணாவைத் திட்டினார்.

ராஜேஷ்கண்ணாவுக்கு தமிழ் தெரியாதென்றாலும் தேவர் தன்னைத் திட்டுகிறார் என்பதை புரிந்து கொண்டார். உடனே தேவரை மேக்கப் அறைக்கு அழைத்துச் சென்றார். அவர் காலைத் தொட்டு கும்பிட்டார். பிறகு தன் செருப்பைக் கழற்றி அவர் கையில் கொடுத்து நான் தவறு செய்திருந்தால் என்னை இந்த செருப்பால் அடியுங்கள். ஆனால் பலர் முன்னால் திட்டி அவமானப் படுத்தாதீர்கள். ஏனென்றால் நான் இன்று வட இந்திய பட் உலகில் கௌரவமான நிலையில் இருக்கிறேன் என்று கண்கலங்கக் கூறினார்.

தேவரும் கண்கலங்கி விட்டார். மன்னிச்சுக்க முருகா. இனிமே உன்னைத்திட்ட மாட்டேன்! என்றார்.

மறுநாள் முதல் ராஜேஷ் கண்ணா சரியான நேரத்துக்கு படப்பிடிப்புக்கு வந்தார்.

**வெள்ளி விழா**

ஹாத்தி மேரா சாத்தி படப்பிடிப்பு முடிந்து 14.05.1971 அன்று ரிலீஸ் ஆகியது.

வடநாடு முழுவதும் எல்லாத் தியேட்டர்களிலும் ஹவுஸ்புல் காட்சிகளாக ஓடியது.

ராஜேஷ் (தொடரும்)

யானையுடன் பல சாகசங்கள்

# தேசிய பாதுகாப்பை ஒருபோதும் விட்டுக் கொடுக்கத் தயாரில்லை

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**அரச சார்பற்ற நிறுவனங்களைத் திருப்திப்படுத்துவதற்காக தேசிய பாதுகாப்பை விட்டுக்கொடுக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

இலங்கை ஆயுதப்படைகளில் சிறந்த சேவை ஆற்றியவர்களுக்கான விருதுகளை வழங்கும் நிகழ்வில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'சில தரப்புகள் எதையும் புரிந்து கொள்ளாமல் செயற்படுகின்றன. சில ஊடக நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள் எல்லையை மீறி செயற்படுகின்றன.

அண்மையில் இலங்கை மன்றக் கல்லூரியில் நான் நிகழ்த்திய உரை சிலரால் திரிபுபடுத்தப்பட்டுள்ளது.

சில ஊடகங்கள் தமக்கான சுதந்திரத்தை ஏற்றுக்கொள்ள முடியாத வகையில் தவறாகப் பயன்படுத்துகின்றன.

ஆனால், எவ்வளவு தான் அவர்கள் என்னை விமர்சித்தாலும், தாக்கினாலும், எதிர்த்தாலும், ஆயுதப்படைகளின் மீது வைத்துள்ள நம்பிக்கையை நான் இழக்கப் போவதில்லை.

அரசியலில் விமர்சனங்களும் அவதூறுகளும் எனக்குப் பழகி விட்டது. சில அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நான் ஆணையிட முடியாது.

அரசசார்பற்ற நிறுவனங்களால் இந்தியாவில் ஏற்படுத்தப்படும் தடைகள் தொடர்பாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி விபரித்திருந்தார்.

இலங்கை அனைத்துலக விவகாரங்களில் ஏற்பட்ட தடைகளை நட்பு நாடுகளின் துணையுடன் வெற்றிகரமாக சமாளித்திருக்கிறது.

எனினும் உள்நாட்டிலும் அதனைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்" என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# யுத்தம் இடம்பெற்ற பகுதிகளில் 65,000 வீடுகளை நிர்மாணிப்போம்



## பிரதமர் ரணில் உறுதி

இலங்கையின் ஏற்றுமதிகளுக்கு புதிய சந்தைகளை உருவாக்கிக் கொள்ளும் நிமித்தம் மேலும் 3 வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பில் நாம் பேச்சுக்களை நடத்தி வருகிறோம். இந்தியாவுடனான ஒப்பந்தமொன்றும் சீனா மற்றும் சிங்கப்பூருடன் தலா ஒரு இருதரப்பு ஒப்பந்தங்களும் இவற்றில் அடங்கும். அத்துடன் அம்பாந்தோட்டையில் சீனாவுக்காக 15000 ஏக்கர் காணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் இடம்பெயர்ந்தவர்களுக்கு 65 ஆயிரம் வீட்டுத்தொகுதிகளை நிர்மாணிப்போம். தோட்டப் பகுதிகளில் வீடுகளுக்கான தேவைகளில் 65 சதவீதத்தை 2020 ஆம் ஆண்டாகும் போது பூர்த்தி செய்வதே எமது இலக்காகும் என்றும் பிரதமர் சுட்டிக்காட்டினார். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும். அது சிங்கப்பூர் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்குவிதிகள் சட்டத்திற்கும் ஒப்பானதாய் பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டத் திற்கும் சமப்படுத்தப்படக் கூடியதாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை நாட்டின்பொருளாதார நிலைமை, தேசிய அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாக விளக்கமளிக்கும் வகையில் விசேட கூற்றை முன்வைத்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிரதமரின் முழுமையான விசேட கூற்று வருமாறு,

மக்களின் வருமான மட்டங்களை கூடிய விரைவில் உயர்த்துவதே எமது இலக்காகும். கடந்த 60 ஆண்டு காலத்திலான வருமான அதிகரிப்பு நிலைமையை ஆராய்ந்து பார்க்கும் போது பெரும்பாலான தென்கிழக்காசிய நாடுகளை விடவும் நாம் மிகவும் பின்னிலையிலேயே இருக்கிறோம். அதேபோல், எமது அருகிலுள்ள தெற்காசிய நாடுகளின் வருமான மட்டங்களுடன் ஒப்பிடும் போது நாம் மட்டு மட்டளவில் நெருங்கியுள்ளோம். தற்போது தனிநபர் மொத்த தேசிய வருமானம் 4 ஆயிரம் அமெரிக்க டொலராக உள்ளது. அதை நாம் 8 ஆயிரம் அமெரிக்க டொலராக அதிகரித்துக் கொள்ள வேண்டும்.

பொருளாதார வளர்ச்சி

தற்போது எமது பொருளாதார வளர்ச்சி வேகம் வருடத்திற்கு 5 சதவீதமாக இருக்கிறது. இந்த வேகத்தில் சென்றால் தனிநபர் வருமானம் இருமடங்காவதற்கு நாம் 2033 ஆம் ஆண்டு வரை காத்திருக்க வேண்டிவரும். பொருளாதார வளர்ச்சி வேகத்தை 7 சதவீதமாக பேணிக்கொள்ள முடிந்தால் தனிநபர் வருமானத்தை 2025 ஆம் ஆண்டாகும்போது இரு மடங்காக்கி கொள்ளலாம்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் நிறைவடைந்ததன் பின்னரே கடைசியாக எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகம் 7 சதவீதமாக இருந்திருந்தது. துரதிர்ஷ்டவசமாக சமாதானத்துடன் கிடைத்திருக்க வேண்டிய பொருளாதார பிரதிபலன்களை எம்மால் பெற முடியாமல் போயிருந்தது. தற்போது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன மட்டுமல்லாது, ஐரோப்பா, ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு கடன் வழங்கும் ஏனைய நிதி நிறுவனங்களும் சலுகை வட்டி வீதத்தில் எமது அரசுக்கு கடன் வழங்க மீண்டும் முன்வந்துள்ளன. அதன் மூலம் எமது பொருளாதாரத்தை விஸ்தரித்துக் கொள்ளவும் பலப்படுத்திக் கொள்ளவும் கூடியதாக இருக்கும். நான் இதற்கு முன்னர் பிரதமராக பதவி வகித்த 2001 - 2004 காலப்பகுதியில் தான் இவ்வாறான சர்வதேச நிதி அனுசரணைகள் இறுதியாக இலங்கைக்கு கிடைத்திருந்தன. தற்போது மீண்டும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினாலும் என்னாலும் மீண்டும் வெளிநாட்டு நிதி உதவிகளை மென்மேலும் பெற்றுக் கொள்ள முடிந்துள்ளது.

பிராந்திய உறவு

பிராந்தியத்திலுள்ள பல்வேறு நாடுகளுடனும் இலகுவாக தொடர்புகளை பேணும் நிமித்தம் சர்வதேச விமான நிலையம் மற்றும் 3 துறைமுகங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை நாம் ஆரம்பித்துள்ளோம். மூலதனக் கொடுப்பனவு மற்றும் குறைவான வரி முறைமையொன்றை அடிப்படையாகக் கொண்ட முதலீட்டு ஊக்குவிப்பொன்றை நாம் அறிமுகப்படுத்தவுள்ளோம். இது தொடர்பான மேலதிக விபரங்கள் வரவு - செலவுத் திட்டத்தில் முன்வைக்கப்படும்.

புதிய சட்டம்

ஏற்றுமதி மற்றும் இறக்கு மதி கட்டுப்பாட்டுச் சட்டத்திற்கு பதிலாக புதிய சட்டமொன்று அறிமுகப்படுத்தப்படும். அது சிங்கப்பூர் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஒழுங்குவிதிகள் சட்டத்திற்கும் ஒப்பானதாய பொருட்கள் கட்டுப்பாட்டுச் சட்டத் திற்கும் சமப்படுத்தப்படக் கூடியதாக இருக்கும். எமது உள்நாட்டு தொழில் முயற்சியாளர்களுக்கும் இதில் பாரிய கடமை, பொறுப்புகள் இருக்கின்றன. அவர்கள் போட்டித்தன்மையை மேம்படுத்தி ஏற்றுமதி உற்பத்திகளை அதிகரித்துக்கொள்ள முடியும் அதன்மூலம் தொழில் வாய்ப்புகளும் உருவாகும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் நானும் கடந்த காலங்களில் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டு எமது நாடு தொடர்பில் ஆரோக்கியமான தோற்றப்பாடொன்றை ஏற்படுத்தியுள்ளோம். எமது அந்த முயற்சியின் பெறுபேறுகளை இப்போதே காணக் கூடியதாக இருக்கிறது. ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை 2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து இலங்கைக்கு மீண்டும் வழங்கப்படும் என்று அண்மையில் பிரசெல்ஸ் நகருக்கும் மேற்கொண்டிருந்த விஜயத்தின் போது ஐரோப்பிய ஆணைக்குழுவின் உயர் அதிகாரிகள் நம்பிக்கையுடன் உத்தரவாதமளித்தனர்.

அதுமட்டுமல்லாது ஜப்பான் - இலங்கை முழுமையான ஒத்துழைப்பை ஒருங்கிணைப்பதற்காக ஜப்பான் பிரதமரினால் சிரேஷ்ட அதிகாரியொருவர் நியமிக்கப்பட்டுள்ளார். எமது ஏற்றுமதிகளுக்கு புதிய சந்தைகளை உருவாக்கிக் கொள்ளும் நிமித்தம் மேலும் 3 வர்த்தக ஒப்பந்தங்கள் தொடர்பில் நாம் பேச்சுக்களை நடத்திவருகிறோம். இந்தியாவுடனான ஒப்பந்தமொன்றும் சீனா மற்றும் சிங்கப்பூருடன் தலா ஒரு இருதரப்பு ஒப்பந்தங்களும் இவற்றில் அடங்கும்.

துறைமுகங்கள் மற்றும் விமானநிலையங்களுக்காக செலுத்த வேண்டியுள்ள நிலுவைக் கடன் தொகைகளை ஈடுசெய்வதற்கு எமக்கு பலம் இருக்கிறது. ஆகையால் அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் விமானநிலைய கடன்களை எமது பிள்ளைகளின் மீது சுமத்தமாட்டோம் என்று உறுதியளிக்க முடியும். அதே போன்று அம்பாந்தோட்டையை சர்வதேச விமான மற்றும் கப்பல்துறை சேவை கேந்திர நிலையமாக உருவாக்கும் பயனும் எமக்கு கிடைக்கும்.

நகரங்கள் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலுள்ள மத்திய வகுப்பு குடும்பங்களுக்கு 5 இலட்சம் வீடுகளையும் நகரங்களில் இருக்கும் குறைந்த வருமானம் கொண்டவர்களுக்கு 65 ஆயிரம் வீடுகளையும் நிர்மாணிப்பதற்கு வாய்ப்பேற்படுத்துவதே எமது திட்டமாகும். அதற்கு சமாந்தரமாக யுத்தம் இடம்பெற்ற பிரதேசங்களில் இடம்பெயர்ந்தவர்களுக்கு 65 ஆயிரம் வீட்டுத் தொகுதிகளை நிர்மாணிப்போம். தோட்டப் பகுதிகளில் வீடுகளுக்கான தேவைகளில் 65 சதவீதத்தை 2020 ஆம் ஆண்டாகும் போது பூர்த்தி செய்வதே எமது இலக்காகும்.

பாடசாலைக் கல்வி

13 ஆண்டுகள் பாடசாலைக் கல்வியை பெற்றுக்கொள்வதை நாட்டின் சகல பிள்ளைகளுக்கும் கட்டாயப்படுத்தும் புதிய கொள்கையொன்றை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். அடுத்த வருடம் இதன் முதன்மை திட்டத்தை நாம் ஆரம்பிப்போம்.

தற்போதைய நிலையில் எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு தேவையாக இருப்பது ஒழுங்குபடுத்தலே தவிர கட்டுப்பாடு கிடையாது. பொருளாதாரத்தை மிகவும் சுதந்திரமாக்குவதன் மூலமே செல்வமிக்க நாடாக உருவெடுக்கும் எதிர்பார்ப்பை யதார்த்தமுள்ளதாக தக்கவைத்துக்கொள்ள முடியும். 1978 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட திறந்த பொருளாதாரக் கொள்கையின் விளைவாக மூடிய பொருளாதாரத்தினால் எமது நாட்டிற்கு ஏற்பட்டிருந்த பின்னடைவை போக்கிக்கொள்ள முடிந்திருந்தது. தற்போது அதன் மூன்றாவது தலைமுறையின் மறுசீரமைப்பொன்றை நோக்கி கொண்டு செல்லும் பாரிய சவாலொன்று எம்முன்னிலையில் இருக்கிறது. அந்த சவால்களுக்கு ஒன்றுபட்டு முகம்கொடுப்பதன் மூலமே இலங்கையை ஆசியாவின் நவீன பொருளாதார வெற்றியின் அடையாளமாக்கிக்கொள்ளமுடியும்.

இந்த பொருளாதார மறுசீரமைப்புத் திட்டம் தொடர்பில் மேலதிக விபரங்கள் அடங்கிய நூலொன்றை நாம் விரைவில் வெளியிடுவோம்.

இலங்கை பொருளாதார ரீதியாக உயர்ந்து நிற்பதற்கு கிடைத்திருந்த பல சந்தர்ப்பங்களும்பல்வேறு காரணங்களால் துரதிர்ஷ்டவசமாக எம்மைக் கைவிட்டு சென்றிருந்தது. மீண்டும் அவ்வாறு நடப்பதற்கு இடமளிக்க முடியாது. ஆகையால் தற்போதைய உலகளாவிய யதார்த்தங்கள் மற்றும் இலங்கையிடமுள்ள பலங்கள் மற்றும் வாய்ப்புகளை நாம் புரிந்துகொள்ள வேண்டும். அவை அனைத்திலும் பயன் காண வேண்டும். எம் அனைவருக்கும் பல்வேறு தனிப்பட்ட கருத்துக்கள் இருக்கலாம். அரசியல் நோக்கங்கள் இருக்கலாம். எனினும் அவை அனைத்திற்கும் மேலாக எமது நாட்டைப் பற்றி சிந்திக்குமாறு நான் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். தேசிய அரசாங்கத்தின் அடிப்படையில் நாட்டை முன்னோக்கி எடுத்துச் செல்லும் வாய்ப்புகளில் இருந்து நாம் உச்சபட்ச பலன்களை பெற்றுக் கொள்ள வேண்டும். புரட்சிகர முன்னேற்றத்தை நோக்கி எம்முடன் அனைவரும் ஒன்றிணையுங்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# போர்க்குற்றம் தான்



(டமாஸ்கஸ்)

**சிரியாவில் பாடசாலை மீது நடத்தப்பட்ட வான் தாக்குதலில் மாணவர்கள் உட்பட 35 பேர் பலியாகினர். இது வேண்டுமென்றே நடத்தப்பட்ட தாக்குதல் என்றால், இது போர்க்குற்றம் தான் என ஐ.நா. சபை கருத்து தெரிவித்துள்ளது.**

சிரியாவில் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத் ஆதரவு படைகளுக்கும் கிளர்ச்சியாளர் படைகளுக்கும் இடையே கடந்த 2011ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 15ஆம் திகதி உள்நாட்டுப்போர் தொடங்கியது. அவ்வப்போது சிறிய அளவில் சண்டை நிறுத்தம் அமுல்படுத்தப்பட்டபோதும், தொடர்ந்து 6ஆவது ஆண்டாக இந்த உள்நாட்டுப்போர் நீடிக்கிறது. 3 இலட்சத்துக்கும் அதிகமானோர் இதில் கொல்லப்பட்டு விட்டனர். பல இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர்.

ஆனாலும் சண்டை முடிவுக்கு வந்தபாடில்லை. தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்த நிலையில் அங்குள்ள இட்லிப் மாகாணத்தில் ஹாஸ் என்ற கிராமத்தில் உள்ள பாடசாலை மற்றும், சுற்றுப்புறங்கள் மீது போர் விமானங்கள் 6 முறை வான்தாக்குதல்களை நடத்தின. இதனால் பாடசாலை கட்டடங்கள் பெருத்த சேதத்துக்குள்ளாயின. பெரிய அளவில் கரும்புகை மண்டலம் உருவானது. குழந்தைகளும், ஆசிரியர்களும் கதறினர். துடித்தனர். தவித்தனர்.

"சிரிய ஜனாதிபதி ஆதரவுப் படையினர் நடத்திய இந்தத் தாக்குதலில் 11 மாணவர்கள் உட்பட 35 பேர் கொல்லப்பட்டுள்ளனர்" என லண்டனை தலைமையிடமாகக் கொண்டு செயற்படுகிற சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் கூறியதாக சி. என்.என். தெரிவித்துள்ளது.

இந்த தாக்குதல்களை தொடர்ந்து அங்கு சிரிய மக்கள் பாதுகாப்பு படையினரும், பொதுமக்களும் மீட்புப்பணியில் இறங்கினர். இடிபாடுகளுக்குள் கிடந்தவர்களை மீட்டனர். பலர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது. எனவே பலி எண்ணிக்கை உயரக்கூடும் என சிரிய மனித உரிமை கண்காணிப்பக இயக்குநர் ரமி அப்துல் ரகுமான் கூறினார்.

இந்த பயங்கரத் தாக்குதல் உலக நாடுகளையெல்லாம் உலுக்கி உள்ளது. இதுபற்றி கருத்து தெரிவித்த ஐ.நா. சபையின் குழந்தைகள் நல அமைப்பு யுனிசெப்பின் செயல் இயக்குநர் டோனி லேக், "இது மிகப்பெரிய துயரம். இது ஒரு கொடிய குற்றம். இந்தத் தாக்குதலை வேண்டுமென்றே நடத்தி இருந்தால், அது போர்க் குற்றம் ஆகும்" எனத் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "கடந்த 5 ஆண்டுகளுக்கு முன்பாக போர் தொடங்கிய பிறகு நடந்த மிகக் கொடூரமான வன்செயல் இதுதான்" எனவும் தெரிவித்தார்.

தாக்குதல் நடந்த வளாகத்தில் 3 பாடசாலைக்கூடங்கள் இயங்கி வந்ததாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இந்தத் தாக்குதலை ஜனாதிபதி ஆதரவுப் படையினர் நடத்தியுள்ளதாக சிரிய மனித உரிமை கண்காணிப்பகம் கூறினாலும், சிரியாவின் போர் விமானங்களையும், ரஷ்யாவின் போர் விமானங்களையும் பிரித்துப் பார்ப்பது கடினம் என கூறப்படுகிறது. கடந்த ஆண்டு முதல் ஜனாதிபதி பஷார் அல் ஆசாத்துக்கு ஆதரவாக ரஷ்யாவும் வான்தாக்குதல்கள் நடத்தி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 25 ஆண்டுகளில் முதன் முறையாக
# கியூபா மீதான வாக்கெடுப்பை அமெரிக்கா புறக்கணித்தது

கியூபா மீதான வாக்கெடுப்பை அமெரிக்கா புறக்கணித்தது வரவேற்கத்தக்க முடிவு என இந்தியா உள்ளிட்ட நாடுகள் வரவேற்று கருத்து தெரிவித்துள்ளன.


அமெரிக்காவுக்கும் கியூபாவுக்கும் இடையே 50 ஆண்டுகளுக்கு மேலாக தீராப் பகைமை நிலவி வந்தது.

ஆனால் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவும் கியூபா ஜனாதிபதி ராவுல் காஸ்ரோவும் 2014ஆம் ஆண்டு சந்தித்து பேசி இணக்கமாகினர். இதைத் தொடர்ந்து இரு நாடுகளுக்கு இடையே மீண்டும் தூதரக உறவு மலர்ந்துள்ளது.

இந்த நிலையில் கியூபாவுக்கு எதிராக அமெரிக்கா பிறப்பித்த வர்த்தகத் தடையை முடிவுக்கு கொண்டுவருவது தொடர்பான வாக்கெடுப்பு, ஐ.நா. பொதுச்சபையில் நடந்தது. இதில் இந்தியா உட்பட 190 நாடுகள் ஆதரவு தெரிவித்தன. கிட்டத்தட்ட கருத்தொற்றுமை ஏற்பட்டது. 25 ஆண்டுகளாக இதை எதிர்த்து வந்த அமெரிக்கா, முதல் முறையாக வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை.

இது வரவேற்கத்தக்க முடிவு என இந்தியா உள்ளிட்ட நாடுகள் வரவேற்று கருத்து தெரிவித்துள்ளன. (இ-7)

# அரசு முறை பயணமாக மோடி ஜப்பான் செல்கிறார்



(டில்லி)

இந்தியப் பிரதமர் மோடி அரசு முறை பயணமாக ஜப்பானிற்கு 2 நாட்கள் செல்லவுள்ளார். எதிர்வரும் நவம்பர் மாதம் 11.12 ஆகிய திகதிகளில் பிரதமர் மோடி ஜப்பான் செல்கிறார். மேலும் இந்த பயணத்தில் ஜப்பான் நாட்டிற்கும் இந்தியாவிற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல கையெழுத்து ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (இ-7)

# பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் மாநாடு




பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் மாநாடு நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் நடந்து வருகின்றன.

பயங்கரவாதத்திற்கும், பயங்கரவாதிகளுக்கும் ஆதரவு அளித்து வருவதாக சர்வதேச நாடுகள் பாகிஸ்தானிற்கு கண்டனம் தெரிவித்து வருகின்றன. இந்நிலையில் பாகிஸ்தானில் பயங்கரவாதிகள் மாநாடு நடத்த திட்டமிட்டுள்ளனர். இதற்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. மாநாட்டு ஏற்பாடுகள் நடைபெறுவது தொடர்பாக புகைப்படங்கள் தற்போது வெளியாகி, பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. மாநாடு ஏற்பாடுகளை பயங்கரவாத இயக்கத் தலைவர்கள் பார்வையிடுவது போன்ற புகைப்படமும் வெளியாகி உள்ளது.

### பலத்த பாதுகாப்பு

பாகிஸ்தானில் 10இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு பயங்கரவாதிகள் தீயிட்டு எரித்துள்ள நிலையில் அங்கு பயங்கர வாதிகள் மாநாடு நடக்கவுள்ளது. இதனையடுத்து பாகிஸ்தானில் பார்லிமென்ட் கட்டடத்திற்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பார்லி வளாகத்தை சுற்றி பாதுகாப்புப்படைகள் குவிக்கப்பட்டுள்ளன. (இ-7)

# விண்வெளியில் விவசாயம்



(லொஸ் ஏஞ்சல்ஸ்)

பூமியைப் போன்று விண்வெளியிலும் உணவுவகைகளை பயிர் செய்யும் முயற்சியில் நாசா இறங்கியுள்ளது. சர்வதேச விண்வெளி நிலையத்தில் இலை கோஸ் ரக கீரை வகை பயிர் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஆய்வை நாசா விண்வெளி வீரர் ஷேன் கிம்புரோ தொடங்கி வைத்திருக்கிறார். இதுகுறித்து இந்த திட்டத்தின் மேலாளர் நிக்கோல் டம்பர் கூறுகையில், "நாங்கள் எதிர் பார்த்ததைவிட பணிகள் சிறிது மந்தமாகவே நடைபெற்றன. எனினும் அனைத்து வகை கீரைகளையும் வெற்றிகரமாக பயிர் செய்து விட்டோம்.

இந்தக் கீரை வளர நான்கு வாரங்கள் ஆகும். அதன்பின் இவற்றை அறுவடை செய்வோம்" என்றார். இந்த செடிகளை உரம் இட்டு, தண்ணீர் ஊற்றி ஏற்கனவே வளர வைத்திருப்பார்கள்.

வளரவைத்த செடிகள் என்பதால் விண் வெளியில் இந்த செடிகளுக்கு சிறிது தண்ணீர் ஊற்றி நட்டு வைத்தாலே அவை விரைவாக வளர்ந்து விடும் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்காலத்தில் செவ்வாய்க் கிரக ஆராய்ச்சிக்கு விஞ்ஞானிகள் செல்லும்போது அங்கு ஏற்படும் உணவுபிரச்சினையை தீர்க்கவே இந்த முயற்சியில் நாசா விஞ்ஞானிகள் இறங்கியுள்ளதாக கூறப்படுகிறது. (இ-7)

# புனித மக்கா நகர் மீது ஏவுகணைத் தாக்குதல்

(றியாத்)

இஸ்லாமியர்களின் புனித நகரமான மக்கா மீது அயல் நாடான ஏமனில் உள்ள ஹவுத்தி இனப் போராளிகள் ஏவுகணையை வீசி தாக்குதல் நடத்தியதாக சவுதி அரேபியா குற்றம்சாட்டியுள்ளது.

ஏமன் நாட்டில் அரசுக்கு எதிராக ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஹவுத்தி இனப்போராளிகளை ஒடுக்க சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் கடந்த ஆண்டு மார்ச் மாதத்தில் இருந்து தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.



இந்நிலையில், சவுதி அரேபியா நாட்டில் உள்ள இஸ்லாமியர்களின் புனித நகரமான மக்காவை குறிவைத்து நேற்று ஏமனில் உள்ள ஹவுத்தி இனப் போராளிகள் ஏவுகணையை வீசி தாக்குதல் நடத்தியதாகவும் மக்காவில் இருந்து சுமார் 65 கிலோ மீற்றர் தூரத்தில் அந்த ஏவுகணையை சவுதி நாட்டின் விமானப் படைகள் தடுத்து நிறுத்தி தாக்கி அழித்ததாகவும் சவுதி அரசு நேற்று வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# மொசூல் நகரை மீட்கும் போரில் 900 தீவிரவாதிகள் உயிரிழப்பு!

## பெருமளவானோர் கைது

(டமாஸ்கஸ்)

ஈராக்கில் இஸ்லாமிய தீவிரவாதிகளின் கோட்டையாக திகழும் மொசூல் நகரை மீளக் கைப்பற்றும் ஈராக் படையினரின் படை நடவடிக்கையில் இதுவரை 900 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் பெருமளவானோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக 900 தீவிரவாதிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் 23 தீவிரவாதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் ஈராக்கின் கூட்டு நடவடிக்கை கட்டளை மையம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், 127 கார்க்குண்டுகள், 27 தற்காலிக மோட்டார் ஏவுகணைகள், ஏழு வெடி பொருட்கள் மற்றும் ஆயுதக் கிடங்கு ஆகியன அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




அத்துடன், இஸ்லாமிய தீவிரவாதிகளின் நான்கு நிலைகள், 397 வெடி பொருள் சாதனங்கள் மற்றும் ஐந்து மோட்டார் சைக்கிள் குண்டுகள் தகர்க்கப்பட்டுள்ளதாகவும், மூன்று சுரங்கங்கள், தீவிரவாதிகளின் ஒரு கட்டளை மையம், 40 தற்காப்பு போர் நிலைகள், விமான குண்டுத்தாக்குதல்களிலிருந்து பாதுகாக்கும் ஏழு பதுங்கு குழிகள் மற்றும்மூன்று கனரக இயந்திரத் துப்பாக்கிகள் அழிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் 1.5 தொன் அமோனியம் நைட்ரேட், 120மில்லி மீற்றர் மோட்டார் குண்டுகள் ஒன்பது, 380 பீரங்கிக் குண்டுகள், கற்யுசா ரொக்கெட்கள் 61, ஏவுகணை செலுத்திகள் 31, பி.கே இயந்திர துப்பாக்கிகள் மூன்று, மற்றும் ஏவுகணைத் தாங்கிகள் நான்கு பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, ஈராக் படைகளால் தீவிரவாதிகளின் நான்கு பீரங்கிகள் அழிக்கப்பட்டு நான்கு கனரக இயந்திரத் துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன், இரண்டு வெடிகுண்டு உருவாக்கும் பட்டறைகள் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ளது. (இ-7)

# கடத்தப்பட்டவரின் குடும்பத்தினர் கராச்சியில் நேற்று ஆர்ப்பாட்டம்




(கராச்சி)

கராச்சியில் பாகிஸ்தான் இராணுவத்தால் ஒக்டோபர் 4 ஆம் திகதி ஷபீர் பலோச் கடத்தப்பட்டார். கடத்தப்பட்ட ஷபீரின் நிலைமை என்னவென்று தெரியாததால் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கராச்சி பத்திரிகையாளர் சங்கத்தின் முன் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (இ-7)




# அமெரிக்காவில் சிரியா அகதிகள் வந்து குடியேறுவது முற்றிலும் ஒழிக்கப்படும்

## டொனால்ட் ட்ரம்ப் மீண்டும் சர்ச்சை

(வோஷிங்டன்)

தான் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டால் அமெரிக்காவில் சிரியா அகதிகள் குடியேறுவது முற்றிலும் ஒழிக்கப்படும் என்று குடியரசுக் கட்சி ஜனாதிபதி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க தேர்தல் களம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ள நிலையில் ஓகியோ மாகாணத்தில் தனது ஆதரவாளர்களிடம் பேசிய போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இஸ்லாமிய தீவிரவாதிகளிடம் இருந்து நாட்டை பாதுகாப்பதில் சமரசத்திற்கே இடமில்லை என்ற அவர் தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடுகளில் இருந்து அமெரிக்காவில் குடியேறுவது முற்றிலும் தடுக்கப்படும் என்றார்.



இதனிடையே வடக்கு கரோலினாவில் ஜனநாயக கட்சி வேட்பாளர் ஹிலாரி கிளின்டனுடன் கூட்டாக பிரசாரத்தில் ஈடுபட்டார் பராக் ஒபாமாவின் மனைவி மிச்சேல். அப்போது பேசிய அவர் பராக் ஒபாமா, பில் கிளின்டன் ஆகியோரை காட்டிலும் திறமையானவர் ஹிலாரி என்று பெருமிதம் தெரிவித்தார்.

இதனிடையே நியூயோர்க்கில் குடியரசுக் கட்சி சார்பில் துணை ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் மைக் பென்ஸ் விமான விபத்தில் சிக்கியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அவர் சென்ற விமானம் ஓடுபாதையில் இருந்து விலகி நிலை குலைந்தது. இதில் அதிர்ஷ்டவசமாக பயணிகள் யாரும் பாதிக்கப்படவில்லை. (இ-7-10)

எதிலும் ஓர் ஒழுங்கை கடைப்பிடியுங்கள். சீரிய முறையில் அணிவகுத்து வைக்கப்பட்டிருக்கும் படையே எதிரிக்கு பயத்தைக் கொடுக்கும். - *யாரோ*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அதர்மம் அழிந்தால் மட்டுமே தீபத் திருநாள் அர்த்தம் பெறும்

இன்று தீபாவளித் திருநாள். நரகாசுரன் எனும் அசுரனை வதம் செய்து தர்மம் நிலைநாட்டப்பட்ட நாள்.

இந்நாள் தீபங்கள் ஏற்றப்பட்டு ஒளிமயமான நாளாகப் போற்றப்படுவதன் அர்த்தமாக தீபாவளித் திருநாள் உலகுவாழ் இந்துக்களால் கொண்டாடப் படுகிறது.

அதர்மம் என்பது இருள் மயமானது. தர்மம் ஒளி மயமானது. இருள் மயமான அதர்மம் தலைவிரித்தாடும்போது அதனை அடக்கி அழித்து தர்மத்தை நிலைநாட்ட வேண்டும்.

அவ்வாறு தர்மம் நிலைநாட்டப்பட்டால், அது மனித சமூகத்துக்கு ஒளிமயமான வாழ்வைக் கொடுக்கும். இந்த அர்த்தத்தை உணர்த்துவதே தீபாவளித் திருநாள்.

ஆக, ஒவ்வொரு மனிதனும் தன்னளவில் தர்மத்தைப் பாதுகாக்கப் பாடுபட வேண்டும். இதற்காக நரகாசுரனை வதம் செய்ய வந்த நாராயணமூர்த்தி போல அவதாரம் எடுத்தல் தேவையன்று.

மாறாக ஒவ்வொருவரும் மனத்தால், மெய்யால், மொழியால் பிறர்க்குத் தீங்கு செய்யாமல் இருந்தால் - தன்வாழ்நாள் முழுமையிலும் தர்மத்தோடு நடப்பது என்று திடசங்கற்பம் கொண்டால் அது போதுமானது.

எனினும் இலங்கைத் தமிழ் மக்களைப் பொறுத்த வரை அவர்கள் தர்மத்தை நிலைநாட்ட வேண்டும் என நினைப்பதாகத் தெரியவில்லை. எங்கள் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அளிக்கின்ற வாக்குகளை தர்மத்தைக் காக்கும் வண்ணம் அளித்தால் அதுவே போதுமானதாகும்.

இதைவிடுத்து தேர்தல் வருகிறது. ஆசாடபூதிகள் கும்பிடு கோலத்தில் வந்து போயினர். எனவே அவர்களுக்கு எங்கள் வாக்கு என்று கடன் கழிப்புச் செய்துவிட, மக்களின் வாக்குகளைப் பெற்றவர்கள் என்ன செய்கிறார்கள் என்பது இப்போது தெரிகிறதல்லவா? இஃது நாம் நமக்கு விலை கொடுத்து வாங்கிக் கொண்டதுதான்.

உதாரணத்துக்கு நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபை கூடி பிரதி அவைத் தலைவரைத் தெரிவு செய்திருந்தமை யாவரும் அறிந்ததே.

தான்வரும்வரை பிரதி அவைத்தலைவரை தெரிவு செய்ய வேண்டாம் என்று வடக்கு முதலமைச்சர் கேட்டுக் கொண்டிருந்த போதிலும் அதனை மீறி வடக்கு மாகாண சபையில் ஒரு சிலரின் திமிர்த்தனம் அரங்கேறி இருக்கின்றது என்றால்,

தமிழ் மக்கள் அளித்த வாக்குகள் தங்கள் தலையில் மண்ணைக் கொட்டுவதற்கு என்பது தெரிகிறதல்லவா?

வடக்கின் முதலமைச்சர் தமிழ் மக்களின் நலன் சார்ந்து, வடபுலத்தின் அபிவிருத்தி சார்ந்து இலண்டனுக்குச் சென்றிருக்கும் வேளையில்,

நான் வரும்வரை பிரதி அவைத்தலைவர் தெரிவை செய்ய வேண்டாம் என்று கேட்டுக் கொண்ட நிலையில், பிரதி அவைத்தலைவரை அவசர அவசரமாகத் தெரிவு செய்ததன் நோக்கம் என்ன?

வடக்கு முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் வடக்கு மாகாண சபை இல்லை. நானே வடக்கு மாகாண சபையை நடத்துகிறேன். ஆகையால் இந்த வடக்கு மாகாண சபை பேரினவாதத்தோடு சேர்ந்துதான் செயற்படும் என்பதை காட்டுவதற்காக அன்றி வேறு எதற்காகவும் பிரதி அவைத் தலைவர் தெரிவை செய்திருக்க வேண்டியதில்லை.

தமிழ் மக்களின் நிலைமையை புரிந்துகொள்ளாத சிலர் இப்போது வடக்கு மாகாண முதலமைச்சரின் பெறுமதியை, அவர் மீது உலகம் கொண்டுள்ள மதிப்பை குறைப்புச் செய்யும் குப்பை வேலையை அரங்கேற்றியுள்ளனர்.

இங்குதான் அதர்மத்தை ஆசனத்தில் இருத்திவிட, தர்மம் இல்லாத இடத்து அதர்மம் அக்கிரமம் செய்து தமிழினத்தின் ஒளிமயமான எதிர்காலத்தையே நாசமாக்கிவிட்டது.

வடக்கு முதலமைச்சரின் கோரிக்கைக்கு வட மாகாண சபை மதிப்பளிக்காதபோது சிங்களத் தலைவர்கள் - சர்வதேச பிரதிநிதிகள் எங்ஙனம் முதல்வரின் வார்த்தைக்கு மதிப்பளிப்பர்.

ஆக, போட்ட திட்டத்தை நிறைவேற்றி தமிழினத்தின் தலையில் மண்ணை கொட்டியவர்கள் தொடர்பில் தமிழ் மக்கள்தான் இனி தீர்ப்பு வழங்க வேண்டும்.

# யாழில் முஸ்லிம்கள் மீள்குடியேற ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## முஸ்லிம் ஐக்கிய மக்கள் அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுடன் ஒற்றுமையாக வாழவே விரும்புவதாக தெரிவித்துள்ள யாழ். மாவட்ட முஸ்லிம் ஐக்கிய மக்கள் அமைப்பு யாழ்.மாவட்டத்தில் முஸ்லிம்கள் மீள்குடியமருவதற்கு அரச அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

அவ்வாறு யாழ். மாவட்டத்தில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் முழுமைப்படுத்தப்பட்டால் தான் வடக்கு கிழக்கு இணைப்பு தொடர்பில் எம்மால் பரிசீலனை செய்ய முடியும். இல்லையேல் கிழக்கு மாகாண முஸ்லிம் மக்களே வடகிழக்கு இணைப்பு பற்றி தீர்மானிப்பார்கள் எனவும் தெரிவித்துள்ளனர்.

ஐந்து சந்தியில் அமைந்துள்ள பள்ளிவாசலில் மௌலவி சுபியான் தலைமையில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் சந்தப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடமாகாணத்திலிருந்து முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு இம் மாதம் 30ம் திகதியுடன் 26 வருடங்கள் முடிவடைகின்றது. வடமாகாண முஸ்லிம்கள் இனச் சுத்திகரிப்பு நிகழ்த்தப்பட்டு இப்போது இரண்டரை சகாப்தங்களையும் கடந்து எங்களில் புதிய மூன்றாவது சந்ததிகளும் உருவாகி விட்டனர்.

இச் சம்பவங்கள் நிகழ்த்தப்பட்ட அந்தக் கணத்திலிருந்து இன்று வரை உள்நாட்டு அளவிலும் சர்வதேச ரீதியிலும் இந்தக் கொடும் நிகழ்விற்கு உரிய அரசியல் முக்கியத்துவம் சரியான முறையில் வழங்கப்படவில்லை.

துன்பவியல் சம்பவம், தவிர்த்திருக்க வேண்டிய சம்பவங்கள், கவலைக்குரிய நிகழ்வுகள், தீய சக்திகளின் சதி நடவடிக்கைகள் போன்ற சொற்பிரயோகங்களுக்குள் வடமாகாண முஸ்லிம்களின் மீதான இனச் சுத்திகரிப்பும் பலவந்த வெளியேற்ற நடவடிக்கைகளும் திட்டமிட்டு மறைக்கப்பட்டு வந்திருக்கின்றன என்று நினைக்கும் அளவிற்குத்தான தற்போது யாழ்ப்பாணம் மாவட்ட முஸ்லிம் மக்களின் மீள் குடியேற்ற நகர்வுகள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றன.

யாழ் மாவட்ட முஸ்லிம் மக்கள், தற்போது ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் மீள்குடியேறி வாழ்வதற்காக வந்துள்ளனர், வருகின்றனர். வருவதற்கு எதிர்பார்த்துள்ளனர். எனினும் முஸ்லிம்களின் பலவந்த வெளியேற்றத்தைப் பற்றி மேற்கூறிய வார்த்தைகளெல்லாம் கூறி முஸ்லிம்களை அமைதிப்படுத்திய தமிழ், சமய, சமூக அரசியல் தலைமைகள் யாழ் மாவட்ட முஸ்லிம்களின் மீள் குடியேற்றத்தில் அக்கறையற்றிருப்பதும் அம் மக்களின் நலன்களில் தேவைகளில் அலட்சியமாக இருப்பதும் யாழ்.மாவட்ட முஸலிம்களை துயரத்தில் ஆழ்த்தியுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-4)

# லசந்த விக்கிரமதுங்க கொலை; இராணுவ புலனாய்வாளருக்கு பிணை

சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்டு, தடுத்து வைக்கப்பட்டிருந்த இராணுவ புலனாய்வாளரான பிரேமானந்த உதலாகம பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கல்கிஸ்சை நீதவான் மொஹமட் சஹாப்தீன் முன்னிலையில் இந்த வழக்கு நேற்று முன்தினம் வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தலா 50 ஆயிரம் ரூபா ரொக்கம் மற்றும் 5 இலட்சம் ரூபா சரீரப் பிணையில் செல்ல சந்தேகநபருக்கு அனுமதி வழங்கிய நீதிபதி, வெளிநாடு செல்வதற்கு தடைவிதித்து உத்தரவிட்டார்.

சந்தேகநபர், இராணுவ முகாம்களுக்கு செல்வதற்கும் எந்தவொரு இராணுவ புலனாய்வு சேவை நடவடிக்கையில் ஈடுபடுவதற்கும் நீதிபதி தடைவிதித்துள்ளார்.

இதனிடையே லசந்த விக்கிரமதுங்கவை தாமே கொலை செய்ததாக கடிதமொன்றை எழுதி வைத்து விட்டு தற்கொலை செய்ததாக கூறப்படும் ஓய்வுபெற்ற இராணுவ புலனாய்வு அதிகாரியின் இரண்டாவது பிரேத பரிசோதனை கடந்த 26 ஆம் திகதி நடைபெற்றிருந்தது.

51 வயதான முன்னாள் இராணுவ புலனாய்வு அதிகாரியான இளந்தாரிகே ஜயமான்ன, கடந்த 14 ஆம் திகதி கேகாலையிலுள்ள அவரின் வீட்டின் சமையலறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்தார்.

இதேவேளை முன்னாள் இராணுவ அதிகாரிகளை விசாரணைக்குட்படுத்தும் விடயம் குறித்து ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இம்மாத ஆரம்பத்தில் தனது அதிருப்தியை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

## சார்ட்டக் நிறுவனத்தில் உறுப்பு நாடாகும் இலங்கை

(கொழும்பு)

ஐ.எம்.எப். இன் தெற்காசிய பிராந்திய தொழில்நுட்ப பயிற்சி மற்றும் உதவிகளுக்கான அமைப்பாக டில்லியில் அமைகின்ற மேற்படி அமைப்பிற்கு தனது உறுப்புரிமைத் தொகையாக 5 மில்லியன் அமெரிக்க டொலர் செலுத்துவதன் மூலம் அதில் இணையும் ஏனைய நாடுகளுடன் இலங்கையும் இணைந்து கொள்கிறது. கடந்த மார்ச்சில் இதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கையொன்றில் இந்தியாவுடன் ஐ.எம்.எப்.கைச்சாத்திட்டிருந்தது. இந்த உத்தேச அமைப்பானது உறுப்பு நாடுகளின் திறைசேரி முகாமைத்துவம், நிதி சார் நடவடிக்கை, நிதி நிர்வாக ஒழுங்குகள் மற்றும் மேற்பார்வை போன்ற பரந்துபட்ட பல்வேறு செயற்பாடுகளையும் திட்டமிட்டு ஒருங்கிணைத்து ஐ.எம்.எப். இன் அபிவிருத்தி ஆற்றல்களுக்கிணையாக நடைமுறைப்படுத்தும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

இந்த அமைப்பின் ஒழுங்கமைக்கப்பட்ட நிறுவனப் பயிற்சிகளூடாக கொள்கைத திட்டமிடல் வல்லுநர்கள் மற்றும் ஏனைய அரச முகவர்களுக்கு பாடத்திட்டங்களை ஏற்பாடு செய்து நெறிப்படுத்துவது, செயலமர்வுகளை ஒழுங்கு செய்வது போன்ற உதவிகள் மூலம் அரச நிர்வாக வழிமுறைகளை இலகுவாக்கிக் கொடுக்கிறது. இந்தவிதமான உதவகள் உறுப்பு நாடுகளுக்குப் போலவே இலங்கைக்கும் கிடைத்திருக்கிறது.

நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரங்களின் படி அமைப்பின் செயற்குழுவில் இலங்கை இணைந்து கொள்வதில் அக்கறை கொண்டுள்ளது. இந்த அமைப்பின் உறுப்புரிமைச் சான்றாகவும் அதன ஸ்திரத்தன்மைக்குமான ஆதாரமாகவும் வருடாந்தம் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர் 5 வருடங்களுக்குத் தேவைப்படுமென அப்பத்திரங்கள் மூலம் அறிவிக்கப்படுகிறது.

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து 6மணி வரை **யாழ்.பிரதேசத்தில** மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான், சோளாவத்தை அராலி வீதியின் ஒரு பகுதி, புங்குடுதீவு, ஆஸ்பத்திரிவீதி,காரைநகர் சந்தி வீதியிலிருந்து கே.கே.எஸ். வீதி சந்தி வரை, சீனிவாசகம் வீதி, சிவன் பண்ணை வீதியின் ஒரு பகுதி, கே.கே. எஸ்.வீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து சத்திரச் சந்தி வரை, சப்பல் வீதி, யாழ். 1ஆம்,2ஆம்,3ஆம்,4 ஆம் குறுக்குத் தெருக்கள் வேம்படிச் சந்திவரை, பிரதானவீதி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து விஜிதா கபே வரை, மாவடி, மூளாய், வடடுக்கோட்டை, அராலி, மண்கும்பான் தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, மண்கும்பான் கடற்படை முகாம், மண்டைதீவு வெலுசுமண இலங்கை கடற்படை முகாம், புங்குடுதீவு இலங்கை கடற்படை முகாம், யாழ். சிறைச்சாலை, யாழ். பொலிஸ் நிலையம், யாழ். துரையப்பா விளையாட்டரங்கு, இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், யாழ்.பொது நூலம், யாழ்.நீதிமன்றக் கட்டடத் தொகுதி, தேசிய நீர் வழங்கல் வடிகால் சபையின் பிராந்திய முகாமையாளர் அலுவலகம், இலங்கை மின்சார சபையின் வடமாகாணப் பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம்ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில** Hydramany ஆடைத் தொழிற்சாலை, வவுனியா ஆகிய பிரதேசங்களிலும் மின்தடைப்படும். (இ-9)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



❖ ஒரு சிறிது அதிகமாகப் பண்பட்ட மொழியை நீ பேசுவதால் வீதியில் திரியும் மனிதனைவிட சிறந்தவனாக சீ உன்னைக் கருதுகின்றாய். அனைத்துக்கும் மேலாக கல்விப் பெருமை உன்னிடம் புகுந்த அன்றே நீ அழிந்தாய். இருக்கும் தளைகள் எல்லாவற்றினும் மிகப் பயங்கரமானது அதுவே.

❖ கட உபநிடதத்தில் காணும் பெருமைமிக்க சொல்லான சிரத்தை என்பது என் நினைவில் எழுகின்றது. சிரத்தையாவது வியத்தகு நம்பிக்கையையே அதைப்போதிப்பதே- அதாவது உண்மையான நம்பிக்கையை ஊட்டுவதே- எனது வாழ்க்கைத் தொண்டாகும். மக்களிடமும் எல்லா மதங்களிலும் அமைந்துள்ள திறன் மிகுந்த பகுதிகளில் ஒன்று இந்த நம்பிக்கை என்பதை நான் மீண்டும் உங்களுக்கு கூறுவேன்.

❖ முதலில் உங்களிடம் நம்பிக்கை கொள்ளுங்கள். பணக்காரர்களை எதிர்பார்க்காதீர்கள். உலகிலுள்ள மிக மிகப்பெரிய செயல்களைப் புரிந்தவர்கள் ஏழைகளே. நிலைத்திருங்கள்; அனைத்திற்கும் மேலாக முற்றிலும் தூய்மையும் உண்மையும் உடையவராக இருங்கள். உங்கள் விதியில் நம்பிக்கை கொள்ளுங்கள்.

❖ எதனையும் ஏளனமாகச் சிரிப்பதும் எண்ணமும் சிந்தனையின்மையும் நமது நாட்டு மக்களின் இரத்தத்தில் ஊறி வரும் பயங்கரமான நோய். இந்த நம்பிக்கையைப் பற்றுக. ஏனைய யாவும் பின்னே வருவது உறுதி.

# மாலுசந்தி மைக்கலை வீழ்த்தியது அல்வாய் முத்துமாரி அம்மன் அணி





மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் மின்னொளியிலான கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் ஒரு அங்கமாக இளையோர் அணிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில் மாலுசந்தி மைக்கல் அணியை வீழ்த்தி அல்வாய் முத்துமாரி அம்மன் அணி வெற்றி பெற்றுள்ளது.

18 வயது கீழ் பிரிவு வீரர்கள் பங்குபற்றிய இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அல்வாய் முத்துமாரி அம்மன் அணி 6 ஓவர்களில் 41 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு ஆடிய மைக்கல் அணி 32 ஓட்டங்களைப் பெற்றது. இறுதியில் 9ஓட்டங்களினால் அல்வாய் முத்துமாரி அம்மன் அணி வெற்றி பெற்றது. (க)

# முதலிடத்தை பெற்றது சுழிபுரம் பிரதேச சபை



உள்ளூர் வாரத்தை முன்னிட்டு வல்வெட்டித்துறை பிரதேச சபை நடத்திய கிளித்தட்டு போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் சுழிபுரம் வல்வெட்டித்துறை நல்லூர் A.B ஆகிய அணிகளுக்கிடையில்நடைபெற்ற கிளித்தட்டு போட்டியில் சுழிபுரம் பிரதேச சபை முதல் இடத்தை தட்டிச்சென்று கோப்பையை தனதாக்கிக்கொண்டது.வெற்றி பெற்ற அவ் அணியினரை படத்தில் காணலாம். (க)

# கனடா கராத்தே சுற்றுப்போட்டி தமிழ் மாணவர்களுக்குப் பதக்கங்கள்



கனடாவின் ரொரன்ரோ மாநிலத்தில் நடைபெற்ற கராத்தே ஒன்ராரியோ (The Governing Body For Karate in Ontario) சம்மேளனத்தின் சுற்றுப்போட்டியில் கோல்டன் கராத்தே தோமார்ஸஸ் ஆர்ட்ஸ் ஓர்கனைசேஸன் கழக மாணவர்கள் 10 பதக்கங்களை காட்டா மற்றும் குமித்தே போட்டிகளில் சுவீகரித்தனர்.

பயிற்றுநர் சென்சேய் எஸ். மனோகரனின் நேரடி வழி நடத்தில் இந்த சுற்றுப்போட்டியில் தமிழ் மாணவர்கள் பதக்கங்களை சுவீகரித்திருந்தனர்.மேற்படி கழக பயிற்றுநர்கள் மற்றும் சிரேஷ்ட மாணவர்களுக்கான சிறப்பு பயிற்சியை சிகான் அன்ரோ டினேஸ் கனடாவில் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)





அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் பூப்பந்தாட்டத்தில் சிறார்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் இலவச பூப்பந்தாட்ட பயிற்சிகள் வடமாகாண பூப்பந்தாட்ட பயிற்சியாளரினால் அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் உள்ளக அரங்கில் வழங்கப்பட்டு வருவதனை படத்தில் காணலாம்.

# மைலோ வெற்றிக்கிண்ண உதைபந்தாட்டத் தொடர்

யாழ்.மாவட்ட விளையாட்டு திணைக்களத்தால் நடத்தப்படும் மைலோ வெற்றிக் கிண்ண 2016 உதைபந்தாட்டத்தொடர் தீவக லீக்கில் அங்கத்துவ கழகங்களிற்கிடையிலான தெரிவு போட்டிகள் 2,3 ஆம் திகதி நவம்பர் 2016 இருதயராஜா விளையாட்டுக்கழகம் மெலிஞ்சிமுனை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

எனவே போட்டியில் கலந்து கொள்ள தெரிவு செய்யப்பட்டுள்ள கழகங்கள் அனைத்தும் 02.11.2016 புதன் காலை 8.30 மணிக்கு இருதயராஜா வி.க. மைதானத்தில் சமுகம் தந்து ஆரம்ப நிகழ்வை சிறப்பித்து தொடர்ந்து போட்டியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

077 959 5111, 077 643 2655 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பினை ஏற்படுத்துக. (க)

# மாலுசந்தி மைக்கல் இறுதிப்போட்டிக்கு கொம்மாந்தறை இளைஞர், யாழ்.A,B தகுதி





மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திவந்த மின்னொளியிலான அணிக்கு 5ஓவர் 6பேர் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் 42 அணிகள் பங்குபற்றியது. கடந்த 4 தினங்களாக நடைபெற்றுவந்த விலக்கல் முறையிலான போட்டிகளில் நேற்று முன்தினம் 6 அணிகளுக்கு லீக் முறையில் போட்டிகள் நடைபெற்றன.

இதில் யாழ்ப்பாணம் A,B கொக்குவில் காமாட்சி, கரவெட்டி ஞானம்ஸ், சங்கானை உதயதாரகை, வல்வை அணிகள் மோதின. இரு பிரிவுகளாக நடைபெற்ற போட்டியில் அதிக புள்ளிகளைப் பெற்ற அணிகளான கொம்மாந்தறை இளைஞர், யாழ்ப்பாணம் AB இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (க)

# தீபாவளித் தினத்தை முன்னிட்டு தடகள விளையாட்டுப்போட்டி

தீபாவளித் தினத்தை முன்னிட்டு கண்ணகை அம்மன் கோவிலடி சனசமூக நிலையமும் கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழகமும் இணைந்து நடத்தும் மாபெரும் தடகள விளையாட்டுப்போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கோப்பாய் ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில்தலைவர்சோ.கண்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிபதிராசாவும் சிறப்பு விருந்தினராக பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனும் வடமாகாண சபை உறுப்பினர் ச.சுகிர்தனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஒவ்வொரு வயதுப்பிரிவினருக்கான தடகளப்போட்டி, தயிர் முட்டி அடித்தல், கிறிஸ்கம்பம் ஏறுதல், மெதுவான சைக்கிள் ஓட்டம், யானைக்கு கண் வைத்தல், கயிறு இழுத்தல் என பல போட்டிகள் நடைபெறவுள்ளன. (க)

# காணாமல் போனோர் விவ...

உளவுப் பிரிவின் பணிப்பாளர் கப்டன் ஹேவகேயும் நன்கு அறிந்திருந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டுள்ளது.

குறித்த வான் புகைப்படமெடுக்கப்பட்டு கடற்படை தளபதி வசந்த கரணகொடவுக்கும் கப்டன் ஹேவகேக்கும் வெலிசறை முகாம் அதிகாரிகள் அனுப்பியுள்ள நிலையில் அதனை தாம் பார்த்துக்கொள்வதாக கரணகொட தெரிவித்த நிலையிலேயே வானானது இவ்வாறு துண்டுதுண்டுகளாக பிரிக்கப்பட்டு இரகசிய அறையில் பூட்டி வைக்கப்பட்டிருந்துள்ளது.

இது தொடர்பில் நேற்றுமுன்தினம் கொழும்பு மேலதிக நீதிவான் நிசாந்த பீரிஸுக்கு அறிக்கை சமர்ப்பித்த சிறப்பு விசாரணை அதிகாரி நிஸாந்த சில்வா தெரிவித்ததாவது,

கனம் நீதிவான் அவர்களே, மேற்படி கடத்தப்பட்ட இருவரும் பயங்கரவாத செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறியே கடத்தப்பட்டுள்ளனர். இது தொடர்பில் நாம் விசாரணை செய்தோம். அனைத்து உளவுப் பிரிவுகளிடமும் மேற்படி கடத்தப்பட்ட இருவர் தொடர்பிலும் அறிக்கை கோரினோம்.

கடற்படை மற்றும் விமானப் படை தவிர்ந்த ஏனைய உளவுப் பிரிவுகளின் அறிக்கை எமக்கு கிடைத்துள்ளன. அந்த அறிக்கைகள் மேற்படி இருவரும் எவ்வித பயங்கரவாத தொடர்புகளையும் கொண்டிருக்கவில்லை என்பதை உறுதி செய்துள்ளன.

இந்த கடத்தல் தொடர்பில் ஆரம்பத்தில் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவினரே விசாரணை செய்துள்ளனர். அந்த பிரிவின் உப பொலிஸ் பரிசோதகர் விஜேசிங்கவை விசாரணை செய்தோம்.

அவரே இக்கடத் தல் தொடர்பில் விசாரணை செய்த விசாரணை அதிகாரி. அவர் சரியாக விசாரணை முன்னெடுக்க விடாது அப்போது அவரது உயரதிகாரியாக இருந்த அனுர சேனாநாயக்க இடையூறு செய்துள்ளமை அந்த விசாரணையில் தெரியவந்தது.

இந் நிலையிலேயே நாம் கடத்தப்பட்டவர்களின் கையடக்கத் தொலைபேசிகள் தொடர்பில் விசாரணை செய்தோம்.

இக்கையடக்கத் தொலைபேசிகள் ஏற்கெனவே கைப்பற்றப்பட்ட நிலையில் அதில் ஒன்று கடற்படை தளபதியின் பெயரிலும் மற்றையது லெப்டினன் கொமாண்டர் தயாரத்னவின் பெயரிலும் பதிவாகியிருந்தன.

அப்போது கடற்படை தளபதியாக வசந்த கரணகொடவே செயற்பட்டுள்ளார். கடத்தப்பட்டோரது விபரங்கள், கடத்தல் மற்றும் அவரது வான் துண்டாக்கப்பட்டு மறைக்கப்பட்டமை உள்ளிட்ட அத்தனை விடயங்களையும் வசந்த கரணகொடவும் கப்டன் ஹேவகேயும் அறிந்திருந்துள்ளனர். அவர்களுக்கு வானின் புகைப்படம் காண்பிக்கப்பட்டுள்ளது.

இதனைவிட கடத்தப்பட்ட இரு தமிழர்களும் அணிந்திருந்த ஆபரணங்களும் அவர்களது உடைமைகளும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

இதற்கும் கடற்படை புலனாய்வுப் பிரிவினருக்கும் நெருங்கிய தொடர்பிருக்கின்றது.

சம்பவத்தில் குற்றத்துடன் தொடர்புடையோர் தொடர்பில் வெளிப்படுத்தப்படும் தகவல்களின் படி சந்தேக நபர்களை விரைவில் கைதுசெய்வோம் என்றார்.

இந் நிலையில் இது தொடர்பிலான அடுத்த கட்ட விசாரணைகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 24 ஆம் திகதி இடம் பெறுவதாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (செ-4)

# சபை அமர்வில் ஆடையால் சங்கடம்

(கொழும்பு)

சபைக்கு பொருத்தமில்லாத ஆடை அணிந்து வந்த பதுளை மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் அரவிந்தகுமார், சபையில் இருந்து வெளியேறினார்.

சபை உதவியாளர் அவருடைய ஆடை குறித்து தெரியப் படுத்திய சில நிமிடங்களில் அவர் சபையில் இருந்து உடனடியாக வெளிச்சென்றார். குழுக்களின் பிரதித் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது.

வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் சபையில் நுழைந்த போதே அவர் வெளியேற நேரிட்டது.

செவ்விளநீர் (ஒரேஞ்ச்) நிறத் திலான சேட்டும், கறுப்பு நிறத்தி லான சாரத்தையும் அணிந்திருந்த வாறு சபைக்குள் வந்த அவர் ஆச னத்தில் அமர்ந்திருந்தார்.

இதனை அவதானித்த சபை உதவியாளர் அவரை நோக்கி விரைந்து சென்று ஆடை குறித்து நினைவுபடுத்தினார். அதன் பின்னர் தவறை உணர்ந்து கொண்ட அரவிந்த குமார் விரைவாக சபை யில் இருந்து வெளியேறிச் சென்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோர்ட் சூட் அல்லது வெள்ளை நிற குருத்தமா மற்றும் வேட்டி அணிந்து சபைக்குள் நுழையவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ)

# இரு சடலங்...

செல்வராசா (வயது 38) அவரது வீட்டில் நேற்று மதியம் ஒரு மணியளவில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதேவேளை யாழ்ப்பாணத்தினை சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயான பரமநாதன் லட்சுமி (வயது 35) நேற்று மதியம் 1.30 மணியளவில் அவரது வீட்டில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி இரு சம்பவங்கள் தொடர்பிலும் அந்தந்த பொலிஸ் பிரிவில் முறைப்பாடு பதியப்பட்டதனை தொடர்ந்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

சடலமாக மீட்கப்பட்ட இருவரினதும் உடலங்கள் பிரேதப்பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-30)

# மகேந்திரன்...

தனது தனிப்பட்ட தேவைக்காகவே வெளிநாடு சென்றிருப்பதாக முகப்புத்தகத்தில் பதிவிட்டிருப்பதன் ஊடாக நான் அறிந்துகொண்டேன்.

மீண்டும் தாம் நாடு திரும்ப விருப்பதாகவும் அதில் அவர் கூறியிருக்கின்றார். பிழை செய்துவிட்டு எங்கிருந்தாலும் எவரையும் பாதுகாப்பதற்கு எமக்கு அவசியமில்லை.

அர்ஜுன் மகேந்திரன் வெளிநாடு சென்றிருப்பதால் அவரை பாதுகாப்பதற்கும் எமக்கு அவசியமில்லை. அவர் தவறு இழைத்திருந்தால் சட்டத்திற்கு முன் அவர் நிறுத்தப்பட வேண்டும். அரசாங்கம் என்ற வகையில் திருடர்களைப் பாதுகாக்கும் நோக்கத்தில் நாங்கள் இல்லை.

இதேவேளை முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்கட்சியுடன் இணையப்போவதாக வெளியாகிவரும் தகவல்கள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் இதன்போது கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் நான் ஒருபோதும் ஒன்றிணைந்த எதிர்கட்சி எனக் கூறித்திரியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சில நண்பர்களுடன் கரம்கோர்ப்பதில்லை.

கட்சியில் முரண்பட்டுக்கொண்டால் அதிலிருந்து விலகி சுயாதீனமாக செயற்படுவேனே தவிர வெளியேறிச்செல்ல மாட்டேன் என்றார். (செ)

# எம் மக்களுக்கான வெளிச்...

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நல்லாட்சி அரசாங்கத்தில் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வொன்று கிடைக்குமென்ற நம்பிக்கை இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், இந்து மத அலுவல்கள் அமைச்சு மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அலரி மாளிகையில் நேற்று வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற தேசிய தீபாவளிப் பண்டிகையில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே சம்பந்தன், மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் ஆக்கபூர்வமான நகர்வின் வெளிப்பாடே இத்தகைய தேசிய பண்டிகையாகும். இதனை நாங்கள் நல்லுள்ளத்துடன் வரவேற்கிறோம்.

தற்போதைய நல்லாட்சியில் எம் மக்களுக்கான வெளிச்சம் தென்படத் தொடங்கியிருக்கிறது. அடுத்த முறை தீபாவளிக்கிடையில் இவ் வெளிச்சம் நிரந்தரமானதாக அமையுமென்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது எனவும் இரா.சம்பந்தன் மேலும் குறிப்பிட்டார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க் கட்சித் தலைவரின் எதிர்பார்ப்பு கூடிய சீக்கிரம் நிறைவேறும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது எனத் தெரிவித்தார். (செ-11)

# பிரதமர் ரணில் அர்ஜுன்...

மன்றத்தில் சமர்பிக்கப்பட்டுள்ள நிலையில் மத்திய வங்கியின் பிணை முறி மோசடி விவகாரத்தில் சிக்கியுள்ள முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் மற்றும் அதற்குத் துணைசென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் நாட்டு மக்களே தீர்மானம் எடுக்க வேண்டும் என்றும் அந்தக் கட்சி குறிப்பிடுகின்றது.

ஒன்றிணைந்த எதிர்கட்சியின் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றைய தினம் நாடாளுமன்றக் கட்டிடத் தொகுதியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் கூறுகையில், முதலில் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனின் நியமனமானது அரசியல் யாப்பு சபையின் அனுமதியின்றி மேற்கொள்ளப்பட்டது. அவர் முறையாக பதவியேற்கவில்லை. இது நடைமுறையாப்பிற்கு எதிரானது. இது திட்டமிடப்பட்ட ஒரு கொள்ளைச் சம்பவம். இதில் சந்தேகம் இல்லை. இது தவறுதலாகவோ தெரியாமலோ நடந்த விடயமல்ல.

ஜனவரி 8 ஆம் திகதி ஜனாதிபதி பதவியேற்கின்றார், 9 ஆம் திகதி பிரதமர் பதவியேற்கின்றார். ஒருசில தினங்களில் மத்திய வங்கி பிரதமரின் கட்டுப்பாட்டிற்குள் வருகிறது. இந்த நாட்டின் பிரஜையல்லாதவர் ஆளுநராக பதவியேற்கின்றார். நல்லாட்சி அரசாங்கம் தற்போது நான்முனை சந்தியில் ஆடையின்றி நிற்கின்றது. நல்லாட்சிலேபலை ஒட்டிக்கொண்டுதான் ஊழலில் ஈடுபட்டனர். கடந்த 40 வருட அரசியல வாழ்வில் இரண்டு விடயங்கள ஊடாகவே பயணிக்கின்றார். ஒன்று பொருளாதாரத்தை மிகவிரைவாக அபிவிருத்தி செய்வதாக கூறுவார். மூன்று முறை பிரதமரானார் என்ன நடந்தது என்று உங்களுக்குத் தெரியும்.

இரண்டாவது காரணம் கொலைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுகள் அவர் மீது இருந்தது. எனினும் அவர் ஒரு நாளும் ஊழலில் ஈடுபடமாட்டார் என நீங்கள் தெரிவிக்கலாம். எனினும் இந்த மிகப்பெரிய கொள்ளையுடன் மக்கள் ஒரு தீர்மானத்திற்குவர முடியும். இது தவறுதலாக நடந்த விடயமல்ல. நாங்கள் கொள்ளையர்கள் என தொடர்ச்சியாக கூறி வருகின்றோம்.

எனினும் இதுவரை நிரூபிக்கப் படவில்லை. எனினும் அவருடன் இணைந்திருக்கும் அர்ஜுன் மகேந்திரன் கொள்ளையில் ஈடுபட்டுள்ளமை உறுதியாகியுள்ளது. ஆகவே இது தொடர்பில் மேலும் சிந்திக்க வேண்டிய அவசியம் இல்லை. வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய கொள்ளையே இது என்றார் கெஹலிய. (செ-11)

# பங்குச்சந்தை மீதான...

பட்டுள்ளமை நாட்டின் பொருளாதாரத்திற்கு ஏற்பட்டுள்ள பாரிய சவாலாகும்.

எனவே நாடாளுமன்றத்தில் புதிய சட்டங்களை நிறைவேற்றியாவது இடம்பெற்ற முறைகேடுகளுக்கு நியாயம் பெற்றுத்தர வேண்டும் என விஞ்ஞான தொழில்நுட்ப ஆராய்ச்சி அமைச்சர் சுசில் பிரேமஜந்த தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமையகத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே அமைச்சர் சுசில் இதனை தெரிவித்தார்.

பங்குச்சந்தை மீதான நம்பிக்கையின்மை காரணமாக முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய தயங்குவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் நிரபராதியாகவோ அல்லது குற்றவாளியாகவோ எவ்வாறு நிரூபிக்கப்படினும் அது பங்குச் சந்தை மீதான நம்பிக்கையை மென்மேலும் இழக்கச் செய்யும் என சுட்டிக்காட்டிய அமைச்சர், சம்பவங்களை ஆராய்ந்து உண்மை நிலையை கண்டறிவதற்காக விசேட ஆணைக்குழு வொன்று நிறுவப்பட வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இதேவேளை, அரச நிறுவனங்களின் வெற்றியும் தோல்வியும் முகாமைத்துவத்திலேயே தங்கியிருப்பதால் அனைத்து நிறுவனங்களும் வலுவுடையும் வகையில் முகாமைத்துவம் மறுசீரமைக்கப்படல் வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

இச் செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரிவித்த அமைச்சர் தயாசிறி ஜயசேகர, அரசாங்கத்துடன் தொடர்புபட்ட 19 நிறுவனங்களில் 5 நிறுவனங்களால் மட்டும் இது வரை 30 ஆயிரம் கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டிருப்பதாகவும் இவையனைத்தும் ஒரே முகாமைத்துவத் தன் கீழ் ஒழுங்குபடுத்தப்படவேண்டுமெனவும் அவர் கூறினார்.

இதேவேளை, திறைசேரி முறிகள் கொள்வனவின் போது முன்னாள் மத்திய வங்கி ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனும் அவரது மருமகனும் இணைந்து முறைகேடுகளை கையாண்டுள்ளனர்.

இவர்களுக்கு முன்பும் இதே பதவியிலிருந்தவர்கள் முறைகேடான வழிகளிலேயே முறிகளை கொள்வனவு செய்துள்ளனர் என குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ)

# விவசாய நிலங்களை...

ஆம் ஆண்டு இடம்பெயர்ந்து வேறு பகுதிகளில் மீள்குடியேறிய நிலையில் அவர்கள் தமது காணிகளில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாத நிலை காணப்பட்டது.

குறித்த விவசாயிகளின் காணிகளை கடற்படையினர் கையகப்படுத்தி வைத்துள்ள நிலையில் தமது சொந்த இடங்களுக்கு மீள் குடியேறும் மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட முடியாத நிலை காணப்படுகின்றது.

இது தொடர்பாக கைத்தொழில், வர்த்தகத்துறை அமைச்சர் ரிஷாட் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு சுட்டிக்காட்டியிருந்த நிலையில் மறிச்சுக்கட்டி, பாலைக்குழி மக்களின் காணிகளை விடுவிப்பதற்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மக்கள் செறிந்து வாழும் சிலாவத்துறைக் கிராமத்தின் மத்தியில் அமைக்கப்பட்டுள்ள கடற்படை முகாமை அகற்றுவது தொடர்பான செயற்பாட்டை பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளரிடம் ஒப்படைத்த பாதுகாப்புச் செயலாளர், இது தொடர்பிலான உரிய அறிக்கை ஒன்றினை தமக்குச் சமர்ப்பிக்குமாறு தெரிவித்தார்.

அதேவேளை, மன்னார் நகரின் நுழைவாயிலுக்கு அருகில் அமைந்துள்ள கூட்டுறவுத் திணைக்களத்துக்குச் சொந்தமான கட்டடத்தில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரை வெளியேற்றுமாறும் இந்த சந்திப்பில் அமைச்சர் ரிஷாட் பதியூதின் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதனை ஏற்றுக்கொண்ட பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், தனது அமைச்சின் மேலதிக செயலாளரைக் கொண்ட அதிகாரிகளின் குழுவொன்றை நியமித்து அது தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

இந்தச் சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், உதவிச் செயலாளர்கள், வன பரிபாலனத்திணைக்கள பிரதிப் பணிப்பாளர் மகிந்த செனவிரத்ன, முசலிப் பிரதேச செயலாளர் கேதீஸ்வரன், மற்றும் இராணுவ உயரதிகாரிகளும் பங்கேற்றிருந்தனர். (செ-11)

## ஜி.கே.வாசன்...

திற்கு உரியது எனவும் இது இலங்கை வாழ் தமிழர்களுக்கு அச்ச உணர்வையும். பாதுகாப்பற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளதாகவும் ஜி.கே.வாசன் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இலங்கை அரசுடன் இந்திய மத்திய அரசாங்கம் தொடர்பு கொண்டு இந்த சம்பவத்திற்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கைஎடுக்கவேண்டும் என அவர் தனது அறிக்கையில் வலியுறுத்தியுள்ளார். (செ-11)

## ஐரோ.ஒன்...

மற்றும் பொருளாதாரத் துறை என்பவற்றை ஆராய்வதுடன், இலங்கைக்கு ஜீ.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்குவதற்கான சூழ்நிலை நாட்டில் காணப்படுகின்றதா என்பதையும் இக்குழு ஆராயவுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-11)

## காணாமல்...

வடிவேல் பக்கிளி சாமி லோகநாதனின் கையடக்கத் தொலைபேசியில் லெப்டினன் கொமாண்டர் தயாநந்தவின் பெயரில் இருந்த சிம் அட்டையும் கடத்தலின் பிற்பட்ட காலப்பகுதியில் பயன்படுத்தப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனைவிட கடத்தப்பட்டு காணாமல ஆக்கப்பட்டுளள மேற்படி நபர்களில் ஒருவர் பயணித்த வானானது 72 துண்டுகளாக பிரிக்கப்பட்ட நிலையில் வெலிசறை கடற்படை முகாமின் இரகசிய அறையில் இருந்து மீட்கப்பட்டுள்ள நிலையில், அவ்வானானது அங்கு இவ்வாறு ஒழித்து வைக்கப்பட்டமையை அப்போதைய கடற்படை தளபதி வசந்த கரணகொடவும்

31 ஆம் பக்கம் பார்க்க....


அமெரிக்க அதிஷ்ட விசா



ஒரு சாதாரண முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!

இலவசமாக அமெரிக்கா போகலாம்

3 விரையுங்கள் - இன்னும் நாட்களே உள்ளன

V2 Travels

0768226230

2018 ல் உங்கள் தீபாவளியை அமெரிக்காவில் கொண்டாடுங்கள்

விசா பெற்றவர்களின் விபரம் எமது அலுவலகங்களில்

V2 Travels இல்லாவிட்டால் குடும்பத்துடன் அதுவும் இலவசமாக அமெரிக்காவில் குடியேறும் சந்தர்ப்பம் எனக்கு கிடைத்திருக்கவே மாட்டாது. V2 Travels க்கு எனது நன்றிகள்.



ஞானதீபன் குடும்பம்

அமெரிக்க விசா வெற்றியாளர்கள்

| யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை |
|---|---|---|---|---|
| 0768226241 | 0768226240 | 0776699892 | 0768226237 | 0776697960 |



தீபாவளி கொண்டாடும் அனைத்து உள்ளங்களுக்கும் தித்திக்கும் தீபாவளி நல் வாழ்த்துக்கள்



DIWALI SPECIAL OFFER

Buy 1 Get 1 FREE

05.11.2016 வரை

Delivery | Take away | Dine in

எந்தவொரு Large Pizza வாங்கும் போதும் Small Pizza ஒன்று இலவசம்

11 ELEVEN PIZZA

128, Palaly Road, Jaffna.

(Next to Parameswara Junction)

Call 021 221 6700 077 744 4225

(வி-6292)



### பணியாளர் தேவை

**பக்க வடிவமைப்பாளர்** Photoshop, CoralDraw, Indesign, **அச்சு இயந்திர இயக்குனர்** (Kora Kord), **புத்தகம் கட்டுனர்** (Binder) அனுபவமுள்ளவர்கள் தங்களது சுயவிபரங்களுடன் திங்கள், செவ்வாய் 2.30 - 4.30 வரை நேரில் சமூகமளிக்கவும்.

ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ்

இல.555 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தொடர்புகளுக்கு : T.P :0214545044

(வி-6300)


## 1-வது பிறந்த நாள் வாழ்த்து



### செல்வன் சி.அபிலாஷ்

அரியாலை கலைமகள் வீதியைச் சேர்ந்த திரு.திருமதி சிவானந்தன்-சுகந்தினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் அபிலாஷ் தனது 1ஆவது பிறந்த நாளை 29.10.2016 சனிக்கிழமை (இன்று) பி.ப 5.00 மணியளவில் தியாகி அறக்கொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பம்மா, அப்பா, அம்மா, அத்தைமார், மாமன்மார், சித்தப்பா மற்றும் மச்சாள், மச்சான் ஆகியோர் அரியாலை வெட்டுக்குளம் புவனேஸ்வரி அம்பாளின் அருள்பெற்று சீரும் சிறப்புடன் நீடூழி காலம் வாழவேண்டுமென வாழ்த்துகின்றனர்.

**தகவல்:-**

**ஆ.செல்வநாதன் குடும்பத்தினர்**

**அரியாலை எரிபொருள் நிரப்பு நிலையம்.**


Are you looking for ideal printing works ?

We Print Miracles

Logos



Visiting Cards



Leaflets



Lables



Boxes & Packaging



Digital Name Boards



Vehicle Brandings



Sticker Cutting



Print & Cut

உங்கள் தேவைகளை
எமது தேர்ச்சி மிக்க வடிவமைப்பாளர்களால்
உங்களுக்கென்று தனித்துவமாக வடிவமைத்து
எமது உயர்தர பிறிண்டிங் சேவையினை
பெற்றுக் கொள்ளுங்கள்.

ideas PRINTERS

936A, K.K.S Road, Naachimar Kovilady, Jaffna.

021 222 7788 / 077 636 6860


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.